

KALKI 17.3.2002
ரூ. 6.00

வைரவிழா ஆண்டு

கல்கி



பெண்மைக்கு அபாயம்!



எனக்கு இடுப்பு வலி இருந்தது
இடுப்பு வலி, அது பழைய கதை. ஏன்னா, நான் ஜண்டு பாம் தடவறேன். இது உடனே எனக்கு ஆறுதல் தருது. ஜலதோஷம், தலைவலி இரண்டையும் ஜண்டு பாம் உடனே போக்கிடுது.
ZANDU BALM
பாம் ஒன்று. செயல் மூன்று.
www.zanduayurveda.com
SAATCHI & SAATCHI-5/2002 M TAM

www.kalkiweekly.com
இ-மெயில் : kalkiweekly@vsnl.com



"குழந்தைகளை அப்பா கொஞ்ச வேண்டும். பிறந்த அரை மணி நேரத்துக்குள் அப்பா குழந்தையைத் தூக்கிக் கொள்ள வேண்டும். சட்டையைக் கழற்றி விட்டு மார்போடு அணைத்துக் கொள்ள வேண்டும். அப்பாவின் உடல் வாசனையைக் குழந்தை அனுபவிக்க வேண்டும்."

தாய்ப்பால் சாப்பிட்டால் குழந்தை குண்டாக இருக்குமா?

பக்கம் 52

பாபா

ரஜினியிடம் சொல்லாத கதை

பக்கம் 88



வெற்றி ரகசியம்!



• கிரென் கெரா



• ஷிவ் கெரா

"எந்த விஷயமானாலும், நானோ, அவரோ முடிவெடுப்பதில்லை. நாங்கள் முடிவெடுக்கிறோம். இதுதான் எங்களுடைய முப்பதாண்டு கால திருமண வாழ்வின் வெற்றி ரகசியம்" என்கிறார் கிரென் கெரா. அகில உலக அளவில் ஐந்து லட்சம் பிரதிகள் விற்பனையாகியுள்ள 'யூ கேன் வின்' புத்தகத்தை எழுதிய ஷிவ் கெராவின் மனைவி இவர். இந்தப் புத்தகத்தின் தமிழாக்கமான 'உங்களால் வெல்ல முடியும்' வெளியீட்டிற்காக (மாக்மில்லன் வெளியீடு) சென்னை வந்திருந்த கிரென் கெராவைச் சந்தித்தோம்.

'என் வெற்றிக்காக, தன் முழுமையான ஒத்துழைப்பை அளிக்கும் பெண்மணி' என்று பெருமையுடன் தன் மனைவி பற்றிக் குறிப்பிடுகிறார் ஷிவ் கேரா.

"எனக்கு ஆதர்சமனிதரே என் கணவர்தான்! எங்களுக்குத் திருமணமாகி முப்பது வருடங்களாகி விட்டன. இரண்டு பெண்கள் இருக்கிறார்கள். திருமண வாழ்க்கையில் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் கனடா, அமெரிக்கா என்று வாழ்ந்து விட்டோம். ஆனாலும் அவருக்கு இருக்கும் தாய்நாட்டுப் பற்று என்னை அதிசயிக்க வைக்கிறது. வாழ்க்கையில் பல ஏற்ற இறக்கங்களை நாங்கள் பார்த்திருக்கிறோம்.

"பெற்றோர்கள் பார்த்து, ஏற்பாடு செய்த திருமணம் எங்களுடையது. அவர் குடும்பத்துக்குச் சொந்தமாக நான்கு நிலக்கரிச் சுரங்கங்கள் இருந்தன. ஆனால் எங்கள் திருமணமான நாலாவது வருடம், அவற்றை அரசாங்கம் எடுத்துக்கொண்டு விட்டது. அதனால் அவர் தளர்ந்து போய்விடவில்லை.

"இன்றைக்கு லட்சக்கணக்கில் விற்கும், 'யூ கேன் வின்' புத்தகத்தின் கையெழுத்துப் பிரதியை, நூற்றுக்கும் அதிகமான பிரசுரத்தினர், இதைப் புத்தகமாகப் போட்டால் விற்காது என்று திருப்பி அனுப்பினார்கள். அப்போதும் அவர் தளர்ந்துவிடவில்லை. முழுமையான ஈடுபாட்டுடன், எதைச் செய்தாலும், அது நிச்சயம் வெற்றி அடையும் என்பது அவரது பாலிசி."

"வெற்றிகரமான குடும்ப உறவுக்கு உங்கள் டிப்ஸ்?"

"கருத்து வேறுபாடு என்பது சகஜமான ஒன்று. அதில் ஈகோ நுழைவதால்தான் விளைவு விபரீதமாகி விடுகிறது. எது நல்லது? எது சரி என்பதைச் சரியான கோணத்தில் பார்க்கிற பார்வையை அது தடுத்துவிடுகிறது. எனவே, கருத்து வேறுபாடு ஏற்படுகிறபோது, ஈகோவைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, அடுத்தவர் சொல்லுவதைத் திறந்த மனத்துடன் கேட்க வேண்டும். அது ஒரு தெளிவு ஏற்படுத்தும். இது, சம்மந்தப்பட்ட இரண்டு பேருக்குமே பொருந்தும்.

சந்திப்பு: **மௌலி**
படங்கள்: **யோகா**

பேபி அமைச்சர்!

தமிழக சுற்றுலாத்துறை அமைச்சராகப் பதவியேற்றிருக்கும் மில்லருக்கு வயது 47. ஆனாலும் இவர்தான் அமைச்சரவையின் பேபி!

கூடலூர் சட்டமன்ற உறுப்பினரான அமைச்சரைக் கெஸ்ட் ஹவுஸில் சந்தித்தபோது அவர் சொன்ன முதல் வார்த்தை: "நான் 'கல்கி'யின் நீண்ட கால வாசகன்; குறிப்பாக அமரர் கல்கியின் சரித்திரக் கதைகள் எனக்கு மிகவும் பிடிக்கும்."

மில்லரின் முன்னோர்கள் நெல்லை மாவட்டம் ராஜகிரியைச் சேர்ந்தவர்கள். அமைச்சரின் அப்பா தோட்டத் தொழிலாளியாக கூடலூர் ராக்ஹுட் எஸ்டேட்டில் பணி புரிந்தவர். பள்ளிப்படிப்பு கூடலூரில் முடித்து, தபாலில் பட்டப் படிப்பை முடித்தார். "தோட்டத் தொழிலாளி ஒருவர், தன் மகனும் தோட்டத் தொழிலாளியாகப் பணியாற்றுவதைக் கொஞ்சம்கூட விரும்ப மாட்டார். என் தந்தையும் ஒரே மகனான நான், படித்து முடித்து விட்டு, வெளியில் வேலை செய்வதையே விரும்பினார். ஆனால் நான் வியாபாரத்தில் இறங்கி விட்டேன். சிறு வயதிலிருந்தே எம்.ஜி.ஆர் ரசிகனாக இருந்தேன். 1972ல் கட்சி துவங்கியபோது, உடனடியாக அதில் சேர்ந்துவிட்டேன்."

நீலகிரி மாவட்டத்துக்கு அமைச்சரவையில் இடம் கொடுக்கப்பட்டது இதுவே முதல் முறையாம். அது தவிர, கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருவர் வெற்றி பெற்றதும் இப்போதுதானாம்.

"அம்மா நீலகிரி மாவட்டத்துக்கு நிறைய செய்யணும்னு நினைக்கறாங்க. குறிப்பாக ஆட்சிக்கு வந்தவுடனேயே வேதனையில் இருந்த தேயிலை விவசாயிகளுக்கு உதவும் விதத்தில் தேயிலையை அரசே கொள்முதல் செய்து பொதுவிநியோக மையங்களில் விற்பனை செய்தது. முதலில் 50 டன் என்ற அளவில் துவங்கி இன்று 270 டன் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. தமிழகத்தில் சுற்றுலா மையங்களில் முக்கியமானது உதகை. இன்னமும் பல வசதிகள் செய்து கொடுத்து சுற்றுலாப் பயணிகளைக் கவர வேண்டும்."

கட்சியில் மாவட்டத் துணைச் செயலாளராகவும் இருக்கிறார் மில்லர். 19962001 கால கட்டத்தில் மூன்று முறை சிறை சென்றிருக்கிறார். "தமிழகத்தின் எல்லையில் இருப்பதால் கூடலூர் தொகுதி ஒதுக்கப்பட்டதாகவே இருந்து வந்திருக்கிறது. தாலுகாவில் ஒரு கல்லூரிகூட இடையாது. முதலில் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பிறகு கூடலூர்-சத்தியமங்கலம் சாலையைப் போக்குவரத்துக்கு ஏற்றபடி மேம்படுத்த வேண்டும்" என்று தமது முன்னுரிமைகளைப் பட்டியலிடுகிறார். அமைச்சருக்கு இரண்டு மகன்கள்; ஒரு மகள், மனைவி: அனுசுயா தேவி.

பதவியேற்றவுடனேயே சுறுசுறுப்பாக செயல்படத் துவங்கி விட்டார். தூங்கி வழிந்து கொண்டிருக்கும் சுற்றுலாத் துறை ஓட்டல்களுக்கு ஒரு ஷாக் கொடுத்து அவற்றை customer-friendly ஆக செயல்படுத்த முனைந்துவிட்டார் அமைச்சர் மில்லர்!

சந்திப்பு :
ஸ்ரீநிவாசன்

படம் :
ராஜன்



பெண்மைக்கு அபாயம்!

சிறையில் இருக்கும் நக்கீரன் நிருபர் சிவசுப்பிரமணியனின் மனைவி ஜெயந்தி, கடந்த மாதம் சென்னை பத்திரிகையாளர் மன்றத்தில் சொன்ன செய்திகள் நிருபர்களை அதிர்ச்சியடைய வைத்தன. பெண்ணுரிமை இயக்கங்களும், மனித உரிமை ஆர்வலர்களும் "போலீஸ் ராஜ்யம், தனது முக்காட்டை விலக்கி முகம் காட்டத் துவங்கி விட்டதே" என்று கொதித்தார்கள்.

"நவம்பர் மாதம் 23ம் தேதி காலை எட்டு மணி இருக்கும். பவானி டி.எஸ்.பி. ஜோஷி நிர்மல் குமார் தலைமையில் அறுபது பேர் கொண்ட போலீஸ் படை வீட்டை முற்றுகையிட்டது. என்ன, ஏதுன்னு விசாரிப்பதற்குள் காலில் பூட்ஸுடன் வீட்டிற்குள் நுழைந்து விட்டார்கள். சிறையில் இருந்து என் கணவரையும் அழைத்துக் கொண்டு வந்தார்கள். 'சோதனை போடப் போகிறோம்' என்றவுடன் சர்ச் வாரண்ட் இருக்கிறதா? என்று கேட்டபோது 'உன்னிடம் காட்ட வேண்டிய அவசியம் இல்லை'ன்னு சொல்லிவிட்டார்கள். சோதனை என்ற பெயரால் வீட்டிலிருந்த பொருட்களைத் தாறுமாறாக அள்ளிப் போட்டார்கள். டேப்ரிக்கார்டரைத் தூக்கிப் போட்டு உடைத்தார்கள். ஒரு புத்தகம் விடாம எல்லாவற்றையும் கலைத்துப் போட்டார்கள். சமையல் அறையில் புகுந்து துவம்சம் செய்தாங்க. தூங்கிக் கொண்டிருந்த என் தங்கையின் மூன்று வயது குழந்தை சுவாதியின் ஆடைகளையும் கலையச் செய்தது மிகக் கொடூரமாக இருந்தது. மேலும் குழந்தை நக்கீரனின் தொட்டிலை வேண்டுமென்றே பலமுறை ஆட்டி அவனை அழ வைத்தார்கள். ஏதாவது பொருளை வைத்துவிட்டுப் சோதனையில் அதை எடுத்ததாகச் சொல்லிவிடப் போகிறார்களே என்று பயம் வந்து விட்டது. "ஸார்... நீங்க எதை எடுத்துட்டுச் சென்றாலும் என்னிடம் காண்பித்து விட்டு எடுத்துச் செல்லுங்கள்" என்று டி.எஸ். பி.யிடம் சொன்னேன். உடனே அவர் அங்கிருந்த பெண் போலீஸாரிடம், நீங்கள் எதற்கு வந்தீர்கள்! உடனே அவங்களைச் சோதனை போடுங்க'என்று மோசமான வார்த்தையில் சொன்னார். உடனே அந்தப் பெண்

• குழந்தையுடன் ஜெயந்தி...



போலீஸார், என்னுடைய மற்றும் என் அம்மா, தங்கை ஆகியோரது சேலையை உருவியும், உள்ளாடைகளைக் களைந்தும் அவமானப்படுத்தினார்கள்..." என்று கையில் குழந்தையோடும், கண்களில் அருவியாக வழியும் கண்ணீரோடும் சொன்னார் ஜெயந்தி.

பத்திரிகையாளர்களைச் சந்தித்துவிட்டு ஊருக்குச் சென்ற ஜெயந்தி, அவரது அம்மா, தங்கை, நடக்க முடியாத அவரது மாமனார் பெரியசாமி ஆகியோர் மீது மூன்று பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்து கைது செய்ய முனைந்து விட்டது போலீஸ். சென்னை உயர்நீதி மன்றத்தின் தலையீட்டால் கைது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. "எந்தவிதமான மனித உரிமை மீறலும் நடக்கவில்லை. முறையான சர்ச் வாரண்டுடன் சென்றுதான் சோதனை செய்தோம். சோதனையில் வீரப்பன் சம்பந்தப்பட்ட பல முக்கியமான ஆவணங்கள் கிடைத்தன. சோதனை நடவடிக்கை முழுவதையும் வீடியோ படம் எடுத்திருக்கிறோம்" என்று ஓர் அறிக்கையில் சொன்னார் கோவை பகுதி காவல் துணைத் தலைவரான அஷுதோஷ் சுக்லா.

"போலீஸாரின் முழு நடவடிக்கையும் அத்து மீறல் தான் என்பதில் சந்தேகமில்லை. வழக்கறிஞர் மற்றும் பத்திரிகையாளர்களைக் கூட அப்போது அனுமதிக்கவில்லை போலீஸ். பத்திரிகையாளர்களிடம் விஷயத்தைப் போட்டு உடைத்து விட்டார் என்பதற்காகவே ஆத்திரப்பட்டு மூன்று பிரிவுகளில் கேஸ் போட்டிருக்கிறார்கள். இதில் 147வது பிரிவு, சட்டவிரோதமாக கூட்டம் கூடுவது. ஜெயந்தியின் வீட்டில் அந்த சமயத்தில் அவரது குடும்பத்தினர் தவிர வேறு யாரும் இல்லை. ஐந்து பேர்களுக்கு மேல் அனுமதி இல்லாமல் கூடினார்கள் என்றால் சட்ட

நடந்தவை....



20.11.2001 : சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுகா, விநாயகபுரத்திலுள்ள தமது வீட்டிலிருந்து வெளியே வரும்போது கர்நாடக மாநில அதிரடிப் படையால், ஜீப்பில் ஏற்றப்பட்டு, மைசூர் மாநிலம், குத்தல் அணையிலுள்ள அதிரடிப்படை முகாமுக்குக் கொண்டு செல்லப்படுகிறார் சிவசுப்பிரமணியன்.

21.11.2001: 36 மணி நேரத்துக்குப் பிறகு கொள்ளேகால் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுகிறார். கொங்கன்னாகடவு காட்டில் காமிரா, பெண்டார்ச், ரேஷன் கார்டு, டிரைவிங் லைசென்ஸ் ஆகியவற்றுடன் வீரப்பனைச் சந்திக்கச் சென்று கொண்டிருக்கும்போது பிடிபட்டதாக ராம்புரா காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

23.11.2001: ஜாமீனில் வெளிவந்து விடக்கூடாது என்பதற்காக 'காட்டில் ஆயுதங்களைப் பதுக்கி வைத்திருந்தார்' என்று மற்றொரு வழக்கும் போடப்படுகிறது. இந்த வழக்கு சாம்ராஜ் நகர் கிழக்கு போலீஸ் ஸ்டேஷனில் பதிவு செய்யப்படுகிறது.

12.12.2001: முதலில் போடப்பட்ட வழக்கில் ஜாமீன் கிடைத்தாலும் இரண்டாவதாகப் போடப்பட்ட ஆயுத வழக்கில் ஜாமீன் கிடைக்க கர்நாடக உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்படுகிறது. இதற்கிடையில் வெள்ளித்திருப்பூர் காவல் நிலைய தாக்குதல் வழக்கில் சிவசுப்பிரமணியனை ஈரோடு போலீஸ் கைது செய்கிறது

20.12.2001: சிவசுப்பிரமணியத்தின் உயிருக்கு ஆபத்து இருப்பதால், தமிழக போலீஸின் வேண்டுகோளின்படி, அவரை பவானி நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்ல அனுமதி மறுத்தது சாம்ராஜ்நகர் நீதிமன்றம்.

21.12.2001: நீதிமன்ற உத்தரவை மீறி, பவானி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுகிறார் சிவசுப்பிரமணியன். ஆறுநாள் போலீஸ் காவலில் வைக்க அனுமதி கொடுக்கிறது நீதிமன்றம்.

22.12.2001: நீதிமன்ற உத்தரவுபடி சாம்ராஜ் நகர் கோர்ட்டில் சிவசுப்பிரமணியத்தை போலீஸ் ஆஜர் படுத்தவில்லை.

28.12.2001: கர்நாடக உயர்நீதிமன்றம் இதைக் கண்டிக்கிறது. மைசூர் சிறையை விட்டு அவரை எங்கும் கொண்டு செல்லக் கூடாது என்று உத்தரவு போடுகிறது.

10.01.2002: உயர்நீதிமன்ற உத்தரவையும் மீறி கைகள் கட்டப்பட்ட நிலையில் பவானி நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறார். கோயமுத்தூர் ஜெயிலில் வைக்கும்படி உத்தரவு போடப்படுகிறது.

11.01.2002: வீரப்பனால் கட்டுக் கொல்லப்பட்ட கந்தவேல் தொடர்புடைய வழக்கில் சிவசுப்பிரமணியம் கைது.

15.01.2002: பவானி நீதிமன்றத்தின் அனுமதி இல்லாமல் மீண்டும் மைசூர் ஜெயில்.

30.01.2002: கர்நாடக உயர்நீதிமன்றம் ஆயுத வழக்கில் நிபந்தனை ஜாமீன் வழங்கியது. தமிழக வழக்குகள் இருப்பதால் தொடர்ந்து சிறைவாசம்.

21.02.2002: பவானி கோர்ட்டில் மீண்டும் ஆஜர். ஐந்துநாள் போலீஸ் காவல்.

23.02.2002: சிவசுப்பிரமணியம் வீட்டில் சோதனை.

25.02.2002: கொடுமைப்படுத்தப்பட்டதாக பவானி நீதிமன்றத்தில் சிவசுப்பிரமணியம் புகார்.

விரோதம் என்று சொல்கிறது இந்தப் பிரிவு. ஆனால் அவரது குடும்பத்தினரைத் தவிர அப்போது வீட்டில் இருந்தது போலீஸ் தான். 353வது பிரிவு, அரசு ஊழியர்களை கடமை செய்ய விடாமல் தடுப்பது குறித்தது. வயதான முதியவர், மூன்று பெண்கள் அவ்வளவு பெரிய போலீஸ் படையை எப்படி பணி செய்ய விடாமல் தடுத்திருப்பார்கள்? என்று தெரியவில்லை. அதேபோல் பிரிவு 506(1) என்பது "கொலை செய்வேன்" என்று அச்சுறுத்தினால் போடப்படும் பிரிவு. இந்த பிரிவும் பொதுவாக வழக்கில் ஏன் சேர்க்கப்படுகிறது என்றால், உடனடியாக ஜாமீன் கிடைக்கக் கூடாது என்பதற்காகத்தான். போலீஸின் நோக்கம் இது போன்ற செயல்கள் மூலம் சிவசுப்பிரமணியத்தின் மன தைரியத்தை உடைப்பதுதான் என்பது தெளிவாகத் தெரிகிறது.


• நக்கீரன் கோபால்

அது மட்டுமல்லாமல், இனி மற்றவர்களுக்கும் இதே நடைமுறை' தான் என்று பயமுறுத்துவதும் அவர்கள் நோக்கம் என்பது புரிகிறது" என்கிறார். மனித உரிமை கழகத்தின் (பி.யு.ஸி.எல்) தமிழ் மாநில பொதுச் செயலாளரான சுரேஷ்!

பல ஆவணங்களைக் கைப்பற்றியதாகப் போலீஸ் சொன்னாலும், சட்டப்படி எந்த ஒரு ஸ்டேட்மெண்டும் (Mahazar) தயார் செய்யப்படவில்லையாம். அப்படித் தயார் செய்தால் அதில் ஜெயந்தியின் கையெழுத்தையும் வாங்க வேண்டும். உள்துறைச் செயலாளர், விசாரணை நடந்ததாக ஓர் அறிக்கையில் சொன்னார். ஆனால் சோதனை நடந்ததாக போலீஸ் சொல்கிறது. அந்தச் சோதனையின்போது சட்டத்திற்குப் புறம்பாக அரசு வழக்கறிஞர் ஆறுமுகம் என்பவரும் உடனிருந்ததாகச் சொல்கிறார்கள்.

"பல மனித உரிமை மீறல்களுக்காக நீதிமன்றங்களின் கண்டனங்களைத் தொடர்ந்து பெற்றாலும் போலீஸின் செயல்பாடுகள் சிறிதும் மாறவில்லை' என்பதைத்தான் ஜெயந்தியின் வீட்டில் நடந்த சோதனை காட்டுகிறது. தனி மனித உணர்வுகளை போலீஸ் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். பெண்களின் கௌரவம், கண்ணியம் ஆகியவற்றுக்கு ஆபத்து இல்லாதபடி போலீஸ் பணியாற்ற வேண்டும். பெண்களை சோதனையிட வேண்டுமென்றால், பெண் போலீஸ் மூலம் தனி அறைக்கு அழைத்துப் போய், அவர்கள் ஒத்துழைப்பின் அடிப்படையில்தான் சோதனை செய்ய வேண்டும். அப்பட்டமாக அத்து மீறல்களைச் செய்துவிட்டு, ஜெயந்தியின் மீதே வழக்குப் பதிவு செய்து கைது செய்ய முனைவது கண்டிக்கத் தக்கது. கையில் குழந்தையோடு அவர் எங்கும் ஓடிப் போய்விடமாட்டார். போலீஸ் ஏதாவது ஆதாரங்களின் அடிப்படையில், சோதனை, கைது என்று மேற்கொண்டால் சட்டப்படி அவற்றைச் செய்யட்டும். இப்படி தடாலடி அடித்து பயமுறுத்துவது கொஞ்சமும் சரியல்ல" என்கிறார் ஜனநாயக மாதர் சங்க பொதுச் செயலாளர் வாசுகி.

இதில் வேடிக்கை என்னவென்றால் சிவசுப்பிரமணியன் குடும்பத்தைத் தவிர சோதனையை படம் பிடிக்க முயன்ற தினமலர், தினகரன் மற்றும் வழக்கறிஞர் ஆகியோர் மீதும் வழக்குகளைப் பதிவு செய்திருக்கிறது போலீஸ்.

ஜெயந்தியைக் கைது செய்ய இடைக்கால தடை விதித்த சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சதாசிவம், "நீங்கள் நக்கீரன் நிருபர் மீது வழக்குகளைப் பதிவு செய்து விசாரிக்கத் துவங்கியிருக்கலாம். ஆனால் எதற்காக அவரது மனைவியையும், குடும்பத்தினரையும் அவற்றில் சிக்க வைக்கப் பார்க்கிறீர்கள்" என்று அரசு தரப்பு வழக்கறிஞரிடம் கேட்டார்.

நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்ட சம்பவத்தில், தமிழ் தீவிரவாதிகளுடன் சிவசுப்பிரமணியனுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக உள்துறைச் செயலாளர் நரேஷ்குப்தா கூறியிருக்கிறார். சிவசுப்பிரமணியனுக்கும் அவரது குடும்பத்துக்கும், நேர்ந்த இன்னல்களைப் பார்க்கையில், போலீஸ் யாரைக் குறி வைத்து காய்களை நகர்த்துகிறார்கள் என்பது தெரிகிறது. "நடிகர் ராஜ்குமார் கடத்தப்பட்ட போது நக்கீரன் ஆசிரியரையோ அல்லது நிருபரையோ தூது அனுப்ப வேண்டும் என்று வீரப்பன் சொல்லவில்லை. நாங்களும் செல்ல விரும்பவில்லை. இரு மாநில அரசுகளும் கேட்டுக் கொண்டதற்கிணங்க தமிழர்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற ஒரே நல்லெண்ணத்தில் தான் தூதுப் பணியை மேற்கொண்டோம். ஆனாலும் கூட இறுதியில் ராஜ்குமார் ஒப்படைக்கப்படவில்லை. இப்படியிருக்க, அவரது கடத்தலுக்கு உடந்தை என்று எப்படி குற்றம் சாட்ட முடியும்?" என்று கேட்கிறார் நக்கீரன் கோபால்.

– கௌசி


கல்கி சதாசிவம்

நூற்றாண்டு விழா!

கல்கி பத்திரிகையின் நிறுவனரும் முன்னாள் ஆசிரியருமான

கல்கி சதாசிவம்

நூற்றாண்டு விழா நிகழ்ச்சி மார்ச் 23, 2002 (சனிக்கிழமை)
சென்னை திருவான்மியூர் பரத கலாக்ஷேத்திரா அரங்கில்
நடைபெறுகிறது.



மாலை **6:00** மணி

தமிழ் இதழ்களில் வெளியான தலைசிறந்த
விளம்பரத்துக்கு விருது வழங்குதல்;
மக்கள் தொடர்பு, விளம்பரத்துறை
மாணவர்கள் இருவருக்கு கல்வி உதவித்
தொகை வழங்குதல்.

நிகழ்ச்சி தலைமை :

டாக்டர் பி. ராமமூர்த்தி

தொடர்ந்து,

மனதில் உறுதி வேண்டும்

நூற்றாண்டு நாயகருக்கு அஞ்சலியாக அரிய கலை நிகழ்ச்சி.

பங்கேற்போர் :

பாம்பே ஜெய்ஸ்ரீ, விஜய் சிவா,
முல்லைவாசல் ஜி. சந்திரமௌலி (வயலின்), பி. கணபதி ராமன் (ம்ருதங்கம்)
திருப்பூர் கிருஷ்ணன், அனுராதா கண்ணன்.
வடிவமைப்பு, இயக்கம் : கௌரி ராம்நாராயண்.

கல்கி சதாசிவம் நினைவு அறக்கட்டளை அன்புடன் அழைக்கிறது!

காதில் விழுந்தவை

படுக்கைக்கு அடியில் 36 லட்சம்!



• வாசன்

● கேட்பதற்குக் கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருந்தது. மறைந்த முஸ்லீம் தலைவர் ஒருவரின் படுக்கைக்குக் கீழே ரூ.36 லட்சம் இருந்ததாம். இந்த ரகசியம் தெரிந்த கட்சிக்காரர்கள் சிலர் அவர் இறந்தவுடனேயே, பறந்து வந்து பணத்தை 'லவுட்டி'க் கொண்டுப் போய் விட்டார்களாம். இதற்கிடையில், தலைவர் இல்லாமல் தவிக்கும் தமிழக முஸ்லீம்களை இணைக்க ஆளும் கட்சி ஆதரவுடன் சென்னையைச் சேர்ந்த ஒரு பிரமுகர் களம் இறங்கியிருக்கிறார். நிழலான நடவடிக்கைகளுக்காக அந்தப் பிரமுகரின் மீது ஏற்கெனவே 35 வழக்குகள் இருக்கின்றனவாம்! ரம்ஜான், பக்ரீத் ஆகிய பண்டிகைகளின் போது, அமைச்சர்களுக்கும், ஆளும் கட்சி பிரமுகர்களுக்கும் பிரியாணி பொட்டலங்கள் அனுப்புவதுதான் அவர் ஸ்பெஷாலிட்டி. இந்த நிலையில் மறைந்த தலைவரின் 'தலாக்' சொல்லப்பட்ட மனைவியும் களத்தில் குதித்திருக்கிறார். கிட்டத்தட்ட பதினைந்து ஆண்டுகளாக சப்தமே காட்டாமலிருந்த அந்தப் பெண்மணி திடீரென்று கலக்குவதன் நோக்கம், சுருட்டப்பட்ட பணத்தை மீட்பதும், அம்மாவின் அனுதாபத்தைப் பெற்று வாணியம்பாடியில் போட்டியிடுவதும்தானாம். இரண்டும் சாதாரண விஷயங்களா?

● டான்ஸி விவகாரத்தில், சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருக்கும் ஆலந்தூர் பாரதியை ஏதாவது சலுகைகள் மூலமாகவோ, வழக்குகள் போட்டோ சரிக்கட்ட முடியுமா? என்று ஆளும்கட்சி பிரமுகர்கள் யோசித்துக்கொண்டிருக்கிறார்களாம். ஆனால் மாறனின் அணுக்கத் தொண்டரான பாரதி உறுதியான கொள்கைப் பற்று மிக்க உடன்பிறப்பு. ஒரு துணிச்சலான காரியத்தை எடுத்துச் செயல்படும் பாரதிக்கு ராஜ்யசபை உறுப்பினர் பொறுப்பு கொடுக்கலாம் என்ற எண்ணமும் தலைமையின் பரிசிலனையில் இருக்கிறது. ஆனால் முன்னணிப் பிரமுகர்கள் சிலர், பாரதியை சைதைத் தொகுதியில் போட்டியிட வைத்தால் வெற்றி நிச்சயம் என்று சொல்கிறார்கள். உடல்நிலை சரியில்லாத கிட்டு, தளபதியின் ஆதரவையும் இழந்து விட்டாராம்.



• பாரதி

● கடைசியில் அது நடந்துவிட்டது. ஆம்! சோனியாவைச் சந்தித்து காங்கிரஸில் இணையும் வாக்குறுதியைக் கொடுத்துவிட்டார் வாசன். ஏப்ரலில் விழா. அதற்கு முன்னர் வாசன், ராஜ்ய சபாவுக்குத் தேர்வு பெற காங்கிரஸ் ஆதரவு கொடுக்கும். தமிழ்நாடு காங்கிரஸ் அறக்கட்டளைக்கு டிரஸ்டிகள் போட வேண்டிய அவசரமும், அவசியமும் உடனே இருப்பதால் காங்கிரஸின் அன்பான மிரட்டலுக்கு ஓ.கே சொல்வதைத் தவிர வாசனுக்கு வேறு வழியில்லை. ஆனால் ராஜ்யசபா தேர்தலில் த.மா.கா உறுப்பினர்கள் மூன்று பேர் கட்சி மாறி அம்மாவுக்கு ஆதரவாக வாக்களிக்கலாம் என்று சொல்கிறார்கள். அந்த மூன்று கறுப்பு ஆடுகள் மேலும் பலரைச் சேர்த்துக்கொண்டு கட்சியையும் பிளக்கலாம் என்கிறார்கள்.

- சஞ்சயன்

''வைரம் வாங்கினேன் வைபவம் கூடிவந்தது''



காலை 7.45 மணி. பின்பனி மூட்டத்தினையும் மீறி 'பளிச்'சென்றிருந்த அந்த உருவத்தினை ஒரு பிரபல TV Channel வாசலில் இரண்டு மூன்று பேர் வழியனுப்பிக் கொண்டிருந்தனர். தெரிந்த முகம். அருகில் நெருங்கினேன். 'அட! இது நம்முடைய ஸ்வர்ணாலயா ஜுவல்லரி சுகுமாரன் சார்'. கேட்டேன்: "சார் என்னது இவ்வளவு சீக்கிரம்... இங்கே TV ஸ்டேஷனில்."

"ஹௌ ஆர் யூ?"

ஹௌ இஸ் யுர் மேகஸின்? இன்றைக்கு இந்த சேனல் நியூஸில் தங்கவிலை ஏற்றம் மற்றும் மார்க்கட் நிலவரம் பற்றி ஒரு லைவ் பேட்டி. இப்போது தான் முடிந்தது'' என்றார் திரு. சுகுமாரன். "சார், இப்போ உங்க கடைக்கு முதல் அனிவர்சரி டைம்தானே."

"ஆமாம், பரவாயில்லயே! ஞாபகம் வைத்திருக்கிறீர்களே?" என்றவர், "கஸ்டமர்களுடன் கொண்டாடப் போகிறேன்'' என்றும் சொன்னார். ''பத்திரிகைக்காரன் மறப்பேனா சார். சொல்லுங்க சார். கஸ்டமர்களுடன் எப்படி கொண்டாடப் போகிறீர்கள்?"

"ம்ம்... உண்மையில் இது அவர்களுக்கு நன்றி சொல்லும் நேரம். எங்களது **'ஒரு காரட்டில் ஒரு டயமன் செட்'** திட்டமும் பெரும் வெற்றி பெற்றதற்கு அவர்கள்தான் காரணம்."

''ஆமாம் சார், BAZAAR-ல் பரபரப்பினை உண்டுபண்ணிய விளம்பரம். வைரங்களைப் பற்றிய பயங்களையும் வதந்திகளையும் பற்றி கூட எழுதியிருந்தீர்கள். வெரி இன்ஃபர்மேட்டிவ்'' என்றேன்.

"அதுமட்டுமல்ல. ஒரு கஸ்டமர் பழம், பூ, தட்டுகளுடன் கடைக்கு வந்து **'உங்கள் கடையில் வைரம் வாங்கினேன். பல வருடம் தள்ளித்தள்ளி போன என் மகள் திருமணம் கூடி வந்தது'** என்று நன்றி சொன்னார். தோஷம் இல்லா வைரக்கற்கள் நல்லது செய்யும் என்பது நிரூபணம் ஆனது."



"புண்ணியம் சேர்த்துக் கொண்டீர்கள் சார். கஸ்டமர்களுக்கு என்ன தரப்போகிறீர்கள்?"

''விலைச்சலுகைகளும் பரிசுகளும்தான். 31.3.2002வரை வழமையாக உள்ள கூலி இல்லை, சாதாரண கற்களுக்கு விலை இல்லை, வைரத்தில் ரூபாய் 2000 வரை ஒரு காரட்டுக்கு டிஸ்கவுண்ட், குறிப்பிட்ட ஐட்டங்களில் 50%

கூலியில் தள்ளுபடி, இத்யாதி, இத்யாதிகளுடன் 10,000 ரூபாய்க்கு மேல் வாங்கினால் அழகிய பெரிய ஷாப்பிங் பேக், ப்ளவுஸ் பிட், மஞ்சள் குங்குமத்துடன் கைக்கு வந்தவுடனேயே, ஆசீர்வாதங்களை அள்ளித்தரும் **'லக்கிப் பிள்ளையார்'** ஒன்றும் தருகிறோம். கைப்பையிலோ கேஷ் பாக்ஸிலோ வைத்துக் கொள்கிறார்கள். எப்போதும் உள்ள புன்சிரிப்பும் உபசரிப்பும் வரவேற்பும் உண்டு'' என்றார் சிரித்துக் கொண்டே.

''வொண்டர்ஃபுல். எதிர்காலத் திட்டங்கள்... என்று இழுத்தேன்"

''உண்டு. ஸான்கோல்டு ஸ்டாக்கில் இப்போது Beeds நெக்லஸ், ஜர்க்கான் செட்டுகள், சாமி சிலைகளும் சேர்ந்திருக்கிறது. அரை கிராமிலிருந்து 2 கிராம் வரை 24 கேரட் தங்கம் சேர்த்து கோல்டு ஃபார்மிங் டெக்னாலஜியில் செய்யப்படும் இவை மெருகு குறையாமலிருக்கின்றன. நிறைய வெள்ளிப் பரிசுப் பொருட்களும், ஆர்க்கிட், மற்றும் டிவினிடி, சைனீஸ் ஜாடி, வாஸ்கள் என்று கிஃப்ட் ஐட்டம் சேர்ந்திருக்கின்றன. ஒரு பக்கம் பாண்டிசேரி அன்னை சக்கரமும் மறுபக்கம் அரவிந்தர் யந்திரமும் உள்ள பெண்டன்ட் புது அடிஷன்.

"ஓகே, அது என்ன, ஃபாரீன் ஸ்டடீஸ் ப்ளான்? புரபசராக இருந்த நீங்கள் பிள்ளைகள் படிப்புக்கு செய்கிற தொண்டு என்று கேள்விப்பட்டேன்"


''ஆமாம், சிங்கப்பூரில் உள்ள எஞ்சினியரிங் கல்லூரிகளில் முடித்தவுடன் 45 ஆயிரம் மாதச் சம்பளம் தரக் கூடிய வேலை கிடைக்கும் டிப்ளமோ கோர்ஸ்களுக்கு எப்படி அப்ளை செய்வது என்று கௌன்சலிங் செய்கிறேன். 80% ஸ்காலர்ஷிப் உள்ள இந்த கோர்ஸில் எனது மகன் 4ஆவது செமஸ்டர் படித்துக் கொண்டிருக்கிறான். ரொம்ப வேல்யூ உள்ள சர்வதேச அங்கீகாரம் உள்ள படிப்பு. எஞ்சினியர் இன்ஃபோடெக், டிசைன், நர்சிங், பிஸினஸ், மார்க்கடிங்,



அக்கவுண்ட்டன்ஸி உள்ளிட்ட 25 கோர்ஸ்கள் உண்டு. XI Std, XII Std, முதலாம், இரண்டாம் ஆண்டு பட்டப் படிப்பு படிக்கும் மாணவர்கள் மனுச் செய்திருக்கிறார்கள். ஏப்ரல் 1ஆம் தேதி கடைசி நாள். ஜூன் 15 புறப்பட வேண்டும்'' என்றார். முதலாம் ஆண்டு விழாவுக்கும் மேற்படிப்புத் தொழில் வளரவும் வாழ்த்தி விடைபெற்றேன்.

- கிருபா சங்கர்.

உ



ஸ்ரீ ஸர்வாங்க ஸுந்தரி ஸமேத
ஸ்ரீஸற்குணேச்வரர் ஆலயம்
ஸற்குணேஸ்வரபுரம் :
கருவேலி - 609 501.

ஸம்வத்ஸராபிஷேகம்

அன்புடையீர்!

நிகழும் விஷு வருஷம் பங்குனி மாதம் 17-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை (31.3.2002) ஸ்வாதி நக்ஷத்திரம் கூடிய நன்னாளில் **ஸர்வாங்க ஸுந்தரி உடனுறை ஸ்ரீஸற்குணேச்வரப் பெருமானுக்கும்**, *மற்ற பரிவார தேவதைகளுக்கும்* **ஐந்தாவது ஆண்டு ஸம்வத்ஸராபிஷேகப் பெருவிழா** *இறையருள், குருவருள் துணை கொண்டு கீழ்க்கண்ட நிரலின் வண்ணம் நடைபெற இருக்கிறது. இறையன்பர்கள் அனைவரும் பங்கு கொண்டு பேரருள் பெற வேண்டுகிறோம்.*

ஸம்வத்ஸராபிஷேக நிகழ்ச்சி நிரல் (31.03.2002)

காலை	மணி 7.30	-	புண்யாஹவசனம் அனுக்ஞை, மஹாஸங்கல்பம்
”	மணி 8.00	-	ஸ்ரீ மஹா கணபதி ஹோமம், கலச ஸ்தாபனம், ஸ்தாபன பூஜை
”	மணி 9.00	-	நவக்ரஹ ஹோமம்
”	மணி 10.00	-	ஜபம் - பாராயணம், பூஜை - ஹோமம்

11.00 மணி முதல் பூர்ணாஹுதி, மஹாபிஷேகம், அர்ச்சனை, மஹா தீபாரதனை

மதியம் 2.30 மணி முதல் மாலை 5.30 மணிவரை ஸ்வாமி அம்பாளுக்கு திருக்கல்யாண உற்சவம்.

அனைத்து வைபவங்களும் சிவாகம சிரோமணி, அலங்கார கலாரத்தினம் வடகுடி **ஸ்ரீ D.கிருஷ்ணமூர்த்தி சிவாச்சாரியார்** *தலைமையில் திருக்கோயில் அர்ச்சகர் சிவத்திரு* **பா. நாகராஜ சிவாச்சாரியார்** *மற்றும் பல சிவாகம விற்பன்னர்கள் துணையுடன் நடைபெற இருக்கின்றன.*

மாலை 6.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை இசை நிகழ்ச்சி —
பத்மபூஷண் லால்குடி ஸ்ரீ ஜெயராமன் அவர்கள் முன்னிலையில்
அவரது சிஷ்யர் : ஸ்ரீ S.P. ராம் - பாட்டு
ஸ்ரீ பக்காலா ராமதாஸ் - வயலின்
கனக்காடு ஸ்ரீனிவாசன் - மிருதங்கம்


இங்ஙனம்,

ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா
மற்றும் நிர்வாகிகள், கிராமவாசிகள்,
கருவேலி, திருவாரூர் மாவட்டம்.
Ph :(04366) - 73800

Dr. V.கிருஷ்ணமூர்த்தி
பரம்பரை தர்மகர்த்தா

பொருளாகவோ, பணமாகவோ நன்கொடைகள் அளிக்க விரும்புகிறவர்கள் ஸ்ரீ ஸற்குணேச்வரர் கைங்கர்ய ஸபா என்று பெயரிட்டு கீழ்கண்ட முகவரிகளுக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

1. N. ராமசர்மா, 18, டபீர் புதுத்தெரு, கும்பகோணம் - 612 001. Ph : (0435) 423297
2. G. கண்ணன், D/127-A, ராஜமன்னார் சாலை, கே.கே. நகர், சென்னை - 600 078. Ph : 4848995



2002 மார்ச் 17
விஷு பங்குனி 3
மலர் : 60
இதழ் : 33

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



சங்கராச்சார்யாரின் சமரச முயற்சி!

காஞ்சி பீடாதிபதி டெல்லிக்குப் பறந்து சென்று ராமஜன்மபூமி பிரச்னையில் சமரசம் செய்ய முயன்றிருக்கிறார். இதர ஹிந்து அமைப்புகளின் தலைவர்களும் அரசுடன் பேச்சு வார்த்தைகளில் பங்கேற்றிருக்கின்றன.


குஜராத் கலவரங்களைத் தவிர்ப்பதில் காட்டப்படாத முனைப்பு, காலம் கடந்து இந்தப் பேச்சுவார்த்தைகளை நிகழ்த்துவதற்குக் காட்டப்பட்டிருப்பது வருத்தத்தை ஏற்படுத்துகிறது.

'நீதிமன்ற ஆணைக்குக் கட்டுப்பட்டே வி.எச்.பி. இயங்கும்' என்று பேச்சுவார்த்தையின் இறுதியில் அறிவித்தார் ஆச்சார்யர்.

'கோவிலைக் கட்டியே தீருவோம்' என்பது போன்ற உணர்ச்சியைத் தூண்டும் கோஷங்களை இனி வி.எச்.பி. எழுப்பலாகாது' என்று எச்சரித்தார். 'வி.எச்.பி.க்கும் கோயில் கட்டுமான பிரச்னைக்கும் தொடர்பில்லை' என்றுகூட ஒரு 'திடுக்' கருத்தை பின்னர் வெளியிட்டார்!

கோவில் கட்டும் பணிகள் மார்ச் 15 முதல் திட்டமிட்டபடி தொடரும் என்பதில் வி.எச்.பி. முதலான அமைப்புகள் மட்டுமின்றி சங்கராச்சார்யாரும் உறுதியாயிருக்கிறார்.

அது மட்டுமல்ல, பிரச்னைக்குரிய நிலத்தில்தான் கோயிலின் கர்ப்ப கிருஹம் அமையும்; அதில் நாங்கள் எந்தவித மாற்றமும் செய்யப்போவதில்லை; வரைபடம் (blue print plan) மாறாது என்கின்றன ஹிந்து மத அடிப்படைவாத அமைப்புகள்.



நீதிமன்றம் இன்னும் தீர்ப்பளிக்காத நிலையில், கோயில் கட்டுமானப் பணிகள் தொடங்கி நடைபெற அனுமதித்தால், பின்னாளில் கர்ப்பகிருஹம் அமைப்பதற்கான இடத்தைத் தந்தே ஆக வேண்டும் என்ற நியாய வாதங்களும் வலுப்பட்டுப் போகும். இவ்வளவு செலவழித்துத் திட்டமிட்டபடி கோயில் கட்டியபின் கர்ப்பகிருஹத்தை இடம் மாற்ற முடியாது என்ற வாதம் எழும். நீதிமன்றத் தீர்ப்பு சாதகமாயில்லாது போனால் மேலும் பிரச்னைகள் உருவாகும். முன்னிலும் கொடூரமான சம்பவங்களுக்கு வழிபிறக்கவும் வாய்ப்பு இருக்கிறது.


'67 ஏக்கர் இல்லாவிட்டால் பரவாயில்லை 42 ஏக்கர் கொடுங்கள் போதும்' என்று இறங்கி வருவதுபோல் வி.எச்.பி. பேசுவதும் பம்மாத்து வேலைதான். 'மஸ்ஜித்துக்குரிய நிலத்தைப் பிரித்துச் சுவர் எழுப்பிவிட்டு எங்கள் பணிகளைத் தொடர்வோம்' என்கிறார்கள். - இது நெருப்புடன் விளையாடும் கதையாகத்தான் முடியும்.

நீதிமன்றத் தீர்ப்புக்குக் காத்திராமல், அரசு பணிந்துவிட்டது. மார்ச் 15 அன்று திட்டமிட்டபடி அயோத்தியில் பூஜைகள் நடத்த அனுமதித்துவிட்டது.

கூட்டணி கட்சியினரோ இத்திட்டத்துக்கு ஆதரவுதர திட்டவட்டமாக மறுத்துவிட்டனர். நீதிமன்றத் தீர்ப்பு வெளிவருகிற வரையில் அயோத்தியில் துரும்பைக் கூட அசைக்கலாகாது என்கின்றனர்.

எதிர்க்கட்சிகளின் நிலை குறித்துக் கேட்கவே வேண்டாம். காங்கிரசும் கம்யூனிஸ்டு கட்சிகளும் கோயில் கட்டுவதற்கு நிலம் ஒப்படைக்கப்படக் கூடாது என்று உறுதிபடக் கூறிவிட்டனர்.

சமரசத்துக்கு, இஸ்லாமிய அமைப்புகளின் சம்மதம் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. காஞ்சிப் பெரியவரே இஸ்லாமிய தலைவர்களிடமும் பேசினார். அவரிடம் மிகுந்த மரியாதையுடன் அவர்கள் கலந்துரையாடியபோதும் மனநிறைவுடன் சமரசத்துக்குச் சம்மதிக்கவில்லை. 'நீதிமன்றத் தீர்ப்புக்குக் காத்திருப்பதே முறை; அதைமீறி காரியங்கள் நடந்தால் விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்று அறிக்கை விடுத்திருக்கிறார் ஜும்மா மஸ்ஜித்தின் ஷாஹி இமாம். மார்ச் 15 பூஜைக்கு உச்ச நீதி மன்றத்தில் தடை வாங்கவும் முயற்சி நடக்கிறது.



நீதிமன்றத் தீர்ப்புக்குக் காத்திருப்பதைக் காட்டிலும் பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு சமரசத்துக்கு வருவது நல்லதுதான். ஆனால், அது நிரந்தரத் தீர்வாக இருக்க வேண்டும். ஒப்பந்தத்துடன், இரு தரப்பின் சம்மதமும் பெற்ற வரைபடம் இணைக்கப்பட வேண்டும். இவற்றுக்கு நீதிமன்றத்தின் ஒப்புதலையும் பெற வேண்டும். அரைகுறைக் காரியம் சிக்கல்களையே அதிகரிக்கும். அப்படிப்பட்ட சிக்கல்களுக்கான அறிகுறிகள் இப்போதே தெரிகின்றன.

ராமர் பிறந்ததாக நாம் நம்புகிற புண்ணிய பூமியில் இஸ்லாமிய வழிபாட்டுத் தலம் அல்லது இஸ்லாமிய நினைவுக் கட்டடம் எழுப்பப்பட்டதென்பது சரித்திரம்.

அந்த சரித்திரத்தை அழிக்கும் முயற்சிதான் பாபரி மஸ்ஜித் தகர்ப்புச் சம்பவம். அதன் வன்முறையும் வன்மமும் ஏற்படுத்திய காயங்கள் இன்னமும் ஆறாமலேதான் இருக்கின்றன. ராமர் கோயில் முயற்சி அந்தப் புண்களைக் கிளறும்.

ஹிந்துக்களானாலும் சரி, இஸ்லாமியர்களானாலும் சரி, தங்களது மூதாதையர்கள் அனுபவித்த கஷ்டங்கள் அல்லது அவமானங்களுக்காக இன்றைய தலைமுறையினரைக் குறிவைத்துப் பழிதீர்த்துக் கொள்ள முயற்சி செய்வது அறிவீனம். வரலாறு என்பது நல்லவற்றுக்கான படிப்பினையாக இருக்க வேண்டுமே தவிர வன்மத்தை வளர்த்துக் கொள்ள ஒரு வாய்ப்பாக அதை நாம் மாற்றிக் கொள்ளலாகாது. அவ்வாறு செய்ய ஆரம்பித்தால் மனித நாகரிகமும் பண்பாடும் பின்னோக்கிச் சென்று படுகுழியில் விழுந்துவிடும்.

மிக துரதிர்ஷ்டவசமாக பி.ஜே.பி.யின் பார்வையும் அதனை இயக்குகிற ஹிந்து அடிப்படைவாத அமைப்புகளின் பார்வையும் இப்படிப் பின்னோக்கிய பார்வையாகவே இருக்கிறது.

காஞ்சி பீடத்தின் பார்வை அத்துடன் இணையாமல், சமரசங்களுக்கு முயற்சி செய்யாமல் தனித்து இயங்குவதே மேன்மை.

மெய்யான ஹிந்து தர்மத்தின் உயர்நோக்கில், ராமன் பிறந்த இடம் மட்டுமே அயோத்தி அல்ல; அவன் கோட்பாடுகள் நிலவும் பூமியே ராமஜன்ம பூமி. இதை உணர்ந்தால் பிடிவாதங்கள் தளரும். அயோத்தியில் ராமர்கோயில் அமைவதும் எளிதாகிப்போகும்.



பா. சத்தியமோகன்

விழா

கவியரங்க விழாவில் மென் பதற்றம்
மங்கலமான குத்து விளக்கு ஒளியை
மின் விசிறி ஊதுகிறது
இப்படியும் அப்படியுமாய்.

மேடைக்குச் சற்று நேர் எதிரே
பின்னப்பட்ட குருவிக் கூடு

நீட்டிய கையை மடக்காதே
புன்னகையை அதற்குள் அவித்துவிடாதே
அப்படியே இரு
ஃபோட்டோ எடுக்கிறார்கள்.

பரிசுப் பொட்டலங்களுக்காக
நீண்ட வரிசையில் குழந்தைகள்
காத்திருக்கும் கால்களுக்கு ஒரு பரிசு
கூடுதலாக்கலாம்
அல்லது உட்கார வைக்கலாம்

வராத கவிஞரின் பெயர்
கூப்பிடப்படுகிறது எப்போதும்
அழகான உச்சரிப்பில்

கூட்டம் எப்போது முடியும்
விடாமல் வந்து பார்க்கும்
தவிட்டுக் குருவி


எல்லோரும் கைதட்டும்போது
சும்மாயிருக்கிறாள் அம்மா
இமைகள் மூடித்திறக்கும்போது
கனவுக் கவிதை முடிகிறது.



நமது துணை ஆசிரியர்!

நேதாஜி சுபாஷ் சந்திரரின் தலைமையில் ஆஜாத் ஹிந்த் (சுதந்திர இந்திய) அரசாங்கம் நடைபெற்ற போது மலாய் நாட்டில் வாழ்ந்த இந்தியர்கள் கொடுத்து வைத்தவர்கள். அவர்களில் நேதாஜி நடத்திய மகத்தான வீரப் போராட்டத்துக்கு எந்த விதத்திலேனும் துணை புரிந்தவர்கள் மிக்க பாக்கியசாலிகள். அத்தகைய பாக்கியசாலிகளில் ஒருவரும், 'எரிமலை' என்னும் மாபெரும் நூலின் மொழி பெயர்ப்பு ஆசிரியருமான ஜயமணி ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள் நமது 'கல்கி' பத்திரிகையின் துணை ஆசிரியராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பதை நேயர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம். 'ஆஜாத் ஹிந்த்' அரசாங்கம் நடந்த காலத்தில் ஜயமணி சுப்பிரமணியம் அவர்களுக்கு நேதாஜி எழுதிய ஆங்கிலக் கடிதத்தைக் கீழே காணலாம். அமர வாழ்வு அடைந்த ஸ்ரீ சுபாஷ் சந்திரபோஸின் கையெழுத்துக்கூட எவ்வளவு அழகாயிருக்கிறது!

– ஜயமணி சுப்பிரமணியம் பணியில் அமர்த்தப்பட்டபோது, 'கல்கி' பிப்ரவரி 1942 இதழில், அதன் ஆசிரியர் கல்கி வெளியிட்ட செய்தி இது. இந்தச் செய்தியின் கீழே ஜயமணி சுப்பிரமணியத்திற்கு சுபாஷ் சந்திரபோஸ் எழுதிய கடிதத்தையும் பிரசுரித்திருந்தார்.



Sri Jayamani S. Subrahmanyam,
c/o. Manonmoney Vilas Book Depot,
Booksellers and Publishers,
Kuala Lumpur

"JAI HIND"

Many thanks for presenting me a copy of the book, "The First War of Indian Independence" by Savarkar

You have done a service to our Cause by reprinting this book at a time when it is most needed.

With sincerest good wishes.

"JAI HIND"

Subhas Chandra Bose

18.02.2002 அன்று ஜயமணி சுப்ரமணியம் காலமானார். அவருக்கு எங்கள் இதய அஞ்சலி.

சமையலறையில் பல்லாங்குழி!

'தில்' படத்தில் வந்த 'உன் சமையலறையில்' பாடலும், 'ஆனந்தம்' படத்தில் வந்த 'பல்லாங்குழி' பாடலும் சென்ற வருடத்தின் சூப்பர் ஹிட் பாடல்கள். இந்தப் பாடல்களை எழுதிய கபிலனும், யுகபாரதியும் சந்திக்கிறார்கள்.

"மரபையும் யாப்பையும் கைவசம் வைத்திருக்கும் கவிஞருக்கு பாடல் சுலபமாகக் கைவரும். சொற்களை மட்டும் வைத்துக் கொண்டு பம்மாத்துப் பண்ண முடியாது."

— யுகபாரதி

அரும்பாக்கத்தில் உள்ள கபிலனின் வீட்டுக்குள் யுகபாரதி நுழையும்போதே கமங்கலி கேபிளில் 'உன் சமையலறை' பாட்டு ஓடிக் கொண்டிருந்தது. "கபிலன்... நல்லவேளையாக நீங்கள் குளியலறை பற்றி எழுதவில்லை... இல்லையென்றால் நான் நேரே அங்கேதான் போக வேண்டும்" என்றபடி சமையலறைக்குள் புகுந்து ஆராயத் துவங்கினார் யுகபாரதி.

கபிலன்: பாரதி... சமைக்கத் தெரியுமா?

பாரதி: ம்... வெந்நீர் சூப்பரா வைப்பேன். ... (சிரித்துக்கொண்டே) சென்னையில் ஐந்தாறு வருடங்களா பிரம்மச்சரிய வாசம் தானே. சவாலே... சமாளி

தான்.

க: உங்கள் கவிதைத் தொகுப்பு ஒன்று தமி



• கபிலன்

முக அரசின் பரிசு பெற்றதே!

பா: 'மனப்பத்தாயம்' அதன் தலைப்பு. அந்தத் தொகுப்பைப் பார்த்துவிட்டுத் தான் இயக்குனர் மு. களஞ்சியம் என்னை 'தேசவன்' படத்துக்குப் பாட்டெழுதக் கூப்பிட்டார். தேவா இசை. ஆனால் படம் வெளிவரவில்லை. சரி, 'சமையலறை'தான் உங்கள் முதல் பாடலா?

க: 'நரஸிம்மா' படத்தில் 'லாலா நந்தலாலா' என்ற பாடல்தான் என் முதல் பாடல். அந்தப் படத்தின் இயக்குனர் மறைந்த திருப்பதிசாமி என் நண்பர். கல்லூரியில் படிக்கும்போது, நாங்கள் ஒன்றாக கவியரங்கம், பேச்சுப் போட்டி என்று கலந்து கொண்டு சக்கைப் போடு போடுவோம். 'சமையலறை' பாட்டு நான் மூன்று வருடங்



• யுகபாரதி



களுக்கு முன்னரே எழுதி வைத்தது. நான் சைந்து இயக்குனர்கள் அதைப் பார்த்துவிட்டு 'வேண்டாம்' என்று சொல்லிவிட்டார்கள். கடைசியில் 'தில்' பட இசையமைப்பாளர் வித்யாசாகர்தான் 'பிரமாதமாக இருக்கே' என்று பாராட்டிப் பதிவு செய்தார்... உங்கள் பெயரே யுகபாரதிதானா?

பா: இல்லை. பெற்றோர் வைத்த பெயர் பிரேம்குமார். பாரதியின் கவிதை வரிகளில் 'ஆகாவென்று எழுந்தது பார் யுகப்புரட்சி' என்ற வரி எனக்குப் பிடித்தது. அதிலிருக்கும் யுகத்தையும் பாரதியையும் சேர்த்துக் கொண்டேன். சென்னைதான் உங்கள் ஊரா? ஏனென்றால் 'அள்ளித் தந்த வான'த்தில் 'சென்னைப்பட்டணம்' என்று வெளுத்துக் கட்டியிருக்கிறீர்களே!

க: பிறந்தது பாண்டிச்சேரி! நான்கு வயதிலேயே சென்னை வந்துவிட்டேன். வட சென்னையில்தான் படித்தேன். திராவிட இயக்கப் பெரியவர்களின் அறிமுகம் சிறுவயதிலேயே கிடைத்ததால் அதன் பாதிப்பு என்னிடம் உண்டு. பத்தாவது படிக்கும்போதே எனக்கு வெண்பா எழுதக் கற்றுக் கொடுத்தவர் கவிஞர் சிங்கார சடையப்பன். மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர். சமீபத்தில் மறைந்தார். அதன்பின் வைரமுத்து கவிதைகள் மீது காதல். அவர் படித்த பச்சையப்பனில் படிக்க வேண்டுமென்று பிளஸ் டூவில் கணிதம் எடுத்திருந்தாலும் பச்சையப்பனில், தமிழ் இலக்கியத்தில் சேர்ந்து, அங்கேயே பட்ட மேற்படிப்பையும் ஆராய்ச்சியையும் முடித்தேன்... 'தெரு ஓவியம்' என்ற கவிதை தொகுப்பு வந்திருக்கிறது. அது சரி. உங்களுக்குப் பல்லாங்குழி ஆடத் தெரியுமா?

பா: ஊரில் (தஞ்சை) புளியங்கொட்டை வைத்து ஆடியதுண்டு. அப்பா சி.பி.எம் பிரமுகர். பொழுதுவிடிந்து, பொழுது போனால் கூட்டம்; அரசியல் பேச்சுகள் என்று வீடே கலகலப்பாக இருக்கும். 13 வது வயதிலேயே 'ஈழப் பிரச்னை' பற்றி கவிதை எழுதினேன். அப்பாவின் நண்பரும் தமிழ் ஆசிரியருமான செல்வகணேசன் எனக்கு முறையாக இலக்கணத்தையும் சமகால கவிதைகளையும் அறிமுகப் படுத்தினார். என்னை வடிவமைத்துக்

கொன்வதில் மறைந்த தஞ்சை பிரகாஷ் உதவியாக இருந்தார். ..ஊரிலிருக்கும்போது 400க்கும் மேற்பட்ட கவிதைகள் எழுதி பல பத்திரிகைகளில் வந்தன. எழுதி அம்மாவிடம் வாசித்துக் காண்பிப்பேன். பிறகு அவர்தான் பத்திரிகைகளுக்கு அனுப்பி வைப்பார். எனது ஆரம்ப காலத்திய கவிதைகளில் காதல் வாசனையே இருக்காது! (சிரிக்கிறார்) அது சரி உங்களுக்குக் காதல் அனுபவம்...?

க: உண்டு...மனைவியைத் தீவிரமாகக் காதலிக்கிறேன். ஒரு மகள். பெயர் தூரிகை! 'பல்லாங்குழியில்' 'ஒற்றை நாணயம்' என்று வழக்கத்தில் இல்லாத சொல்லைப் பயன்படுத்தியிருக்கிறீர்களே!

பா: பாட்டு முழுவதும் 'ஒரு ரூபாய் நாணயத்தைச் சுற்றியே வர வேண்டுமென்று இயக்குனர் லிங்குசாமி கண்டிப்பாகச் சொல்லி விட்டார். படம் வெளிவந்தப் பிறகு நான் குடியிருக்கும் காலனிக்கு வெளியில் உள்ள கடைக்கு 'பிரஷ் வாங்குவதற்காகச் சென்றிருந்தேன். கடைக்காரருக்கு என்னை யார் என்று தெரியாது. சாமான் வாங்க வந்த வேறு ஒருவரிடம் 'ஒரு ரூபாய் காசைக் கொடுத்துவிட்டு 'பல்லாங்குழி' பாட்டைப் பாடிக் காட்டினார். "தெரியுமாப்பா, இந்தப் பாட்டை எழுதிய ஆள் இங்கேதான் இருக்கானாம்" என்றபோது மனத்தில் ஆனந்தக் கூத்துதான். உங்கள் சமையலறைப் பாட்டுக்கு நல்ல ரெஸ்பான்ஸ் ஆச்சே!

> "பெரும்பாலான பாராட்டு பெண்களிடமிருந்து தான். முதல்வரி சமையலறை பற்றியதாயிற்றே!"
>
> – கபிலன்

க: பெரும்பாலான பாராட்டு பெண்களிடமிருந்துதான்... முதல் வரி சமையலறை பற்றியதாயிற்றே! (பெண் அமைப்புகள் கோபித்துக் கொள்ளக் கூடாது) பாட்டெழுத உங்களுக்கு மூட் வர வேண்டுமா?

பா: இப்போதெல்லாம் இசை இயக்குனர்கள் மெட்டைப் பதிவு செய்து கொடுத்துவிடுகிறார்களே... அதை மனத்தில் போட்டு அதே நினைவோடு சுற்றி வரும்போது மின்னல் போல , வரிகள் தோன்றும் . இரவு ஊரே அடங்கிப் போன பின் மெட்டைக் கேட்டு பாட்டெழுவது என்பது எனக்கு மிகவும் பிடிக்கும். நாம் எழுதும் வரிகள் பிரபஞ்சத்தில் காற்றோடு கலக்கப் போவதைக் குறித்து பெருமிதமும், கர்வமும்கூட அப்போது உண்டாகும்.

க: கிட்டத்தட்ட நான்கூட அப்படித்தான். வார்த்தைகள் மடியில் வந்து விழுந்த பிறகு இரவு இரண்டு மணியோ... மூன்று மணியோ... விளக்கைப் போட்டுவிட்டு உட்கார்ந்து விடுவேன். ஆமாம் நீங்கள் பொறியியல் படித்தீர்கள் என்று கேள்விப்பட்டேன்.

பா: ஆமாம்... சென்னைக்கு அப்ரண்டிஸ் வேலை தேடப் போகிறேன் என்று கவிதைகளுடன் வந்து விட்டேன். 'ராஜரிஷி' பத்திரிகையில் ஆசிரியராக இருந்த துரை, கவிதைகளைப் பார்த்துவிட்டு துணை ஆசிரியர் வேலை கொடுத்துவிட்டார். பின்னர் அந்த பத்திரிகை நின்று போயிற்று. இப்போது 'கணையாழி'யில் உதவி ஆசிரியராக இருக்கிறேன்... இப்போது நம்மைப் போலவே இளம் பாடலாசிரியர்கள் துறைக்கு வந்திருக்கிறார்களே?

க: பலர் மிக நன்றாகவே எழுதுகிறார்கள்... முறையான இலக்கியம் படிக்காததால் சிலர் கொஞ்சம் தடுமாறுவதும் தெரிகிறது. கானா பாட்டுகள் பற்றி ஆராய்ச்சி செய்தபோது அசத்தலான பல வரிகள் பார்வைக்கு வந்தன.

பா: மரபையும், யாப்பையும் கைவசம் வைத்திருக்கும் கவிஞனுக்குப் பாடல் சுலபமாகவே கை கொடுக்கும். கற்பனை அடித்தளம் தேவை. சொற்களை மட்டுமே வைத்து பம்மாத்து பண்ண முடியாது. வாழ்க்கையைப் பற்றி தெளிவான பார்வையும் இருக்கணும். 'தேடல்' மனப்பான்மை முக்கியம்.

(இருவரையும் இப்படியே விட்டால் மணிக்கணக்கில் பேசுவார்கள் என்று இடையில் புகுந்தோம்.)

"இப்போதெல்லாம் பாடல் வரிகளில் ஆபாசம், அருவருப்பு அதிகமாகத் தலை காட்டுகிறதே... பணத்துக்காக எதை வேண்டுமானாலும் எழுதி விடுவதா...?

க: உங்கள் குற்றச்சாட்டை மறுப்பதற்கில்லை. ஆனால் நாங்கள் வளரும் கவிஞர்கள். எங்களை மாட்டிவிட்டு விடாதீர்கள். ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்ல முடியும். இப்போது திரைத் துறையில் தயாரிப்பு மற்றும் இயக்குனர் வரிசைகளிலும் ஏராளமான இளைஞர்கள்... நல்ல ஆரோக்கியமான போக்கு நிலவுகிறது. இலக்கிய ஆழமுள்ள எளிய சொற்களைப் போட்டு எழுதப்படும் பாடல்கள் நல்ல வரவேற்பைப் பெறுகின்றன. நாங்கள் அந்த பாதையில்தான் போகிறோம்.

'அதுவே என் கருத்தும்' என்று விடைபெற்றுக் கொண்டார் யுகபாரதி.

தொகுப்பு: ஸ்ரீநிவாசன்
படங்கள்: ராஜன்



சீதா ரவி

'புண்டரீகவல்லி கொடுத்து வைத்தவள்... ரொம்ப ரொம்ப கொடுத்து வைத்தவள்'– இந்த எண்ணம் உதித்ததுமே ஆனந்தனின் முகத்தில் ஒரு மலர்ச்சியான புன்னகையும் தோன்றியது.

பரிமளரங்கநாதரின் பக்கத்தில் இடம்பிடித்தது மட்டுமே அவள் பாக்கியம் அல்ல. அந்த அண்மையும் கைங்கர்ய யோகமும் அவளுக்கு உரிமையானவை; நிரந்தரமானவை. ரங்கநாதனின் சங்கு சக்கரங்களை, அவன் பெற்ற பாக்கியம் என்று சிலாகிக்கிறோமா என்ன...? அப்படித்தான் புண்டரீக வல்லியின் ஸ்தானமும். அவளு டைய அழகைப் போலவே அவளுக்கு உரிமையானது.

அவளுடைய நிஜமான பாக்கியம் ஹமீர் கல்யாணியினால் அலங்கரிக்கப் பெற்றது தான் என்று நினைத்துக் கொண்டான் ஆனந்தன். அந்த எண்ணம் தோற்றுவித்த உணர்வுக் கலவையில்



ஒரு நெடுமூச்சு அவனிடமிருந்து வெளிப்பட்டபோது, பரிமளரங்கநாதரின் விசால மார்பு விம்மித் தணிவதாகத் தோன்றியது.

உடலும் ஆன்மாவும் அனுபவித்த கலவியில் ஓர் அற்புதக் குழந்தையைப் பிரசவித்த தாயைப் போல், வெளி மண்டபத்தில், துவண்ட மகிழ்ச்சியில் உறங்கிக் கொண்டிருந்தார் குருநாதர். அவர் தலைமாட்டில் வீணை மௌன சங்கதிகள் ததும்ப மூச்சடக்கிக் காத்திருந்தது. புண்டரீ கவல்லியைப் போல் அதுவும் கொடுத்து வைத்த ஜீவன். கங்கையின் சிற்றலைகளால் தழுவப்பட்டு, இப்போது இந்த ஜீவன் முக்தரின் விரல்களால் மீட்டப்படும் பேறு பெற்றது.

சாமானிய மீட்டுகளா அவை...? ஒசிந்து உருக்கிய கமகங்கள். உயிரை உருக்கி உருக்கி வார்க்கிற சங்கீதம்! இருப்பது ஓர் உயிரானால் இப்படி மீண்டும் மீண்டும் உருக்கி வார்க்க முடியுமா...? ஆடல்வல்லானையும் அரங்கநாதனையும் அபயாம்பிகையையும் கமலாம்பிகையையும், கலைமகளையும் லக்ஷ்மியையும் கந்தனையும் கணபதியையும் கம்பீர மொழியும் கந்தர்வ கானமும் இழையும் இசைக் கோயில்களில் குடியேற்ற முடியுமா...? ஒவ்வொரு கீர்த்தனையும் ஒரு ஜன்மாவின் முயற்சியல்லவா! ஒரு பிறவியின் பயன் அல்லவா...! இதுவும் ஜீவன்முக்த நிலை தானே!

ஆனந்தன் அப்படித்தான் உணர்ந்தான். உலகியலின் பிடிகளுக்குத் தம்மை ஒப்புக் கொடுத்தாலும் அதன் தளைகளில் சிக்காத ஆன்ம சுதந்தரத்துடன் குருநாதர் உணர்

பரிமளரங்கநாதர்

ஊராகச் சென்று கொண்டிருந்தார். ஒவ்வொரு ஊரிலும் பாடல்கள் பிறந்த வண்ணமிருந்தன.

அவர் போய்ச் சேரும் முன்னரே 'முத்துசுவாமி தீக்ஷிதர் வந்து கொண்டிருக்கிறார்' என்று காற்று, மரத்தின் இலைகளிடம் செய்தி சொல்லிவிடும் போலும்... ஜனங்கள் அவரவர் ஊர் வழக்கப்படி பூர்ண கும்பமோ பூ மாலையோ வைத்துக் கொண்டு காத்திருப்பார்கள். கோலமிட்டு விளக்கேற்றிய ஜாகை ஒன்று தயாராயிருக்கும். கொல்லையில் யாராவது கன்றுடன் பசுமாட்டைக் கொண்டு வந்து கட்டி விடுவார்கள். கிணற்றடி மரங்களில் பச்சைக் கிளிகளும் கருங்குயில்களும் இசைப் போட்டி நடத்திக் கொண்டிருக்கும்.

பெரிய கள்ளிப் பெட்டியில் வரும் பூஜை சாமான்கள் ஆனந்தனின் பொறுப்பு. பல்லக்கு போல் பெட்டிக்கு இருபுறமும் வளையமடித்து மூங்கில் கழி கொடுத்துத் தூக்கும்படி செய்து வைத்திருந்தான். உள்ளே விக்ரஹங்கள் அலுங்காமல் நின்ற வாக்கிலிருக்க, ஆனந்தனும் வேறு மூவரும் சுமந்து நடப்பார்கள்.

குருநாதர் முகாம் பெயர்வதொன்றும் திட்டமிட்ட அட்டவணைப்படி நடப்பதில்லை. சித்தம் போக்கு சிவன் போக்கு என்று கிளம்பி விடுவார். அவர் கிளம்புகிறவரை பூஜையைக் கலைக்க முடியாது. கடைசியாய் இடம்பெயர்பவர்கள் ஆனந்தனும் அவனுடன் பூஜை தூக்கும் மூன்று கூட்டாளிகளும்தான்.

தூக்கிச் சுமந்ததில் நால்வருக்கும் ஒன்று போலத்தானே தோள் தழும்பேறியிருக்க வேண்டும்...? அதுதான் இல்லை. காவேரி படித்துறையில் முங்கித் திளைத்த போது ஆனந்தன் கவனித்து விட்டான். மற்ற மூவருடையதைக் காட்டிலும் தன்னுடைய தோள் வடு ஒரு விரல்கடை அகலமும் ஆழமும் அதிகமாய்த்தானிருந்தது. தன் பொறுப்புணர்வுக்கும் குருபக்திக்கும் கிடைத்த ஆசியாக அதை அவன் எண்ணி மகிழ்ந்த கணத்தில் காவிரி ஸ்னானத்தின் திளைப்பெல்லாம் ஒன்றுமில்லையென்றாகி விட்டது.

உறங்கிக் கொண்டிருந்தவரை மீண்டும் பார்த்தான் ஆனந்தன். முகத்தில் சாந்தம் குடிகொண்டிருந்தது. ஆழ்ந்த துயிலின் விகசிப்பு உடல் முழுதும் தெரிந்தது. பாதங்கள் கூம்பிய தாமரைகள் போல் சாய்ந்திருந்தன. அவற்றின் அருகே போய் அமர்ந்து கொண்டான் ஆனந்தன். அவன் வலக்கரம் தன்னையறியாது இடதுதோளின் வடுவைத் தொட்டு நீவிப் பார்த்தது. காத்திரமான கஜமுகன். பஞ்சலோகத்தில் மகாமேருவுடன் கூடிய அம்பாள் திருவுருவம். மயில்மேவிய வீரனாய் ஆறுமுகன். கணந்தோறும் அஞ்சேல் அஞ்சேல் என்று பறைசாற்றும் ஈராறு விழிகளின் பார்வையும் பன்னிரு திருக்கரங்களின் அழகும், அதைக் காண ஒயிலாய்க் கழுத்து திருப்பி நிற்கும் மயிலும்... இந்த இஷ்டதெய்வங்களுடன் பூஜை பாத்திரங்கள் திரவியங்கள் என்று சேரும் போது கனம் கூடி விடுகிறது. ஆனந்தனின் மகிழ்ச்சியும் கூடிவிடுகிறது. ஆனால் அந்த மகிழ்ச்சியே பிறிதொரு ஆனந்தம் தனக்குக் கிடைக்க விடாமல் செய்து விடுகிறது.

செல்லும் தலம்தோறும் குருநாதர் பாடல்களைப் புனைந்து வருகிறார். ம்...ஹூம்! பாடல்கள் அவருள்ளிருந்து ஸ்புரித்துக் கொண்டிருக்கின்றன. கடைசியாய் மாயூரத்தில் கூட அபயாம்பிகைக்கு பத்து விபக்தி கீர்த்தனைகள் பிறந்திருக்கின்றன. மாயூரநாதரை தன்யாஸியில் பொதித்து வைத்திருக்கிறார். அந்த அபயாம்பிகையும் மாயூரநாதரும் அங்கேயே - மாயூரத்தில்தான் - இருப்பார்கள். ஆனால் அவர்கள் புகழ் மட்டும் குருநாதரின் பாடல்களில் சுமக்கப் பட்டுப் பாரெல்லாம் பரவப் போகிறது. ஆனந்தன் பூஜைப் பெட்டியைச் சுமப்பது போன்ற பெருமித பக்தியுடன், கீர்த்தனைகளை மனத்திலும் நாவிலும் சுமந்து செல்லும் சீடர்கள், அவற்றை உலகறியச் செய்யப் போகிறார்கள்...

அந்த பாக்கியம் தனக்குக் கிடைக்காது என்பது கூட அல்ல ஆனந்தனின் தாபம். அவர்களைப் போல் தானொரு ஏகசந்தக்ராஹி இல்லை என்பதுணர்ந்திருந்தான். வடிவேலு, பொன்னைய்யா, சிவானந்தம், கமலம் என்று எல்லோருமே ஆற்றல் மிக்கவர்கள். தம்பியப்பனும் திருக்கடையூர் பாரதியும் பற்றிக் கேட்கவே வேண்டாம்...

●●●

எப்படி... எப்படி...? எப்படி...? வாட்டுகிறது
கேட்டவர்களையும் விசாரித்தால் பரவசத்துடன்

காதில் விழும் கணத்திலேயே அவர்கள் ஒவ்வொருவரும் பனித்துளியை உறிஞ்சும் கதிர்ச்சுடர்களென பாட்டை ,கிரஹித்துக் கொண்டு விடுவார்கள். ஆனந்தனுக்கு அந்த ஆற்றல் இல்லை. கேட்கிற கணத்தில் அவன் உள்ளம் அதன் அழகில் கட்டுண்டு அடிமை யாகிவிடும். அவன் அறிவு அதன் கம்பீரத்தில் பிரமித்து ஊமையாகி விடும். மொழியும் இசையும் அவனுக்குள் பாய்ந்து, பரவி, கிளர்த்தி கண்ணீர்ப்பெருக்காய் மட்டுமே எதிரொலிக்கும். ஆனால் கண்ணீருக்கு ஏது கட்டிக்காக்கும் ஆற்றல்? குருநாதரின் படைப்புகளை ஆயிரமாண்டுகள் கழித்துக் கேட்போரும் கண்ணீர்ப் பெருக்க வேண்டுமெனில் இன்றைக்கு அதைக் கற்போர் கண்ணீரில் கரைந்து விடலாகாது. உணர்வோடு அறிவாலும் கிரஹித்து, ஆற்றலால் பரப்ப வேண்டும். அதைச் செவ்வனே செய்பவர்கள் இருப்பது ஆனந்தனுக்கு மகிழ்ச்சிதான். ஆனால்... அந்த ஆற்றலில்லாததாலேயே அவனுக்குக் குருநாதரின் அண்மையில் எப்போதுமிருக்கும் சந்தர்ப்பம் இல்லாது போகிறது. பூஜையும் நைவேத்யமும் அதற்கான திரவியங்கள் சேகரிப்புமாக அவன் அவரிடமிருந்து சரீரத்தால் அகன்றிருக்க நேரிடுகிறது. அதனாலேயே ஒரு பாடல் ஸ்புரிக்கின்ற அற்புத கணத்தின் தரிசனம் அவனுக்கு இதுநாள்வரை லபிக்கவில்லை.

பெரும்பாலும் பூஜை பெட்டியைச் சுமந்து ஊரின் எல்லைக்குள் நுழைகிற நேரத்தில், குருநாதர் அவ்வூர்க் கோயிலுக்குச் சென்று பிரதான தெய்வத்தையோ பரிவார தெய்வத்தையோ பாடி விட்டிருப்பார். ஊர் மக்களெல்லாம் எல்லையிலேயே இவனைச் செய்தியுடன் வரவேற்பார்கள். கண் பனிக்க உள்ளத்தில் ஒரு ஒடுக்கமும் நடுக்கமும் குளிர விவரிப்பார்கள். சங்கராபரணமோ கல்யாணியோ காம்போதியோ... சொல்லக் கூட பெரும்பாலோருக்குத் தெரியாது. பெரியவர் வந்தார்; எங்கள் தெய்வத்தைப் பார்த்தார்; பாட்டு பிறந்தது என்று மகிழ்வார்கள். ஆனந்தனும் அவன் சகாக்களும் தோள்சுமையை வழித் திண்ணையில் இறக்கி வைத்து இந்த அதிசயத்தைக் கேட்டாக வேண்டும்.

கேட்பதற்கொன்றும் கசக்கவில்லை. ஒவ்வொரு முறையும் குருநாதரிடம் வினயமும் பக்தியும் அதிகரிக்கின்றன.

கூடவே, பாடல் ஸ்புரிக்கின்ற உன்னத அனுபவத்தில் பங்கேற்காத ஏக்கம் விச்வரூபமெடுத்து வாட்டுகிறது.

எப்படியிருக்கும் அந்தக் கணம்...?

இலக்கணங்களுக்குள் கட்டுண்டு கிடக்கும சொற்களும் சங்கீதமும் ஒரு கர்த்தாவின் உயிர்க்குரலாக ஒலிக்கிறபோது, என்ன நடக்கும்? மழைநீர் சுமந்த மேகம் இனி சுமக்க இயலாது என்று பொழிவது போல் பொழியுமா? ஒளிக்கிரணம் பட்ட தாமரை மொட்டு மலர்ந்து சிலிர்ப்பது போல் நிகழுமா? நிலத்தைத் தழுவ மீண்டும் மீண்டும் ஓடிவரும் பேரலைகள் போல் மீண்டும் மீண்டும் நிகழும் ஸ்புரிப்பில் எப்படி ஒவ்வொரு பாடலும் தனி அடையாளத்துடன் பிறக்கிறது?

எப்படி... எப்படி...? எப்படி...?

வாட்டுகிறது கேள்வி. பார்த்தவர்களையும் கேட்டவர்களையும் விசாரித்தால் பரவசத்துடன் ஏதேதோ சொல்கிறார்கள். நிலவொளி போல் முகம் பிரகாசிக்க, விழிமலர்கள் நட்சத்திரங்களாக மின்ன அவர் பாடுவாராம்... அவர் எப்போதுமே அப்படித்தான் இருப்பதாக அவனுக்குத் தோன்றுகிறது.


பாடும் போதும், பூஜையிலும் உணவருந்தும் போதும் - இதோ இப்போது தூங்குகிற சமயமும் கூட... ஆனால் பாடல் பிறக்கும் கணத்தின் உயிர்ப்பை அனுபவித்தாலன்றி எப்படி அறிவது? தீக்குள் விரல் வைத்தாலன்றி அதன் தீட்சண்யம் எங்கே தெரியும்! தெரியவில்லை. புரியவில்லை...

அதனினும் கொடுமை, தெரிந்து கொள்ள, புரிந்து கொள்ள சந்தர்ப்பமே வாய்க்கவில்லை... ஏக்கத்தில் ஆனந்தனின் கண்கள் நிறைகின்றன... அவனறியாமல் கண்ணீர்த் துளிகள் குருநாதரின் கூம்பிய தாமரைப் பாதங்களைச் சற்றே ஈரப்படுத்த...

"ஆனந்தா!" விழித்தெழுந்து ஒரு சிறு பிள்ளை போல் துள்ளி அமர்கிறார் முத்துஸ்வாமி தீக்ஷிதர்.

"அழுகிறாயா என்ன...?"

'இல்லை ஸ்வாமி' என்பது போல் தலையாட்டி, "ஆமாம்



கேள்வி. பார்த்தவர்களையும் ஏதேதோ சொல்கிறார்கள்.

சுவாமி'' என்கிறான் ஆனந்தன்.

குருநாதரின் கரம் அவன் தோள் பற்ற, வெற்றுடம்பில் தழும்பு அவர் விரல்களுக்கு ஸ்பரிசமாகிறது...

''இது என்ன...? சுவாமி தூக்கி தூக்கி ஏற்பட்டதா...?''

'ஆமாம்' என்பது போல் அவன் தலையசைக்க, 'மகிழ்ச்சிதானே?' என்பது போல் அவர் பார்க்கிறார்.

ஆனந்தனின் கண்களிலிருந்து நிற்காமல் பெருகும் கண்ணீரைத் துடைக்கிறார்.

''இந்த புண்டரீகவல்லி ரொம்பவும் கொடுத்து வைத்தவள் சுவாமி...''

ஹமீர் கல்யாணியால் அவன் அலங்கரிக்கப்பட்டதைச் சொல்கையில் அவன் கண்ணீர் அதிகரிக்கிறது.

ஆங்கில தினசரி பத்திரிகையான 'பயனீர்' ஞாயிறுதோறும் 'ப்யூச்சர் லென்ஸ்' என்ற தலைப்பில் ஒரு பகுதியை வெளியிட்டு வருகிறது. இதில் பிரபலமானவர்களின் தற்போதைய புகைப்படத்தையும் 30 ஆண்டுகள் கழித்து இதே நபர் எப்படியிருப்பார் என்பதையும் கிராபிக்ஸ் மூலம் கணித்து சேகர் குரேரா என்பவர் வெளியிட்டு வரும் இந்தப் பகுதி மிகவும் பிரபலம். சமீபத்தில் அதில் இடம் பெற்றிருந்த படம் இது. 30 ஆண்டுகள் கழித்து நம்ம முதல்வர் எப்படியிருப்பார்? பாருங்களேன்!



— அ. குமார்.

''மத்தியானம் சிவானந்தமும் பொன்னையாவும் பாடிக் காட்டிக் கொண்டிருந்தார்கள் - இந்த பரிமள ரங்கநாதருக்காக நீங்கள் புனைந்த கீர்த்தனையை... 'புண்டரீகவல்லி நாதம்' என்று பல்லவியின் கடைசி வார்த்தையிலே ஹமீர் கல்யாணியைச் சுருட்டி அடக்கிவிட்டீர்களே சுவாமி...!''

''இல்லை ஆனந்தா! ஹமீர் கல்யாணி ஒரு வற்றாத சுனை. அதில் ஒரு சொம்பு மொண்டிருக்கிறேன். அவ்வளவே! காசியிலே உஸ்தாதுகள் பாடக் கேட்டிருக்கிறேன்... நட்சத்திரங்களைக் கோத்து தோரணம் நாட்டியதுபோல் ஜகஜாலமாயிருக்கும். இங்கே நம்முடைய ஆலயங்களின் சான்னித்தியம் அதை விளக்குச் சுடராக மாற்றி விடுகிறது...''

''இன்றைக்கு நீங்கள் ஏற்றிய புது தீபத்தில் அவன் முகம் தனிப்பொலிவு கொண்டிருக்கிறது பார்த்தீர்களா சுவாமி...? திரு இந்தளூர் என்ற இந்த ஊரின் பெயருக்கு ஏற்ப திருமகளின் இந்து வதனம் பிரகாசிக்கிறது. பரிமளரங்கன் துயில் கலைந்து மலர மலர அவனை விழித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறான்... வந்து பாருங்கள் சுவாமி...''

அவர் கரம் பற்றி இழுக்காத குறையாக எழுப்புகிறான். சிரித்தபடி எழுந்து அவனுடன் நடந்தவண்ணம் அவர் பேசுகிறார்.

''பரிமளரங்கன் வீரசயனன் ஆனந்தா! விழி மலர்ந்தேயிருப்பான். இந்தளூர் என்று பெயர் வந்தது சந்திரனுக்குச் சாப விமோசனம் கிடைத்ததால். என்னுடைய பாடலினால் அரங்கனும் வல்லியும் அழகு பெற்றதாகச் சொல்வது உன் ரசனையிலும் பக்தியிலும் பிறந்த கற்பனை. அதுவும் அழகாய்த்தானிருக்கிறது.''

அழகான ஆலயத்தின் கருவறை நோக்கி அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள்.

''என் கற்பனை கிடக்கட்டும் சுவாமி! சந்திரனின் சாபம் தீர்ந்தது போல் என் சாபமும் இந்த திருத்தலத்தில் தீருமா...?''

திடுக்கிட்டு நின்றார் தீக்ஷிதர். ''என்ன சொல்கிறாய் மகனே?''

''உங்களிடம் வந்து எத்தனை காலமாயிற்று என்று நான் எண்ணவில்லை சுவாமி. அந்த கணக்கு என் தோள் வடுவுக்குத் தெரியும்... ஆனால், இருந்த காலத்தில் கணக்கில்லாமல் நீங்கள் கீர்த்தனைகள் புனைந்திருக்கிறீர்கள்... ஒருமுறை... ஒரே ஒருமுறை கூட பாடல் பிறக்கும் கணத்தில் நான் உங்கள் பக்கத்தில் இருந்ததில்லை சுவாமி! அந்த அனுபவ மேன்மைக்கு ஏங்குகிறேன்...'' குரல் நடுங்கினாலும் ஆனந்தனின் வார்த்தைகளில் தீர்க்கம்.

கருவறையை அடைந்திருந்தார்கள். ஆனந்தன் இரு கரங்களால் முகம் பொத்திக் குலுங்கி அழுவதை ஒருகணம் புதிருடன் பார்த்துவிட்டு, பட்டர் சாயரட்சை ஆராதனத்தைத் தொடர்ந்தார்.

வீரசயனனாக விழிமலர்ந்து துயில் கொண்ட பரிமளரங்கநாதன், இதெல்லாம் என் திருவிளையாடலல்ல; அல்லவே அல்ல...

என்பது போன்ற கள்ளப் புன்னகை பூப்ப தாகப் பட்டது குருநாதருக்கு. அவன் பாதத்தில் புண்டரீகவல்லி இணையற்ற மந்த காசம் சிந்தும் முகத்துடன் அமர்ந்திருந்தாள். அரங்கன் திருமேனியையும் வல்லியின் வதனத்தையும் அலங்கரித்த நகைகள் அந்த இரு முகங்களின் புன்னகையிடம் தோற்று மகிழ்ந்து கொண்டிருந்தன.

துழாய் மணமும் கற்பூர நெடியும் மஞ்சள் காப்பும் சந்தனமும் இழையும் வாசனையு மாக கருவறை பரிமள சுகந்தங்களால் நிறைந்து சுழன்றது.

குருநாதர் ஆனந்தனின் முகத்தை மறைத்த கைகளை அகற்றினார். வீணை மீட்டும் குரலில் பாடினார்.

"பரிமள ரங்க நாதம் பஜேஹம் வீர நுதம் பரிபாலித பக்தம் புண்டரீக வல்லி நாதம்..."

- ஹமீர் கல்யாணியில் எழுந்தது பல்லவி.

ஆனந்தன் மூச்சைப் பிடித்து நிறுத்திக் கொண்டு கேட்டான். காலையில் பொன் னையா பாடக் கேட்ட அதே வார்த்தை களல்லவா!

ஆனால் இது வேறு ஹமீர்கல்யாணி. வற்றாத சுனையிலிருந்து வேறொரு சொம்பு கொண்டு மொண்டெடுக்கிறார்...

''ஹரிமப்ராக்ருதாக்ருதிம்... மத்ஸ்யாதி தசாக்ருதிம்...'' அனுபல்லவியை விடுத்து சமஷ்டி சரணத்துக்கு முன்னேறி... அவனது தசாவதார மகிமையைப் பாடுகிறார்.

''அந்தரங்க சயனம் அப்ஜநயனம் நாரா யணம்...''

- ஆனந்தனின் கண்கள் அகல விரிந்து குருநாதரின் முகத்தை நோக்கின. பாடல் பிறந்து கொண்டிருக்கிறது...

''குருகுஹ விதிதம் ஸததம்...'' முத்திரை பதிக்கும் சொற்கள் அவர் அதரங்களிலிருந்து வெளிப்பட...

நம்ப முடியாத ஆச்சர்யத்துடன் அரங் கனையும் குருநாதரையும் மாறி மாறிப் பார்த்தான்.

அரங்கன் கண்மலர்களின் கடாக்ஷத்தில் குருநாதர் மெய்மறந்து கண்மூடிப் பாடிக் கொண்டிருந்தார். உயிரை உருக்கித் துளித் துளியாய் *ஹமீர் கல்யாணியில் அவர் பொழிய, அது புஷ்பகவிமானமாகி அந்த ஜீவாத்மாவைப் பரம்பொருளிடம் கொண்டு சேர்த்தது.

மாற்றான் தோட்டம்

''வாஜ்பாய், அத்வானி ஆகிய இருவரும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாகத்தான் காட்சி தருகிறார்கள், இந்தியாவை அதன் உண்மையான தன்மையோடு வெளிக்காட்டும் விதத்தில். வாஜ்பாய் இந்தியாவின் மிதவாத முகத்தைக் காட்டுகிறார் என்றால், அத்வானி உணர்ச்சிக் குவியலின் வெளிப்பாடாக இருக்கிறார். இன்றைய சூழலில் இந்த இரு பக்கங்களுமே இந்தியாவுக்கு அவசியம் என்பதைப் பலரும் ஒத்துக் கொள்வார்கள். பொதுவாக மென்மையாகவே இருக்கப் பிரியப்படும் இந்தியா, அளவுக்கு மீறி சீண்டப்பட்டால் மிகவும் தீவிரமாகவே அதை எதிர்கொள்ளும் என்பதை உலகிற்கு மிகத் தெளிவாக எடுத்துக்காட்ட வேண்டிய நேரம் இது. அத்வானி இதைத்தான் இப்போது செய்துவருகிறார்.''



'தி வீக்' - எஸ்.பாலகிருஷ்ணன், ஜாம்ஷெட்பூர்.

அந்த ஆன்ம விவாகத்தின் தரிசனம் ஆனந்தனைச் சிலிர்ப்பிலாழ்த்தியது. அவ னது ஏக்கங்களை விரட்டி, ஆனந்தத்தில் நிறைத்தது.

''பரமேச்வரம் ரமேச்வரம் மேச்வரம் ஈச்வரம்...'' சொல்லடுக்கில் தோய்ந்து ஹமீர் கல்யாணி திருவாராதனம் முடிந்தது. சிஷ்யன் குருநாதரின் பாதம் நோக்கிக் குனிந்தான்.

''வேண்டாம் ஆனந்தா...! கோவிலில் பகவானைத்தான் நமஸ்கரிக்கலாம்...'' குருநாதர் அவனைத் தடுத்து எழுப்பினார்.

புண்டரீகவல்லியும் பரிமளரங்கநாதரும் அர்த்தம் பொதிந்த புன்னகைகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

* மார்ச் 19 முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஜெயந்தி. 'பரிமள ரங்கநாதம்' என்று தொடங்கும் இரு கீர்த்தனைகளை ஹமீர் கல்யாணி ராகத்தில் இயற்றியுள்ளார் தீக்ஷிதர்.



போலிச் சாமியார் என்று சொல்வானேன், பொல்லாப்புத் தேடிக் கொள்வானேன் என்று சன் நியூஸ் நினைத்தது சாமர்த்தியம்தான். 'குறி சொல்லும் சாமியார்கள்' என்று தலைப்புப் போட்டுக் கொண்டு, பல ஊர்களில் உள்ள நம்ப முடியாத நபர்களைத் தொகுத்து வழங்கினார்கள்.

ஒருவர், தாம் ஆஞ்சனேயரின் அவதாரம் என்று சொல்லிக் கொள்கிறார். மடேல் மடேல் என்று தேங்காயை உடைத்து விழுங்குவதும், வாழைப் பழத்தைச் சீப்போடு உள்ளே தள்ளுவதும் பயங்கரமாகப் பல்லைக் காட்டி புர்புர்ரென்று சீறுவதுமாகத் திகழும் இவரைக் 'குரங்குச் சாமியார்' என்று அழைக்கிறார்களாம்.

இன்னொருவர், சாராயச் சுருட்டு சகிதம்; இவரை 'பீர் சாமியார்' என்கிறார்கள். மற்றொருவர் வெறும் கையில் விபூதி வரவழைக்கிறார். இன்னொருவர், ஒரு தர்ப்பைக் கட்டைக் காதருகே டெலிபோன் மாதிரி வைத்துக் கொண்டு, சிங்கப்பூர் மலேசியாவிலிருந்தெல்லாம் செய்தி வருவதாகச் சொல்கிறார்.

இவருக்கு 'எஸ்.டி.டி. சாமியார்' என்று பெயர்.



மக்களின் அறியாமையை எண்ணி வேதனைப்படக் கூடாது. All our loves, all our hero-worships, all our visions of fortunes are the fruits of ignorance என்றார் அறிஞர் ஹிலேரி பெல்லாக்.

எல்லாச் சேனல்களிலும்தான் அன்றன்றைய ராசி பலன்களையும் ஜோதிட சாத்திரம் பற்றிய சில விவரங்களையும் சொல்கிறார்கள். ஆனால் காழியூர் நாராயணன் அன்று ஜெயாவில் செய்த மாதிரி யாரும் அதிர்ச்சியூட்டியதில்லை.

நிகழ்ச்சிக்கு முன்னுரையாக ஒரு நெருடலான சம்ஸ்கிருத சுலோகத்தை நீளமாக வழங்கியபின், அதன் பொருளைக் கூறினார். அது யாதெனில் : 'வாழ்க்கையில் சொந்த முயற்சியால் முன்னுக்கு வருவது உத்தமம். தம்பியின் உதவியினால் வருவது மத்திமம். மாமன் மூலம் முன்னுக்கு வருவது மட்டம். மாமனார் மூலம் முன்னுக்கு வருவது மகா மட்டம்.'

கூறி முடித்த காழியூரார், 'ஆகவே புதிதாகத் தொழில் தொடங்க நினைத்திருப்பவர்கள் மாமனாரின் உதவியை நாட வேண்டாம். மாமனார் உதவி வேண்டவே வேண்டாம்,' என்று அடித்துச் சொன்னார்.

உலக மாமனார்களே, ஒன்று படுங்கள், மேற்கண்ட மகா வாக்கியத்தை எழுதி வைத்துக் கொள்ளுங்கள். Life does not come with a cheque book - that is why we have fathers-in-law என்ற எண்ணத்தோடு வருகிற மாப்பிள்ளைகளிடம் இதைக் காட்டி விரட்டியடியுங்கள்.

திருவனந்தபுரம் அனந்த பத்பநாபசுவாமி எப்படிக் கால் நீட்டி ஹாயாகச் சயனித்திருக்கிறாரோ அது போலவே கேரள அரசும் ஊழியர்களின் வேலை நிறுத்தத்தைப் பற்றிக் கவலைப்படாமல் இருந்த சூழ்நிலையில்-

திருவனந்தபுரம் மிருகக்காட்சி சாலையில் பணியாற்றும் சில தொழிலாளிகள் தங்கள் வயிற்றுப் பசியை மறந்து சிங்கம் புலி முதலிய விலங்கு



களின் பசியைத் தீர்ப்பதில் அக்கறை காட்டியது ஆச்சரியமான விஷயம். 'வேலை நிறுத்தம்தான். ஆனால் வாயில்லா ஜீவன்கள் பட்டினி கிடக்கக் கூடாதே!' என்றார்கள் இவர்கள். (ராஜ் செய்தி). Out of the crooked timber of humanity no straight thing can ever be made என்று கூறிய ஜெர்மன் தத்துவஞானி இமானுவேல் காண்ட்டுக்குச் சவுக்கடி!

கூண்டுக்குள் இரை எறிந்து கொண்டிருந்த ஓர் ஊழியரிடம், ஸ்டிரைக்கினால் சம்பளம் இழந்து கொண்டிருக்கிறீர்களே?' என்று கேட்டதற்கு, 'பரவாயில்லை. இந்த மிருகங்கள் சந்தோஷமாயிருப்பதைப் பார்த்தாலே சம்பளம் வாங்கின திருப்தி ஏற்படுகிறது', என்றார்.

மனிதாபிமானமே மங்கிக் கொண்டிருக்கும் காலத்தில் இப்படியொரு மிருகாபிமானமா!

வினோத்

சார்லி மூச்சு விடாமல் ஒரு நீண்ட வசனம் பேசினார் என்று இரண்டு வாரங்களுக்கு முன் இந்தப் பகுதியில் வெளியான செய்தியைப் படித்த பலர், அது என்ன அப்படிப்பட்ட வசனம் என்று கேட்கிறார்கள். இதோ அது : (தெருக்கூத்து நிகழ்ச்சியில் ராமர் சீதையிடம் சொல்கிறார்)

வண்ண உடுப்பழகி, இஞ்சி இடுப்பழகி, வனவாசம் உனக்கு ஒத்து வராது; நீயோ மன்னன் மகள். மயிலிறகுபோல் மென்மையானவள். அது மட்டுமா? மாணிக்கம், மரகதம், வைரம், வைடூரியம், பசும்பொன், புது வெள்ளி மற்றும் முத்திலம், ரத்தினம், பவளம், புஷ்பராகம், சூரியகாந்தம்,

எஸ்.டி.டி. சாமியார்!



சந்திரகாந்தம், கோமேதகம், குன்றிமணி மற்றும் ராக்கொடி நெற்றிச் சுட்டி, புல்லாக்கு, லோலாக்கு, தோடு, தொங்கட்டான், மேகலை, மூக்குத்தி, காசுமாலை, கண்டகாம் மற்றும் முத்து வளை, ரத்தினவளை, தங்கவளை, வங்கி வளை, வைர வளை, கருகவளை, என அணிந்தவளை, என்னைக் கவர்ந்தவளை, மாலையிட்டு மணந்தவளை, ஒன்றாய்க் கலந்தவளை, கனிந்தவளை, சிவந்தவளை, சிரித்தவளை, மர உரியும் மணிமாலையும் கொஞ்ச, வனத்துக்கு அழைத்துச் செல்ல என் மனத்துக்குத் துணிவில்லையே, தேவி! என் செய்வேன், ஐயகோ!

படித்து முடித்த அன்பரே! Now return to your normal rate of breathing.

சுவடுகள் - 10

ஒரு 'பேட்டி'ச் செய்திகள்

திருப்பூர் கிருஷ்ணன்



• சசிதர்

உரைநடை சார்ந்த இலக்கியங்களான சிறுகதை, நாவல் போன்றவை வாழ்வின் உள்ளார்ந்த தத்துவங்களை மறைமுகமாய்ப் பேசுபவை. ஆனால் பேட்டியோ, பேட்டி கொடுப்பவரது வாழ்க்கைப் பார்வையை வெளிப்படையாக, நேரடியாகவே பேசிவிடுகிறது. தெளிந்த நீரோட்டத்தில், கீழே தென்படும் கூழாங்கற்களெல்லாம் பளிச்செனத் தெரிகிற மாதிரி பேட்டி, கருத்துக்களை அப்பட்டமாக முன் வைக்கிறது. சிறுகதையும் நாவலும் பெரிதும் கற்பனை சார்ந்து இயங்குகிறபோது, பேட்டி முற்றிலும் உண்மை சார்ந்து இயங்குகிறது என்பதே அதன் பெரிய பலம்.

பம்பாய் படம் வந்த புதிது. அந்தப் படம் குறித்து ஒரு பேட்டியில் இளவரசர் ஆற்காடு நவாப் சொன்னார்: "ஒரு இந்து இளைஞன் ஒரு முகமதியப் பெண்ணைக் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்கிறான் என்றால் அது அவர்களின் தனிப்பட்ட விஷயம். ஆனால் இத்தகைய கலப்புத் திருமணங்களால் மொத்தமான இந்து முஸ்லிம் ஒற்றுமை ஏற்படப் பல நூற்றாண்டுகள் ஆகும். ஓரோர் இந்து இளைஞனும் ஒவ்வொரு முகமதியப் பெண்ணையும், ஒவ்வொரு முகமதிய இளைஞனும் ஓரோர் இந்துப் பெண்ணையும் சகோதரி என்று நினைக்கிற மனப்பக்குவம் ஏற்படுமானால் அப்போது இந்து முஸ்லிம் ஒற்றுமை கலப சாத்தியமானதாகிவிடும்."

எவ்வளவு தெளிவான சிந்தனை! இதை மட்டும் நடைமுறைப்படுத்த முடிந்தால், பிறகு நாட்டில் ஏது இந்து முஸ்லிம் கலவரங்கள்!

ஹெலன்கெல்லர் வாழ்க்கைச் சரித்திரத்தைப் படித்துப் படித்து ஆச்சரியப்பட்டிருக்கிறேன். உலகின் மகத்தான அதிசயம் அவர். பார்வையற்ற, காது கேளாத, வாய் பேசாத அந்தப் பெண்மணி கடுமையாக உழைத்து நோபல் பரிசு பெறும் அளவு உயர்ந்தார் என்றால் அவரது சாதனையின் பெருமையை என்னவென்பது! உடல் ஊனமுற்றோரின் சாதனைகளை முன்னிலைப்படுத்தி அவர்களையும் அவர்களுக்கு உதவுபவர்களையும் பேட்டி கண்டு, நான் பணிபுரிந்த இதழ்களில் ஆண்டுக்கொருமுறை 'தன்னம்பிக்கைச் சிறப்பிதழ்' வெளியிட்டேன். பார்வையற்றவர்களுக்கு நூலகம் நடத்தும் கண்ணன் உள்படப் பலரது பேட்டிகள் நெஞ்சைத் தொட்டன. ஊனமுற்றோர் மேல் மிகுந்த அக்கறை செலுத்தும் எழுத்தாளரும் சமூக சேவகியுமான லதா ராமகிருஷ்ணன் இச்



• பாலசுப்பிரமணியன் மனைவி ரமா மற்றும் மகனுடன்...



• கெல்லர்

சிறப்பிதழ்களை வடிவமைக்கத் தாமே முன் வந்து உதவி புரிந்தார்.

உடல் ஊனத்தைப் புறந்தள்ளி, கடும் உழைப்பால் வாழ்க்கையில் காலூன்றிய ஹெச். ராமகிருஷ்ணன் தம் பேட்டியில் சொன்னார்: 'என் அம்மாவைவிட என் மனைவியை அதிகம் நேசிக்கிறேன். காரணத்தை அம்மாவிடம் சொன்னேன். அம்மாவும் ஒப்புக் கொண்டார்.'

அப்படியென்ன காரணம்?

'என் அம்மாவுக்கு சாய்ஸ் கிடையாது. ஆனால் என் மனைவிக்கு சாய்ஸ் இருந்தது. அப்படியிருந்தும் அவர் என்னைத் தேர்ந்தெடுத்தாரே!'

இந்தக் கண்ணோட்டத்தில் எப்போதாவது யோசித்திருக்கிறோமா?' அந்த பதிலை வாசித்த பிறகு, ஊனமுற்றோரது வாழ்க்கைத் துணையைப் பார்த்தால் கையெடுத்துக் கும்பிடத் தோன்றுகிறது. கண் பார்வையற்ற கலாக்ஷேத்ரா புல்லாங்குழல் வித்வான் சசிதரின் மனைவி சாரதா, ஊனமுற்றவரைத்தான் திருமணம் செய்துகொள்வது என இளம் வயதிலேயே முடிவு செய்தவர். சிட்டி கேப்ஸ் லால்குடி நாராயணனின் வாய் பேச இயலாத புதல்வர் பாலசுப்பிரமணியம், அதே வகை ஊனமுள்ள பெண்ணைத் தான் மணப்பேன் எனப் பிடிவாதம் பிடித்து, ரமா என்ற பெண்ணை மணந்தவர்.

கடந்த காலங்களில் என்னால் பேட்டி காணப்பட்டவர்களின் பட்டியல் மிக நீண்டது. ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் உள்ளிட்ட மடாதிபதிகள், சிவாஜி கணேசன் உள்ளிட்ட திரை நட்சத்திரங்கள், வீணை பாலசந்தர், லால்குடி ஜயராமன், உமையாள்புரம் சிவராமன் போன்ற இசைக்கலைஞர்கள், கோமல் சுவாமிநாதன் போன்ற நாடகக் கலைஞர்கள், காமராஜ் போன்ற அரசியல் தலைவர்கள், தி. ஜானகிராமன், தொ.மு.சி. ரகுநாதன் போன்ற ஏராளமான எழுத்தாளர்கள்... என இன்னும் அடுக்கிக்கொண்டே போகலாம்.

உண்மையாகவே மனந் திறந்து பேசும் ஒரு சாதனையாளரைப் பேட்டி கண்டால், இன்னொரு முழு வாழ்க்கை வாழ்ந்த நிறைவு ஏற்படும். அந்த சாதனையாளரை மனந் திறந்து பேசுமாறு செய்வதில் தான் நம் சாமர்த்தியம் இருக்கிறது.

பிரமுகர்கள் பல ரகம். நாம் சொல்வதைத் திரித்துப் போட்டு விடுவானோ என்ற சந்தேகத்தோடு பேசுபவர்கள், பேட்டி வெளிவந்த பிறகு, சொன்ன கருத்துக்களின் விளைவுகளைச் சந்திக்கப் பயந்து 'நான் அப்படிச் சொல்லவே இல்லையே!' என்று ஆணித்தரமாக மறுத்து, அனுபவித்துப் பொய் சொல்பவர்கள், தற்பெருமை தவிர வேறெதுவும் அறியாத பரிதாபத்திற்குரிய ஜீவன்கள், தன்னடக்கத்தால் நம்மைப் பிரமிக்க வைக்கும் உத்தமர்கள்...

மேலே பெயர் சொல்லப்படாத ஒரு துறவியைப் பேட்டி கண்டேன். 'தம் படம் கறுப்பு வெள்ளைப் படமாக வந்துவிடக் கூடாது, வண்ணப் படமாகவே வர வேண்டும்' என மறுபடி மறுபடி வற்புறுத்தினார் அந்த முற்றும் துறந்த துறவி! அதன் பொருட்டுத் தம் சீடரையும் தூதனுப்பினார். படத்திற்காகப் படபடத்த அந்தத் துறவியின் (!?) வண்ணக் கனவைக் கலைக்க முடிவு செய்து, படமே இல்லாமல் பேட்டியை வெளியிட்டு நிறைவடைந்தேன்.

ஏ.என். சிவராமன் அழைத்துக்கேட்டார், ஏன் படம் இடம் பெறவில்லை என்று. துறவி மேலிடம் வரை செல்வாக்குள்ளவர். ஆனால் மேலிடம் என் மேல் அன்பைப் பொழியும் இடம் என்பதும், என் தரப்பு நியாயங்களை முழுவதுமாக ஏற்கும் இடம் என்பதும் அவர் அறியாதது. நான் படம் வெளியிடாத காரணத்தைச் சொன்னேன். ஏ.என்.எஸ். சப்தம் போட்டுச் சிரித்தவாறே செல்லமாய் என் முதுகில் ஒரு தட்டுத் தட்டிப் பாராட்டினார். 'ஆனாலும் பத்திரிகைகளில் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் படங்களை வெளியிடத்தான் வேண்டும். அதனால் இரண்டு பிரயோஜனங்கள் உண்டு' என்றார் நமட்டுச் சிரிப்புடன். 'ஒரு பிரயோஜனம், பத்திரிகை நிறையப் படங்களுடன் இருந்தால் பார்க்க நன்றாக இருக்கும். அதென்ன இரண்டாவது பிரயோஜனம்?' ஆவலாய்க் கேட்டேன். 'எத்தனைக்கெத்தனை அதிகப் படங்கள் வெளியிடுகிறோமோ அத்தனைக்கத்தனை எழுத்துப் பிழைகள் குறையுமல்லவா?' என்றார் அவர்! நாங்கள் இருவரும் சேர்ந்து சிரித்தோம்.

(தொடரும்)

கதவு மூடியிருந்தது. தாளிடப்படவில்லை. தட்டும்போதே கோபம் வந்தது. பார்த்துப் பார்த்துக் கட்டிய வீடு. அதன் ஒரு அறைக்குள் நுழைய எனக்கு அனுமதி தேவைப்படுகிறது!

"வரலாம்" என்று குரல் கேட்டது. மனேஜை உணர்த்தும் சுரேஷின் உடைந்த குரல்.

இன்று எப்படியும் விவரமாகப் பேசிவிட வேண்டும்.

''என்னப்பா?'' என்றான். குரலில் இலேசான அலுப்பு தென்பட்டு என் 'தானை' உசுப்பியது.

''ஏதாவது காரணம் இருந்தால்தான் உன் ரூமுக்குள்ளே வரணுமா?''

உட்கார்ந்தபடியே என்னைப் பார்த்தான். எனக்குத்தான் உட்கார இடமில்லை. கட்டிலில் அவனைச் சுற்றிப் பல புத்தகங்



என் கூடு என் விருப்பம்

அருண் சரண்யா

கள். நடுநடுவே சி.டிக்களும் ஒலிநாடாக்களும். முதுகை அசௌகரியமான ஒரு கோணத்தில் சாய்த்துக் கொண்டு ஏதோ பாடத்தை எழுதிக் கொண்டிருந்தான். அறை மூலையில் அந்த மேஜை பயனின்றிக் கிடந்தது. அதன் மேலும் பல பொருள்கள் ஒழுங்கின்றிக் கிடந்தன. போன வருடம்தான் அதிக விலை கொடுத்து வாங்கிய தேக்குமர மேஜை. பொறியியல் கல்லூரியில் சேர்ந்திருக்கும் மகனுக்கு இது கூடச் செய்யாவிட்டால் எப்படி? அதற்கேற்ற வசதியான உயரம்கொண்ட நாற்காலியும் வாங்கினேன். மனைவிக்குக் கொஞ்சம் அசம்மதம். 'சுரேஷையும் ஒருவார்த்தைக் கேட்டுடலாமே' என்றாள். மறுத்துவிட்டேன். ''எதுக்குப்பா வீணா?'' என்பான். சர்ப்ரைஸ் கொடுக்க நினைத்தேன்.

ஆனால் விவரம் அறிந்தபோது எந்த உணர்ச்சியும் இன்றி ''தாங்க்ஸ்'' என்றான். ஆனால் மேஜையை அவன் எழுதப் பயன்படுத்தி நான் பார்க்கவே இல்லை.

"மேஜையிலே வைச்சுக்கிட்டு எழுதலாமே சுரேஷ்?''

"ஏன், இதுவே வசதியாத்தான் இருக்கு."

"அறை ஒட்டடை படிஞ்சிருக்கே. ஒழுங்கா வைச்சுக்கக் கூடாதா?''

"ஒழுங்கான்னா?'' என்று அவன் கேட்டதும் மீண்டும் எரிச்சல் தலைதூக்கியது.

"அதை அதற்கான இடத்தில் வைப்பது'' என்றேன்.

''என்னைப் பொறுத்தவரை இந்த இதற்கான இடம்தான்'' என்றான்.

அவமதிப்பு. "என்னடா மரியாதையில்லாமல்?'' என்று உரத்துக் கேட்டதும், 'இதான் உங்கக்கிட்டே' என்பதுபோல் ஒரு முகச் சுளிப்புடன் "நான் எந்த விதத்திலும் உங்களை அவமதிக்கலே'' என்றான்.

''அப்ப நானேதான் இந்த ரூமுக்கு வந்து உன் அவமதிப்பைக் கேட்டு வாங்கிக்கிட்டேன்றியா?''

தான் எழுதிக் கொண்டிருந்த நோட்டுப் புத்தகத்தை விசையுடன் மூடினான். பேனாவை அந்த மெத்தையின் மூலையில் வீசியெறிந்தான். ஒரு நிமிடம் மௌனமாக இருந்துவிட்டு "எனக்கு அழகு முக்கியமில்லே. வசதிதான் முக்கியம். இப்படி இருந்தால்தான் எனக்கு வேண்டியதைச் சட்டுனு எடுக்க முடியுது'' என்றபடி எதிரிலிருந்த சுவரை உற்றுப்பார்த்தான்.

அதில் ஒரு பெரிய போஸ்டர் - "இது என்கூடு. என் விருப்பம். இதை எப்படியும் வைத்துக் கொள்வேன்'' என்ற ஆங்கில வாக்கியங்கள்.

தொடர்ந்தால் ரசாபாசமாகி விடும். கட்டுப்படுத்திக் கொண்டு கூடத்துக்குப் போய் உட்கார்ந்தேன். அந்தப் போஸ்டரை நேற்றுவரை சுரேஷின் அறையில் பார்த்ததாக நினைவில்லை. எனக்காகவே வாங்கிக் கொண்டு வந்தானோ?

இதே போஸ்டரை வேறெங்கோ பார்த்த நினைவு வந்தது. பின் அந்த இழை சட்டெனப் பிடிபட்டது. ராஜலட்சுமியின் வீட்டில். சில வருடங்களுக்குமுன்.

அலுவலக ஆடிட்டிங்கிற்காக நாகர்கோவிலுக்குப் போனபோது உண்டான எதிர்பாராத சந்திப்பு.

'சேது, நீங்களா?' என்று வியப்பைக் காட்டி என்னை அடையாளம் கண்டு பிடித்தது அவள்தான்.

வீட்டுக்கு வந்தே ஆகவேண்டுமென்று அடம் பிடித்தாள். ஒரே தெருவில் வசித்தவர்கள். ஒரே பள்ளியில் படித்தவர்கள். நான் சீனியர், அவ்வளவே. எனக்கு இருபது வயதிலேயே கல்யாணமாகிவிட்டது. ('நான் கண்ணை மூடறதுக்குள்ளே உன்னைக் கல்யாணக் கோலத்திலே பாக்கணுண்டா' என்ற அம்மா.) ஆனால் சுரேஷ் பிறந்து ஆறேழு வயதானபிறகும் ராஜலட்சுமி கல்யாணம் செய்து கொள்ளவில்லை. பின் அலுவலகத்தில் பதவி உயர்வு பெற்று நாகர்கோவிலுக்கு வந்துவிட்டாள்.

இடையில் திருமணம் நடந்திருக்கவேண்டும். அவளது கழுத்தில் தொங்கிய தாலி

சட்டென்று மனத்தில் பதிந்ததற்குக் காரணம் அது வழக்கத்தைவிடப் பருமனாக இருந்தது மட்டுமில்லை, வேறெந்த நகையையுமே அவள் அணிந்திராததும்தான். சின்ன வயசிலேயே அவளுக்கு நகைகளின் மேல் வெறுப்பு. நீ ஒரு பெண்ணா?' என்று கேட்டால், 'சந்தேகமென்ன? புடைவைகள்னா எனக்கு உயிராச்சே' என்று சிரிப்பாள்.

இந்த இடைப்பட்ட வருடங்களில் என்னென்ன நடந்திருக்கும் அவள் வாழ்க்கையில்? திருமணத்தைத் தவிர? பெற்றோர்கள் இருக்கிறார்களா? குழந்தை உண்டா?

கடைசிக் கேள்விக்கு வீட்டுக்குள் நுழையும்போதே விடை கிடைத்தது. 'அம்மா' என்று ஓடி வந்த ஆறுவயதுச் சிறுவன் என்னைக் கண்டதும் தயங்கினான். அடுத்த கால்மணி



''நம்ம காதல் நிச்சயமா கல்யாணத்துல முடியும்னு எனக்கு நம்பிக்கை இருக்கு உமா. உனக்கு?...''

''எனக்கு மூட நம்பிக்கையெல்லாம் கிடையாது பாலு.''

— ஆரூர் சரோ

நேரத்தில் பெரிய பிஸ்கட் பாக்கெட், சின்னச் சின்ன ஜோக்குகள், அவன் வரைந்த ஓவியத்தைக் கண்டு நான் வெளிப்படுத்திய அதிகப்படி பிரமிப்பு ஆகியவை அவனை என்னிடம் ஒட்ட வைத்துவிட்டன.

புகைப்படத்தில் ராஜலட்சுமியும் அவளது கணவரும் காட்சி தந்தார்கள். அற்புதமான பொருத்தம்.

“அப்பா எப்போ வருவாரு?” என்றவுடன் “இப்பதானே செவ்வாய்கிழமை. சனிக்கிழமைதான் வருவாரு” என்றான் சிறுவன் உடனடியாக.

ராஜலட்சுமியைப் பார்த்து ''ஏதாவது ஆபீஸ் டூரா?'' என்றேன். “அரைமணி நேரத்திலே சாப்பாடு தயாராயிடும்'' என்றபடி உள்ளே போனாள்.

''வெத்தலையெல்லாம் வேணாம்'' என்றவுடன் அவளும் எதிரிலிருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டாள். இவ்வளவு குறைவான நேரத்தில் இவ்வளவு திருப்திகரமான, வெரைட்டியான விருந்தை சமைப்பது சுலபமல்ல. ராஜலட்சுமி பலவிதங்களில் கெட்டிக்காரிதான்.

“அம்மா, நான் ரவி வீட்டுக்குப் போயிட்டு வரேன், வரேன் அங்கிள்” என்றபடி கிளம்பினான் அவள் பையன். அருகிலுள்ள அவனது சிநேகிதனாக இருக்க வேண்டும். “பத்து நிமிஷத்திலே வந்துடு” என்ற ராஜலட்சுமியின் குரல், வாசலைக் கடந்துவிட்டிருந்த அவனது காதில் விழுந்திருக்குமா என்பது சந்தேகம்.

''நானும் கிளம்ப வேண்டியதுதான்'' என்றேன்.

''கேள்விக்குறியோட போகவேண்டாம் சேது'' என்றவள் குரலை மேலும் தழைத்துக் கொண்டாள். “சனிக்கிழமையிலேதான் அவர் இங்கே வர முடியும். அங்கேயும் ஒரு பெரிய குடும்பம் இருக்கே. மூத்தவ அதுக்குமேலே அனுமதிக்கமாட்டா. மத்தபடி நல்ல மனுஷர். திருப்தியாதான் இருக்கேன்'' என்றபோது அனிச்சையாக அவளது கை திருமாங்கல்யத்தைத் தொட்டது. பாதுகாப்பில்லாத உணர்வு? சட்ட அங்கீகாரம் இல்லாத அந்த மஞ்சள் கயிற்றால் என்ன அங்கீகாரம் அவளுக்குக் கிடைத்துவிடும்?

ஆதங்கத்தை வெளிப்படுத்த நினைத்தபோது 'எல்லாமே எல்லாருக்குமே கிடைத்து விடுவதில்லை சேது' என்றபடி கூடத்திலிருந்த அந்தப் போஸ்டரின் பக்கம் கண்களை ஓட்டினாள். “என் கூடு, என் விருப்பம்.”

“ஏதுக்கு இப்படி ரொம்ப நேரமா பிரமை பிடிச்ச மாதிரி இருக்கீங்க?” என்ற மனைவியின் குரல் உலுக்கியது.

''சுரேஷ் நடந்துக்கறது கொஞ்சமும் சரியில்லே'' என்றேன். ''உங்க தகராறைக் கேட்டுக்கிட்டுத்தானிருந்தேன். இதையெல்லாம் பெரிசு படுத்த வேண்டாம்'' என்றாள்.

''அவன் ரூமைப்போய்ப்பாரு. அப்புறம் பேசு'' என்றேன் ஆற்றாமை அடங்காமல்.

“பார்த்தது மட்டுமில்லே. அவன் அறையை ஒழுங்குபடுத்திட்டுதான் வரேன்.”

என் அதிர்ச்சியை முகத்தில் அவள் படித்திருக்க வேண்டும். “நீங்க அவனை ஒழுங்குபடுத்தச் சொன்னீங்க. வாதம் பண்ணினான். நான் ஒழுங்குபடுத்திட்டு வந்தேன். மௌனமா ஏத்துக்கிட்டான்” என்றபடி நகர்ந்தாள்.

அவன் அறையிலிருந்த போஸ்டர் வாசகங்கள் மீண்டும் நினைவுக்கு வந்தன. அடுத்த கணமே ராஜலட்சுமியை நினைத்துப் பரிதாபமேற்பட்டது. யாரால் சரி செய்ய முடியும்? ○



விளையாட்டுப் போக்கு!



• டிசோசா

கோலாலம்பூரில் கோலாகலமாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன பத்தாவது உலக ஹாக்கி கோப்பைப் போட்டிகள். இந்தியாவைப் பார்த்து புன்னகை செய்ய வெற்றி தேவதைக்கு மனமில்லை. இங்கிலாந்து, மலேசியா, ஆஸ்திரேலியா ஆகிய மூன்று அணிகளிடம் நம் ஆட்கள் தோற்றுவிட, அரை யிறுதிச் சுற்று வாய்ப்பையே பறிகொடுத்துவிட்டு, முழித் துக் கொண்டிருக்கிறது நம் அணி.

பழைய ஒலிம்பிக் தங்கத் தைப் பற்றிப் பேசி பெரு மூச்சு விட்டபடி சமீபத்திய ஹாக்கி தோல்விகளை அசைபோடுவது நமக்கு ஒன்றும் புதிதல்ல. ஆனால் இம்முறை வேறொரு பர பரப்பும் சேர்ந்துள்ளது.

"வழக்கமாக நம் ஆட்கள் உண்டாக்கும் பெனால்டி கார்னர்களைவிட மேலும் இருபது சதவிகித பெனால்டி கார்னர்களை உருவாக்க முடிந்தால் நம் அணி எங்கேயோ போய் விடும்'' என்று போட்டித் தொடக்கத்தில் உற்சாக மாகப் பேட்டியளித்தார் நம் அணியின் முக்கிய பயிற்சி யாளரான செட்ரிக் டிசோசா.

ஆனால் கடைசியில் அவர்தான் எங்கேயோ போய்விட்டார். அதாவது பாதி போட்டியில் கோலா லம்பூரிலிருந்து மனம் வெறுத்துப் போய் இந்தியா வுக்கு வந்து சேர்ந்து விட்டார்!

மனம் வெறுத்ததற்குக் காரணம் இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் 'விளையாட் டுப் போக்கு'!

முதல் இரண்டு போட்டி களில் இந்திய அணி தோல்வியடைந்த நிலை. திடீரென்று "உங்கள் உதவியாளர் சி.ஆர்.குமார் இனி பயிற்சியளிப்பில் முக்கிய பங்கேற் பார். நீங்கள் அவருக்கு உதவியாக இருங்கள்'' என்று தகவல் சென்றது செட்ரிக்குக்கு. இதை ஏற்க மனமில்லாத செட்ரிக் வீடு (நாடு) திரும்பிவிட்டார்.

இந்திய ஹாக்கி கூட்டமைப்பின் செயலாளரான ஜோதி குமரன் "நாங்கள் யாரையும் வீட்டுக்கு அனுப்பவில்லை. ஹாக்கி அணியின் நலனை மனத்தில் கொண்டு செட்ரிக்கை குமாருக்கு உதவி செய்யச் சொன்னோம். இரு தோல்விகளுக் குப் பிறகு மிகவும் மன இறுக்கத்துடன் காணப்பட்ட செட் ரிக்குக்கு ஒரு மாறுதல் அளிப்பதற்காகத்தான் இப்படிச் செய் தோம்'' என்ற கையோடு வேறொன்றையும் சொல்கிறார்.

"இப்போது கோலாலம்பூர் சென்றுள்ள நமது அணியைச் சேர்ந்த பதினெட்டு விளையாட்டு வீரர்களும் செட்ரிக்கின் சாய்ஸ்தான். ஆனால் இரு போட்டிகள் முடிந்த நிலையில் இவர்களில் சிலரை அணியில் சேர்த்திருக்கவே கூடாது என்று கூறுகிறார் அவர்! தவிர எந்தவித உத்திகளை இனி வரும் பந்தயங்களில் நமது இந்திய அணி கடைபிடிக்க வேண்டும் என்பது குறித்து கூட்டமைப்பின் உறுப்பினர் களும் அவரும் சேர்ந்து விவாதித்து ஒரு பொதுவான முடிவுக்கு வருவோம். ஆனால் அடுத்த நாள் ஆட்டத்தில் அவர் அந்த முடிவுக்கேற்பச் செயல்படாமல், தாமாக வேறுவிதமாக விளையாட்டு வீரர்களைச் செலுத்திக் கொண் டிருப்பார்! அவர் போட்டிகளின்போது எப்படிச் செயல்படு கிறார் என்பதைக் கூட்டமைப்பின் தலைவர் கில்லும் தொடர்ந்து உன்னிப்பாக கவனித்தார். குமாரைப் பொறுப் பேற்கச் செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு நாங்கள் இணைந்துதான் வந்தோம்'' என்கிறார்.

எப்படியோ 'உங்கள் தேசிய விளையாட்டு என்ன?' என்று கேட்டால் கொஞ்ச காலத்துக்காவது சுரத்தில்லாமல் தான் பதிலளிக்க வேண்டிய நிலை.

— ஜி.எஸ்.எஸ்.

பரிதாப அபிஷேக்!

குஜராத்தில் கரசேவகர்கள் எரிந்த செய்தி வந்ததும் இங்கே இதயங்கள் பீதியில் சாம்பலாயின. மறுநாள் 'பந்த்' என்றதும் 1992 கலவரங்கள் நினைவில் நிழலாடத் துவங்கின. பற்றி எரியப் போகிறது என்றுதான் எதிர் பார்த்தோம், ஆனால்... சட்டவிரோத கும்பல்களை உள்ளே தள்ளிய காவற்படையின் சுறு சுறுப்பா, அமைதிப் புறாக்களாகப் பறந்த 'மொஹல்லா கமிட்டி'க்காரர்களின் விறு விறுப்பா, தன்னை நேரிடையாகக் கலந்தாலோசிக்காமல் 'பந்த்' அறிவித்துவிட்ட வி.எச்.பி.காரர்களிடம் சிவசேனைத் தலைவர்களுக்கு ஏற்பட்ட காட்டமா, அதனால், வீராவேசமாகக் கலந்து கொள்ளாமல் வெறும் தார்மீக ஆதரவை மட்டும் சிவசேனை நல்கியது காரணமா, ஏதோ ஒன்று... ஆர்ப்பாட்டம் அதிகமில்லாமல் மும்பை அமைதி காத்து விட்டது! அயோத்தியில் இடித்ததற்கு அன்று மும்பையில் மழை பொழிந்தது. இன்று திசைமாறி அகமதாபாத் சென்று விட்டது! அந்த ஈரமே இன்னும் காயவில்லை; அதற்குள் இவர்களின் கண்ணீர்... அதுவும் ஓயவில்லை! எங்கேயோ கொஞ்சமாகக் கல்வீச்சு, டென்த், ப்ளஸ்டூ போர்டு தேர்வுகளுக்கு ஒரு நாள் பாதிப்பு என்பதைத் தவிர பெரிய அசம்பாவிதங்கள் எதுவும் நேர்ந்துவிடவில்லை! அப்பாடா ஆனந்தமயமாகத்தானிருக்கிறது!

ஆனந்த மயமாகத்தான் இருக்கிறது; சில சமயம் எதிர்பாராதது நடந்தாலும்! இல்லாவிட்டால் ஒரு நாலு வயது வாண்டு, ட்ரம்ஸில் இப்படிப் பிய்த்து உதறும் என்று யார் எதிர்பார்த்திருப்பார்கள்? மும்பையில் முதன் முதலாக அரங்கேறிய 'நாகி'யின் (டுப்ளிகேட், விராஸத், தரார், ஜீடுவா போன்ற படப்பாடல்களில் இவரது ட்ரம்ஸ் பீட் ஒலித்ததே?) இசை விருந்துக்கு வந்திருந்தவர்களை அசத்தி விட்டான் அவருடைய பிள்ளை சித்தார்த். ஒரு பத்து நிமிஷம் இவன் கொடுத்த 'ஸோலோ' நிகழ்ச்சியில், மற்ற கலைஞர்களை மறக்கடித்து விட்டானே? தன் குழந்தைப் பருவம் நினைவுக்கு வந்துவிட, சிறப்பு விருந்தினர் சிவமணி, அகமகிழ்ந்து சிறுவனை வாழ்த்தினார். இந்த பத்மா சேஷாத்ரி ஸ்டூடண்ட், லிம்கா புக் ஆஃப் வேர்ல்டு ரெக்கார்ட்ஸில் இடம் பெறப் போகிறானாமே? அதிசயக் குழந்தைதான்!

அதிசயக் குழந்தை சித்தார்த் என்றால், அதிர்ஷ்டக் குழந்தை ரீனா! ஏதோ ஓர் அனாதை ஆசிரமத்தில் வளராமல்,


• நாகியுடன் சித்தார்த்



• குழந்தையுடன் கஷ்..

அண்டகோசர அழகியின் வீட்டில், அவருக்கு மகளாக வளர்கிறாளே?' அதுவும் அவர் படிக்கும் 'ப்ளே ஸ்கூலின்' வருடாந்தர நிகழ்ச்சி இஸ்கான் ஆடிட்டோரியத்தில் நடைபெற, அதைக் காண நட்சத்திர அம்மாவும் வந்து விட்டாரே! இதர குழந்தைகளுடன் ரீனா ஆடிய ஹவாய் நடனத்தில், ஓம்புரியின் பிள்ளை இஷானும் பங்கு பெற்றான். ரீனாவுக்குப் பரிசு கிடைத்தபோது, அவள் அம்மாவுக்கும் பரிசு கிடைத்தது. அவார்டு வாங்கும் போது அழ வேண்டும் என்ற நட்சத்திர ஃபார்முலாபடி, அம்மா உணர்ச்சிவசப்பட்டு விட்டார். "என் குழந்தையைப் பார்க்கும்போது எனக்குப் பெருமையாய் இருக்கிறது. ஆடியன்ஸிலிருக்கும் அம்மாவுக்கும் என்னைப் பார்த்தால் அப்படித்தானிருக்கும் என நம்புகிறேன்" என்றார் உடைந்த குரலில். அந்த அம்மா கஷ்மிதா சென்! பெண் வெற்றியாளர்கள் வரிசையில் 'எல்லி' மாகஸின் தேர்ந்தெடுத்திருக்கும் 25 ஆசியப் பெண்மணிகளில் ஒரே இந்தியப் பெண் இவர்தான்! இவருடைய அம்மா பெருமையடித்துக் கொள்ளாமல் இருப்பாரா?

பெருமை அடித்துக் கொள்ளாமலிருப்பது என்பது கொஞ்சம் கஷ்டம்தான்... அதுவும் பெற்றோர்களுக்கு; ஆனால் எல்லாப் பெற்றோருக்கும் அது பிராப்திக்கின்றதா? பாருங்களேன்... அபிஷேக்கைப் பற்றி பீற்றிக் கொள்ள அமிதாப்புக்கும் ஜெயாவுக்கும் ஆசையாகத்தானிருக்கும். ஆனால் இப்படி ஒன்று மாற்றி ஒன்று தோல்வியாக வந்து குவிகிறதே இந்த



• அபிஷேக்

பரிதாப அபிஷேக்குக்கு? "ஹான் மைனே பீ ப்யார் கியா" ஊற்றிக் கொள்ள, கரண் ஜோஹார் தமது அடுத்த படத்திலிருந்து இவரை நீக்கி விட்டார் என்று ஒரே வதந்தி! அதுவே டிம்பிள் - ராஜேஷின் மகள் ட்விங்கிளைப் பாருங்கள், சினிமா இப்படி அப்படி இருக்கிறதே என்று இன்டீரியர் டெகரேஷனுக்குத் தாவி விட்டார்! ரீசண்ட் கஸ்டமர் தபு! பிழைக்கத் தெரிந்தவர்!

— ஜெ.ஆர்.



சிவகாமியின் சபதம்

பதினைந்தாம் அத்தியாயம்

கிளியும் கருடனும்

அமரர் கல்கி

"கமலி!''

"கண்ணா!''

"எனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லை!''

"ஏன் அப்படி?''

"புதிய தளபதிக்கு வந்த வாழ்வை நினைக்க நினைக்க கோபமாய் வருகிறது!''

"கோபித்து என்ன பயன்? அவர் யுத்த களத்துக்குப் போய், வீராதிவீரர் என்று பெயர் எடுத்து வந்திருக்கிறார்.''

"யுத்தத்துக்குப் போக வேண்டுமென்று, என் மனமுந்தான் துடியாய்த் துடிக்கின்றது.''

"யார் குறுக்கே விழுந்து மறிக்கிறார்கள்?''

"வேறு யார்? மாமல்லர்தான்! மாமல்லருக்கு ஏன் நான் ரதசாரதியானேன் என்று இருக்கிறது. அவராலேதானே, நானும் இந்தக் கோட்டைக்குள்ளேயே அடைந்து கிடக்க வேண்டியிருக்கிறது?''

"இல்லாமல் போனால் வெட்டி முறித்து விடுவாயாக்கும்!''

"எப்படியும் ஒரு நாளைக்கு, மாமல்லர் யுத்தத்துக்குப் போகாமல் இருக்க மாட்டார். அப்போது நானும் போகிறேனா, இல்லையா பார்! ஒருவேளை, நான் போர்க்களத்தில் வீர சொர்க்கம் அடைந்தால் என்னைப் பற்றிச் சின்னக் கண்ணனுக்குச் சொல்வாயல்லவா?''

"ஆகட்டும், ஆகட்டும்! வீட்டுக்குள்ளே உட்கார்ந்து, வீரம் பேசுவதிலே உனக்கு இணை, இந்தப் பல்லவ ராஜ்யத்திலேயே கிடையாது என்று கண்ணம்மாளிடம் சொல்கிறேன்.''

''என்ன சொன்னாய்? கண்ணம்மாளா?''

''ஆமாம்; கண்ணம்மாளாய்த்தான் இருக்கட்டுமே?''

''போதும், போதும்! பூலோகத்தில் பெண்களே பிறக்கக்கூடாது என்று நான் சொல்வேன். கூடவே கூடாது.''

''உண்மைதான்! ஆண் பிள்ளைகளைப் போன்ற நிர்மூடர்கள் இருக்கிற உலகத்தில், பெண்களைப் பகவான் படைக்கக்கூடாதுதான். உங்களால் நாங்கள் படுகிற கஷ்டம் எவ்வளவு என்பதை உணர்ந்து கொள்ளக் கூட உங்களுக்குச் சக்தி இல்லை.''

''இது என்ன அபாண்டம், கமலி! உங்களை நாங்கள் அப்படி என்ன கஷ்டப்படுத்துகிறோம்?''

''சற்று முன்னால் யுத்தத்துக்குப் போய் நான் செத்துப் போகப் போகிறேன்; நீ வீட்டிலே சுகமாயிரு என்று சொன்னாயே? அது என்னைக் கஷ்டப்படுத்துகிறதல்லவா? தங்கச்சி சிவகாமியை எட்டு மாத காலமாக மாமல்லர் போய்ப் பார்க்காமலிருக்கிறாரே, அது அவளைக் கஷ்டப்படுத்துகிறதா காதா?''

''எப்போதும் உன் தங்கச்சியைப் பற்றியேதான் உனக்கு யோசனை. வேறு நினைவே கிடையாது.''

''ஆமாம். கண்ணா! கொஞ்ச நாளாக நான் அவளைப் பற்றியேதான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். யோசிக்க யோசிக்க வருத்தமாயிருக்கிறது. சிவகாமி எதற்காக மாமல்லர் மேல் காதல் கொண்டாள் என்று இருக்கிறது. கிளி கிளியுடனும், குயில் குயிலுடனும் கூடி வாழ வேண்டும். மரக் கிளையில் வாழும் பச்சைக் கிளி உச்சி வானத்தில் பறக்கும் கருடனுக்கு மாலையிட ஆசைப்படலாமா!''

''இதென்ன கமலி, இப்படிப் பேசுகிறாய்? கொஞ்ச நாளைக்கு முன்னாலெல்லாம் நீதானே உன் தங்கைக்கு இணை மூன்று உலகத்திலும் இல்லை என்றும், மன்னாதி மன்னர்களெல்லாம் அவள் காலில் வந்து விழுவார்களென்றும் சொல்லிக்கொண்டிருந்தாய்?''

''ஆமாம், கண்ணா! என் தங்கை மேலுள்ள ஆசையினால் அப்படியெல்லாம் சொன்னேன். ஆசையிருக்குமிடத்தில் அறிவு மழுங்கி விடும் அல்லவா? ஆர அமர யோசித்துப் பார்த்ததில், இதெல்லாம் நல்லதுக்கில்லை என்று தோன்றுகிறது. நான் சிவகாமிக்கு உடன்பாடாகப் பேசி, அவள் ஆசையை வளர்த்து வந்ததும் தப்பு; மாமல்லரின் ஓலைகளை நீ அவளுக்குக் கொண்டு போய்க் கொடுத்துக்கொண்டிருந்ததும் தப்பு...!''

''இப்பேர்ப்பட்ட ஞானோதயம் உனக்கு எப்படி உண்டாயிற்று?'' என்று கண்ணன் பரிகாசக் குரலில் கேட்டான்.

''கொஞ்சமாவது வெட்கமில்லாமல், நீ 'சின்னக் கண்ணன், சின்னக் கண்ணன்' என்று சொல்கிறாயே, அவன் என் வயிற்றில் வந்த பிற்பாடுதான்!'' என்றாள் கமலி.


''இதென்ன கமலி! உன் தங்கை சிவகாமி மாமல்லரைக் கல்யாணம் செய்து கொள்வதற்கும் சின்னக் கண்ணனுக்கும் என்ன சம்பந்தம்? எனக்கு விளங்கவில்லையே?'' என்று கூறிக் கண்ணபிரான் 'கலகல'வென்று சிரித்தான்.

''சிரித்தாகி விட்டதா, கண்ணா!''

''ஆகிவிட்டது!''

''அப்படியானால், நான் கேட்பதற்கு மறுமொழி சொல்லு! சக்கரவர்த்தி மாமல்லரைக் காஞ்சிக் கோட்டைக்கு வெளியே போகக் கூடாதென்று எதற்காகக் கட்டளையிட்டு விட்டுப் போனார்?''

''அதிலே என்ன அதிசயம் கமலி! அதிசயமும் இல்லை; இரகசியமும் இல்லை. மகேந்திர சக்கரவர்த்திக்கு மாமல்லர் ஏக புத்திரர் அல்லவா? யுத்த களத்திலே சக்கரவர்த்திக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், அடுத்தபடி பட்டத்துக்கு வர வேண்டியவராவது பத்திரமாயிருக்க வேண்டுமே என்றுதான். மந்திரி மண்டலத்தாருக்கு அவ்விதமே சக்கர



வர்த்தி கட்ட
ளை விட்டு
விட்டுப் போயி
ருக்கிறார் என்பது
பிரசித்தமாயிற்றே...''

''பத்திரமாயிருக்க வேண்டுமென்றால், அதற்காகக் கோட்டைக் குள்ளேயே ஒளிந்துகொண் டிருக்க வேண்டுமா, கண்ணா! மாமல்லர் என்ன அவ்வளவு பயங் கொள்ளியா? கையினால் ஆகாதவரா?

அல்லது அறியாக் குழந்தையா?''

''என் புத்திக்கு எட்டினது அவ்வளவுதான்! உண்மையான காரணம் உனக்குத் தெரிந்திருந்தால் நீதான் சொல்லேன், கமலி!''

''சொல்லட்டுமா? சிவகாமியின் மேல் மாமல்லருக்கு ஏற்பட்டிருக்கும் பிரியம் சக்கரவர்த்திக்கு எப்படியோ தெரிந்து விட்டது. அதை வளர விடக்கூடாது என்பது அவருடைய எண்ணம். கோட்டைக்கு வெளியில் போனால் எப்படியும் மாமல்லர் சிவகாமியைப் பார்க்கப் போவார் என்றுதான் அவரைக் கோட்டைக்குள்ளேயே இருக்கும்படி கட்டளையிட்டு விட்டுப் போனார்!''

''அப்படியானால் உங்கள் மகேந்திர சக்கரவர்த்திக்கு எங்கள் மாமல்லரைப் பற்றித் தெரியாதென்றுதான் அர்த்தம். அவ்வளவு சுலபமாக மாமல்லரின் மனத்தை மாற்றி விட முடியுமா, கமலி?''

''மகேந்திர சக்கரவர்த்தியின் தந்திர மந்திர சாமர்த்தியங்கள் உனக்குத் தெரியாது, கண்ணா! அவர் ஒரு காரியத்தை நினைத்துவிட்டால், எப்படியாவது அதை நிறைவேற்றியே தீருவார் என்று உலகத்துக்கெல்லாம் தெரியுமே?''

''ஆனால் சக்கரவர்த்திக்கும் உன் தங்கையின் மேல் ரொம்ப அபிமானமாயிற்றே, கமலி! அவர் எதற்காகத் தடை செய்ய வேண்டும்?''

''அசட்டுக் கண்ணா! ஆயனச் சிற்பியின் மகள் மேல் அபிமானமாயிருப்பது ஒரு விஷயம். அவளைக் குமார சக்கரவர்த்திக்குக் கல்யாணம் செய்து வைப்பது வேறு விஷயம். என் தங்கச்சி வயிற்றில் நாளைக்குப் பிள்ளைக் குழந்தை பிறந்தால், என்னவெல்லாம் சிக்கல் ஏற்படும் என்று யோசித்துப் பார்...! இந்த யோசனையெல்லாம் சின்னக் கண்ணனால் எனக்கு வந்தது என்று சொன்னேனே, அதன் காரணம் இப்போது விளங்குகிறதா?''

''விளங்கவேயில்லை, கமலி!'' என்றான் கண்ணன்.

''உனக்கு ஒன்றுமே விளங்காது கண்ணா! குதிரைகளோடு பழகிப் பழகிக் குதிரைகளுக்கு இருக்கிற அறிவுதான் உனக்கும் இருக்கிறது'' என்றாள் கமலி.

''இதோ பார், கமலி! நீ என்னைப் பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லு! கேட்டுக்கொள்கிறேன். என் குதிரைகளைப் பற்றி மட்டும் ஒன்றும் சொல்லாதே! குதிரைகளுக்கு உள்ள அறிவு மனிதர்களுக்கு இருந்தால் இந்த உலகம் எவ்வளவோ மேலாயிருக்குமே!'' என்றான் கண்ணன்.

குதிரைகளைப் பற்றிக் கமலி கேவலமாகப் பேசியதில் கண்ணனுக்கு மிக்க கோபம் உண்டாகி விட்டது. பின்பு சற்று நேரம் அவன் எதுவும் பேசாமல், வேறு பக்கம் பார்த்துக்கொண்டிருந்தான் - கமலியும் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தாள்.

எனவே, கண்ணன் தன்னைத்தானே சமாதானப்படுத்திக் கொண்டு, பேச வேண்டியதாயிற்று. ''நீ என்னதான் சொல்லுகிறாய் கமலி? மாமல்லர் உன் தங்கையைக் கல்யாணம் செய்துகொள்வதற்கு என்ன தடை?'' என்று கேட்டான்.

''கண்ணா! இத்தனை நாளாக நீ அரண்மனைச் சேவகம் செய்கிறாய். ஆனாலும் அரண்மனை நடைமுறை ஒன்றும் உனக்குத் தெரியவில்லை. இராஜாக்களும் இராஜகுமாரர்களும் கல்யாணம் செய்துகொள்ளுவதென்றால் நீயும் நானும் கல்யாணம் செய்து கொள்வது போலவா? மாமல்லருடைய மகன் ஒருநாள் இந்தக் காஞ்சி சிம்மாசனத்தில் ஏற வேண்டியிருக்குமல்லவா?''

''இதைத் தெரிந்து கொள்ள அபாரமான அறிவு வேண்டியதில்லை. குதிரைகளுக்கு இருக்கும் அறிவுகூடப்

போதுமே!''

''அப்படியானால் அந்த அறிவைச் செலுத்தி இன்னும் கொஞ்சம் யோசித்துப் பார்! சிற்பியின் மகள் வயிற்றிலே பிறக்கும் பிள்ளையைப் பல்லவ சிம்மாசனத்தில் ஏற்றி வைக்க முடியுமா?''

''ஏன் முடியாது? அதிலே என்ன கஷ்டம்? நமது அரண்மனைச் சிம்மாசனம் அப்படி ஒன்றும் அதிக உயரமில்லையே? நான் ஒருவனாகவே தூக்கி அதில் உட்கார்த்தி வைத்து விடுவேனே?''

''நீ விளையாடுகிறாய், கண்ணா! ஆயனச் சிற்பியின் பேரன் பல்லவ குலத்துச் சிம்மாசனத்தில் ஏறுவதற்கு நாட்டார் - நகரத்தார் சம்மதிப்பார்களா?''

''நாட்டார் - நகரத்தாரைச் சம்மதிக்கச் செய்வது என் பொறுப்பு. கமலி! நீ பார்த்துக்கொண்டே இரு! இரண்டு கையிலும் இரண்டு குதிரைச் சாட்டையை எடுத்துக்கொண்டு போய், நாட்டார் - நகரத்தாரின் முதுகில் வெளு வெளு என்று வெளுத்துச் சம்மதிக்கும்படி செய்கிறேனா, இல்லையா, பார்!''

''அது மட்டுமல்ல, கண்ணா! மகேந்திர பல்லவரின் சித்தப்பா பேரன் ஒருவன் வேங்கிபுரத்தில் வளர்ந்துகொண்டிருக்கிறானே, உனக்குத் தெரியாதா? அந்த ஆதித்தவர்மன் பல்லவ சிம்மாசனத்துக்குப் போட்டிக்கு வர மாட்டானா?''

''வர மாட்டான் கமலி, வர மாட்டான். வேங்கிபுரம் அடியோடு போய் விட்டது. வேங்கியோடு ஆதித்தவர்மனும் நாசமாய்ப் போய்விட்டான். இனிமேல் வர மாட்டான்!''

''மேலும், நமது குமார சக்கரவர்த்தி மற்ற தேசத்து இராஜகுமாரர்களைப் போல் அல்லவே! ஆசைக்குச் சிவகாமியைக் கல்யாணம் செய்துகொண்டு பட்டத்துக்கு இன்னொரு இராஜகுமாரியைக் கல்யாணம் செய்துகொள்ள மாமல்லர் இணங்க மாட்டார் அல்லவா? அவருடைய சுபாவம் மகேந்திர சக்கரவர்த்திக்கும் நன்றாய்த் தெரியும். ஏகபத்தினி விரதங்கொண்ட இராமனைப் போன்றவர் அல்லவா நமது மாமல்லர்?''

''ஆமாம், கமலி! சந்தேகமே இல்லை. மாமல்லர் அது விஷயத்தில் இராமனையும் கண்ணனையும் போன்றவர்தான்...! கோகுலத்துக் கண்ணனை நான் சொல்லவில்லை. அந்த அயோத்தி ராமனையும் இந்தக் காஞ்சிக் கண்ணனையும் போன்றவர்!'' என்று கண்ணபிரான் தன்னைச் சுட்டிக்காட்டிக் கொள்ளவே, கமலிக்குச் சிரிப்புப் பீறிட்டுக் கொண்டு வந்தது.

சற்றுப் பொறுத்துக் கண்ணபிரான் ''கமலி! எனக்கு ஒரே அதிசயமாயிருக்கிறது! இவ்வளவு மர்மமான இராஜரீக விவகாரங்களெல்லாம் உனக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டான்.

''எல்லாம் எனக்கே தெரிந்து விடவில்லை, கண்ணா! நானாக யோசித்ததில் கொஞ்சம் தெரிந்தது; ஒட்டுக் கேட்டதில் மற்றதெல்லாம் தெரிந்தது!''

''என்னத்தை ஒட்டுக் கேட்டாய்? எப்போது கேட்டாய்?''

''நாலைந்து நாளைக்கு முன்னால் நீ வீட்டில் இல்லாதபோது இங்கே ஒரு மனிதர் வந்திருந்தார். கண்ணா! அவரும் மாமாவும் வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். சிவகாமியின் பெயர் காதில் விழவே நான் சுவர் ஓரமாய் நின்று கேட்டேன். இந்த விஷயமெல்லாம் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அதோடு...''

''அதோடு என்ன கமலி?''

''இன்னொரு முக்கிய விஷயமும் பேசினார்கள்.''

''சொல்லு!''

''சிவகாமிக்கு மாமல்லர் ஓலை எழுதுவதும், அதை நீ கொண்டு போய்க் கொடுத்து வருவதும் உன் அப்பாவுக்குத்

தெரிந்திருக்கிறது. அதைப் பற்றி அந்தப் புது மனிதரிடம் சொல்லிக்கொண்டிருந்தார்!"

"ஆஹா! அந்தக் கிழ கோட்டான், அந்த இராவண சந்நியாசி, அந்த ருத்ராட்சப் பூனை அப்படியா செய்து கொண்டிருக்கிறது?" என்றான் கண்ணபிரான். அவனுடைய தந்தையைப் பற்றித்தான் அவ்வளவு மரியாதையான வார்த்தைகளைச் சொன்னான்!

கமலி அவனுடைய வாயைப் பொத்தினாள்.

"அந்தப் புது மனிதர் யார் தெரியுமா, கமலி?" என்று கண்ணன் கேட்டான்.

"தெரியாது; அதற்கு முன்னால் அவரை நான் பார்த்ததே இல்லை" என்றாள் கமலி.

அந்தச்சமயத்தில் தெருவில் விரைவாக குதிரை பாய்ந்து வரும் சப்தம் கேட்டது. கண்ணன், கமலி இருவரும் பலகணி வழியாய் வீதியில் பார்த்தார்கள். நாலுகால் பாய்ச்சலில் சென்ற குதிரை மீது ஒருவன் போய்க்கொண்டிருந்தான். அவனுடைய முகம் ஒருகணம் கண்ணன் வீட்டுப் பக்கம் திரும்பி மறுகணம் எதிரே நோக்கியது.

கமலி, "கண்ணா! அவர்தான்! அந்த குதிரையில் போகிறவர்தான் அன்றைக்கு வந்து மாமாவுடன் பேசிக்கொண்டிருந்தவர்! அவர் யார், உனக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"தெரியும், கமலி! அவர்தான் ஒற்றர் தலைவன் சத்ருக்னன். மகேந்திர சக்கரவர்த்தியிடம் போய் விட்டுத் திரும்பி வருகிறான். ஏதோ விசேஷச் செய்தி கொண்டு வருகிறான். இதோ போய்த் தெரிந்துகொண்டு வருகிறேன்" என்று கூறிவிட்டுக் கண்ணன் வெளியேறினான்.

ஒரு நாழிகைக்கெல்லாம், அந்த வீட்டு வாசலில் 'கடகட'வென்ற சப்தத்துடன் ரதம் வந்து நின்றது. கண்ணபிரான் ரதத்தின் முன் தட்டிலிருந்து குதித்து உள்ளே ஓடி வந்து, சமையற்கட்டிலிருந்து வந்து கொண்டிருந்த கமலியின் மேல் மோதிக் கொண்டான்.

"அவ்வளவு என்ன அவசரம்?" என்றாள் கமலி.

கண்ணபிரான், "என்ன அவசரமா? யுத்தத்துக்குப் போகிற அவசரந்தான்!" என்றான்.

"என்ன, யுத்தத்துக்குப் போகிறாயா?" என்று கமலி பாய்ந்து வந்து கண்ணன் கழுத்தைத் தன் இரு கரங்களாலும் சேர்த்துக் கட்டிக்கொண்டாள்.

"ஆமாம், கமலி! ஒற்றர் தலைவன் சத்ருக்னன் மகேந்திர சக்கரவர்த்தியிடமிருந்து ஓலை கொண்டு வந்திருக்கிறான். மாமல்லர் போர்க்களத்துக்குப் போகச் சக்கரவர்த்தி அனுமதி கொடுத்துவிட்டார். இன்னும் அரை நாழிகையில் மாமல்லர் கிளம்புகிறார், கமலி...!"

"நீயும் கிளம்புகிறாயா, கண்ணா! நிஜமாகவா?"

"இது என்ன கேள்வி, கமலி! மாமல்லர் போனால் நான் அவருடன் போகாமல் எப்படி இருக்க முடியும்?"

"மாமல்லர் சக்கரவர்த்தியின் திருக்குமாரர்; நாளைக்குப் பல்லவ சிம்மாசனத்தில் ஏறப் போகிறவர், அவர் போர்க்களத்துக்குப் போய் யுத்தம் செய்ய வேண்டும். நீ ஏன் போக வேண்டும்? எந்த ராஜா வந்தாலும் எந்த ராஜா போனாலும் நமக்கு என்ன வந்தது?"

"இது என்ன, கமலி? நேற்றுவரை நீ இப்படியெல்லாம் பேசினதே இல்லையே? நாம் பிறந்த நாட்டுக்கு அபாயம் வந்திருக்கும்போது, நமக்கென்ன என்று நாம் வீட்டில் இருப்பதா?"

"நாட்டுக்கு அபாயம், நகரத்துக்கு அபாயம் என்று ஓயாமல் சொல்கிறாயே, கண்ணா! அப்படி என்ன அபாயம் வந்துவிட்டது?"

"பல்லவ நாட்டுக்கு இது பொல்லாத காலம், கமலி, வடக்கேயிருந்து வாதாபி புலிகேசி மிகப் பெரிய சைனியத்துடன் வந்துகொண்டிருக்கிறார். அந்த சைனியத்தைத்தான் சக்கரவர்த்தி தடுத்து நிறுத்திக் கொண்டிருக்கிறார். இந்தப் பக்கத்தில்



கங்க நாட்டு ராஜாவுக்கு அதற்குள் அவசரம் பொத்துக்கொண்டு விட்டது. புலிகேசிக்கு முன்னால் தான் காஞ்சிக்கு வந்து விடவேண்டுமென்று மேற்குத் திக்கிலிருந்து படை எடுத்து வந்து கொண்டிருக்கிறான். கங்க நாட்டு ராஜாவின்



பெயர் என்ன தெரியுமா, கமலி! துர் விநீதன்! - துரியோதனனுடைய மறு அவதாரம் இவன்தான் போலிருக்கிறது. இந்தத் துர்விநீதனை எதிர்க்கத் தான் மாமல்லர் கிளம்புகிறார், கமலி! நானும் கிளம்புகிறேன். இத்தனை நாளும் நான் எப்போது வரும் என்று ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பம் வந்திருக்கிறது. மனப்பூர்வமாக, உற்சாகமாக எனக்கு விடை கொடுத்து அனுப்பு!"

"கண்ணா! நான் என்ன செய்யட்டும்? என் மனத்தில் ஏனோ உற்சாகமில்லை. என் தங்கை சிவகாமியை நினைக்க மனச்சோர்வு அதிகமாகிறது. அவளுடைய தலைவிதி என்னவோ என்று எண்ண எண்ண ஏக்கமாயிருக்கிறது!"


"ஆகா! முக்கியமான விஷயத்தைச் சொல்லாமல் விட்டு விட்டேனே? மகேந்திர சக்கரவர்த்தியைப் பற்றி நீ என்னவெல்லாமோ சந்தேகப்பட்டாய் அல்லவா, கமலி! அதெல்லாம் சுத்தத் தப்பு! சக்கரவர்த்தி என்ன சொல்லி அனுப்பியிருக்கிறார், தெரியுமா? மாமல்லரைப் போர்க்களத்துக்குப் போவதற்கு முன்னால் நேரே ஆயனர் வீட்டுக்குச் சென்று ஆயனரையும் சிவகாமியையும் உடனே காஞ்சிக் கோட்டைக்கு அனுப்பச் சொல்லியிருக்கிறார். ஒரு வேளை நானே அவர்களை ரதத்தில் ஏற்றிக்கொண்டு வந்து இங்கே விட்டு விட்டுப் போனாலும் போவேன். மகேந்திரப் பல்லவரைப் பற்றி இப்போது என்ன சொல்கிறாய், கமலி! அவர் நல்லவரா, பொல்லாதவரா?" என்று கண்ணபிரான் தலை நிமிர்ந்து கர்வத்துடன் கேட்டான்.

"எப்படியாவது எல்லாம் நன்றாக முடியட்டும், கண்ணா; நீயும் போர்க்களத்திலிருந்து க்ஷேமமாய்த் திரும்பி வர வேண்டும்!" என்று கமலி கூறிய போது, அவள் கண்களிலிருந்து அருவி பெருகியது.

(தொடரும்)

அருள்வாக்கு

காந்தக் கல் இருக்கிறது. அதோடு இரும்பு ஊசி அருகில் போனால் ஒட்டிக் கொள்கிறது. பதி விரதா சிரோன்மணிகளின் மனம் அவர்களுடைய பர்த்தாக்களிடம் போய்க் கவிந்துகொள்கின்றன. கொடிகள் மரங்களை அரவணைக்கின்றன. நதிகள் மகாசமுத்திரத்தில் சங்கமம் ஆகிக் கலக்கின்றன. இவை போல் நம் மனசானது தன்னை அறியாமல் ஈஸ்வரி ஈஸ்வரரிடம் லயிக்க வேண்டும் _ கலக்க வேண்டும்.



நாம் செய்யும் அபசாரங்களை நினைத்துப் பாருங்கள். அப்படி இருந்தும் ஈஸ்வரர் நமக்குச் செய்யும் உபகாரங்களை மனசு எண்ணிப் பார்க்கட்டும். அப்படி மனசு சிந்தனை செய்கிறபோது, காலத்திரயங்களிலும் நமக்குப் பந்துவாக இருந்து அத்தனை அபசாரங்களையும் க்ஷமித்துக் கொண்டு நமக்கு க்ஷணத்திலும் நினைக்கும் படியான உபசாரம் செய்த அவனைத் தவிர நாம் வேறு எதை நினைப்பது? ஆகவே அவன் நமக்கு அநுக்கிரகம் செய்கிற அந்தப் பிரபுவினிடத்தில் போய் நாம் நிற்க வேண்டாமா?

அப்படி நாம் போய் நிற்பதற்கு நாம் ஏதாவது காரணம் கற்பித்தால் அது வியாபாரம் ஆகிவிடும். அதாவது பக்தி என்பது பண்டம் மாற்றுவது போல ஏதோ ஒன்றுக்கு ஒன்று கொடுப்பது போல் ஆகக்கூடாது. "பக்தி செய்கிறேன், நீ செல்வத்தைத் தா" என்றால் அது பரிமாற்றம் அல்லது வியாபாரம் என்பதாகும். அப்படி இல்லாமல், நாம் எதையும் கிஞ்சித்தும் கருதாமல், சர்வசதா அவனிடம் போய்ச் சேருவது ஒன்றை நினைத்து நினைத்துத் தன்னையும் அறியாது ஒடுகிற சித்த விருத்தி இருக்கிறதே அதற்குத்தான் பக்தி என்று பெயர்.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்

குழந்தை வளர்ப்பு பற்றி நிறைய நூல்கள் எழுதி பிரபலமானவர் மிரியம் ஸ்டோப்பார்டு. அத்தனையும் 'பெஸ்ட் செல்லர்'கள். இங்கிலாந்தைச் சேர்ந்த டாக்டர் மிரியம் சென்னை லேண்ட் மார்க்

தாய்ப்பால் சாப்பிட்டால் குழந்தை குண்டாக இருக்குமா?




• மிரியம்

புத்தக நிலையத்தில் டாக்டர் கீதா அர்ஜுனுடன் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். பிறகு, பார்வையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

உரையாடலில் இருந்து...

டாக்டர் தொழிலை விட்டுவிட்டு ஏன் புத்தகம் எழுத ஆரம்பித்தீர்கள்?

நான் ஒரு மருத்துவ மனையில் சீனியர் பதிவாளராக இருந்து வந்தேன். எனக்கு மேலே ஒரு யூனிட் சீஃப்.



மகா மோசமான பேர்வழி. ஒரு வெள்ளிக் கிழமை மத்தியானம் அவர் நடந்து கொண்ட விதத்தில் உண்டான கோபத்தில், போதும் இந்த வேலை என்று தூக்கி வீசி விட்டு வந்துவிட்டேன். அப்புறம் மருந்துகள் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றில் வேலை கிடைத்தது.

வேலையில் இருந்தபோது குறிப்புகள் எடுத்து வைப்பேன். எழுத வேண்டும் என்ற உந்துதலும் சக்தியும் கிடைக்கப் பாதிக் காரணம் என் கோபம்தான்! யோசித்துப் பார்த்தால், நாம் சூழ்நிலைக்கு ஏற்றபடிதான் நடந்து கொள்ளுகிறோம். இதிலும் பெண் களுக்கு, வாய்ப்பை நழுவவிடாமல் பிடித்துக் கொள்ளும் ஆற்றல் உண்டு. ஃபார்மசூடிகல் இண்டஸ்ட்ரியில் நான் சேர்ந்தது மிகச் சிறந்த முடிவு என்றால், என்னுடைய எதிர்ப்பையும், கோபத்தையும் பாஸிடிவ்வாக உபயோகப்படுத்திக் கொண்டது நிறைந்த பலனை அளித்தது.

என் தோழி ஒருத்தியுடன் ஒரு நாள் டின்னர் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது அவள், 'நீ ஒரு 'பேபி கேர்' புத்தகம் ஏன் எழுதக் கூடாது? எல்லா குழந்தை வளர்ப்புப் புத்தகங்களும் ஆண்கள்தானே எழுதியிருக் கிறார்கள்?" என்றாள். அடுத்த நாள் காலை யு.கே.வில் உள்ள ஒரு பப்ளிஷர் ஃபோன் செய்து, "என்ன, உங்கள் தோழி கேட்டபடி, எழுதுகிறீர்களா?" என்று கேட்டதும், "யெஸ்' என்றேன்.

எப்படி இவ்வளவு தகவல்கள் சேகரித் தீர்கள்? ஆராய்ச்சி ஏதும் செய்தீர்களா?

நான் ஒன்றும் பீடியாட்ரீஷியன் (குழந்தைகள் மருத்துவர்) அல்ல. நான் ஒரு தாய். ஒரு டாக்டர். என் அனுபவத்தில் நான் கண்டதை, நண்பர்களுக்குச் சொல்லுவது போல பெற்றோர்களுக்குச் சொல்லுகிறேன். அவ்வளவுதான். அவர்களுக்குப் புரிகிற மாதிரி எளிமையாக எழுதுகிறேன். ஒரு பெண் மருத்துவராக இருப்பதால், தகவல் களை சிரமமில்லாமல் சேகரிக்க முடிகிறது. அதுவே பெரிய பலம். பிறகு பத்திரிகைப் பாணியில் எழுதிவிடுகிறேன்.

உங்கள் குழந்தைகளுடன் நேரம் செல விட முடிகிறதா?

அது ஒரு வசதிதான். ஆனால் கணவ னும் ஒழுங்காக அமைந்தால்தான் நல்லது. அதனால் கணவரைத் தேர்ந்தெடுக்கும் போது கவனமாக இருங்கள். (சிரிப்பு) என் னுடைய இப்போதைய (இரண்டாவது) கணவர் ஒரு பிஸினஸ்மேன். அவரால் தொந் தரவு ஏதும் இல்லை. அவர் வேலையை அவர் பார்ப்பார். என் வேலையை நான் பார்ப்பேன்.



பிரசவத்தின்போது கணவரும் கூட இருக்க வேண்டும் என்று சொல்லுகிறீர்களே?

ஆமாம். கணவருக்கு ஒரு முக்கியமான ரோல் இருக்கிறது. குழந்தை வளர்ப்பில் கணவன் - மனைவி இருவருக்கும் சம பங்கு இருக்கிறது. குழந்தைகளுக்கு அப்பா வேண்டும். அவர்களைக் கொஞ்ச வேண்டும். பிறந்த அரை மணி நேரத்துக்குள், அப்பா குழந்தையைத் தூக்கிக் கொள்ள வேண்டும். அப்பா சட்டையைக் கழற்றிவிட்டுக் குழந்தையை மார்போடு அணைத்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்! (பலத்த சிரிப்பு) தகப்பனாரின் சருமத்தின் வாசனையைக் குழந்தை அனுபவிக்க வேண்டும். அவருடைய குரலைக் கேட்க வேண்டும். அம்மாவைப் போலவே அப்பாவுடனும் குழந்தையின் பிணைப்பு இறுக இது உதவும்.



கருத்தரித்து இருக்கும்போது அம்மா - அப்பா இருவரின் 'மூட்' எப்படி இருக்க வேண்டும்?

அம்மா கவலை ஏதும் இல்லாமல் இருத்தல் அவசியம். மனசில் என்னவெல்லாமோ வந்து போகும். அதெல்லாம் குழந்தையைப் பாதிக்கும் அம்மா என்னவெல்லாம் உணர்கிறாளோ, அதை வயிற்றிலுள்ள சிசுவும் உணரும். ஹார்மோன்கள் மேலும் கீழுமாக மாறிக் கொண்டே இருக்கும். அதனால் பேறு காலத்தில் 'எவ்வரி டே ஹேப்பிடே' என்றே இருக்க வேண்டும். சப்தமில்லாத, அமைதியான, கூச்சல் - கூக்குரல் இல்லாத இடத்தில் இருப்பது நல்லது. வயிற்றுக்குள் சுகமாக, போஷாக்குடன் இருக்கும்போது, குழந்தை பத்திரமாக, பாதுகாப்பாக இருப்பதாக உணர்கிறது.

பார்வையாளர்களின் கேள்விகளும் மிரியமின் பதில்களும்...

என் குழந்தைக்கு 14 மாதங்கள் ஆகிறது. பற்கள் வளரவே இல்லை. ஏன்?

சில குழந்தைகள் விஷயத்தில் பற்கள் வளர்ச்சி மாறுபட்டு இருக்கும். ஆனாலும் 14 மாதங்கள் என்பது தாமதம்தான். காரட், ஆப்பிள் போன்றவற்றைக் கடிக்கக் கொடுத்துப் பாருங்கள். அவை பற்கள் வெளிவரத் தூண்டும்.

நான் ஃபிஜித் தீவில் இருக்கிறேன். நான் கருவுற்ற சமயத்தில் உங்கள் புத்தகம்தான் எனக்கு பைபிள் போல. என் குழந்தை பிறந்தபோது 9 1/2 பவுண்டு இருந்தது. இப்போது 2 வயதில், 12 கிலோதான் இருக்கிறது. குண்டாகவே இல்லை. மெலிந்துதான் இருக்கிறது. தாய்ப்பால் கொடுக்கிறேன். பிசைந்த உணவும் சாப்பிடும்.

ஒல்லியாக இருந்தால் என்ன குறைந்து போய்விடும்? மெலிந்து இருந்தால் நல்லதுதான். தாய்ப்பால் சாப்பிடும் குழந்தை குண்டாக ஒன்றும் இருக்காது. உங்கள் குழந்தையை வேறு குழந்தையுடன் ஒப்பிட்டுப் பார்க்காதீர்கள். குழந்தை, தானே சாப்பிடுவதை அதிகமாக விரும்பும். என்னவெல்லாம் சமைக்க முடியுமோ அதை எல்லாம் டைனிங் டேபிளில் வையுங்கள். குழந்தை தனக்குப் பிடித்ததை எடுத்துச் சாப்பிடும். நீங்கள் அதைப் பார்த்துக் கொண்டிருக்காமல் நகர்ந்து விடுங்கள். அதற்குப் பிடித்ததை அதுவாகவே எடுத்துச் சாப்பிடட்டும். தனக்குப் போதுமான அளவு சாப்பிடும். சண்டைக்களமாக ஆக்காமல், அமைதியாக இருங்கள்.

என்னுடைய குழந்தைக்கு 1 1/2 வயதுதான் ஆகிறது. நான் வேலைக்குப் போய்விட்டுத் திரும்பி வருவதற்குள் என் குழந்தை பாதுகாப்பே இல்லாத மாதிரி உணர்கிறது. பிற்காலத்தில் இது மனத்தைப் பாதித்துவிடுமோ என்று கவலையாக இருக்கிறது.

குழந்தைகளுக்குப் பிரிவு பிடிக்கவே பிடிக்காது. 'நான் வெளியே போனாலும்,

இதோ பார் உடனே வந்து விடுகிறேன்!' என்று அதற்குப் புரிய வைக்க வேண்டும். பத்து மணி நேரத்துக்கு, குழந்தை அம்மாவைப் பிரிந்து இருப்பது ஆரம்பத்தில் கஷ்டமாக இருக்கும். வெளியே போவது மாதிரி போய், அரை மணி நேரத்தில் திரும்பி வந்து, 'இதோ அம்மா வந்து விட்டேன், பார்' என்று சொல்லுங்கள். திரும்பத் திரும்ப இப்படிச் செய்யுங்கள். குழந்தை உங்களை நம்ப ஆரம்பிக்கும். நீங்கள் உபயோகித்த ஸாரி, ஸ்கார்ஃப் எதையாவது குழந்தையிடம் விட்டுச் செல்லுங்கள். பிறகு, நீங்கள் வேலை செய்யும் இடத்துக்கு, அது ஓரளவு புரிந்து கொள்ளும் வயதில், அழைத்துச் செல்லுங்கள். 'அம்மா, இங்கேதான் வேலை பார்க்கிறேன். இங்கே தான் உட்காருவேன்' என்று சொல்லிக் கொடுங்கள். புரிந்து கொள்ளும்.

என்னுடைய மூன்று வயதுக் குழந்தைக்கு இரும்புச் சத்து குறைவாக இருக்கிறது என்கிறார்கள். எப்படி தெரிந்து கொள்ளுவது? தலைமுடி மிகக் குறைவாக இருக்கிறது. அதற்கும் அதுவே காரணம் என்கிறார்களே?

இரத்தப் பரிசோதனை செய்தால் தெரிந்து விடுமே? ரொம்ப சிம்பிள் ஆயிற்றே! குறைந்த தலைமுடி இருப்பதற்கு இரும்புச் சத்துக் குறைவுதான் காரணம் என்று யார் சொன்னார்கள்? 5 அல்லது 6 வயது வரை பொறுத்திருந்து பாருங்கள். தலைமுடியை ஒரு தடவை, இரண்டு தடவை வெட்டி விடுங்கள். பிறகு அடர்த்தியாக இருப்பது போல இருக்கும். மறுபடி அதிகமாக வளரவும் வாய்ப்பு உண்டு.

என் இரண்டு வயதுக் குழந்தை வாயில் விரலைப் போட்டுச் சப்புகிறான், என் சகோதரனின் ஆறு மாதக் குழந்தை செய்வதைப் பார்த்து. என்ன செய்வது?

கூடுதலாக உங்கள் அல்லது பெற்றோரின் கவனம் தன் மீது திரும்ப வேண்டும் என்பதற்குத்தான். நீங்கள் உடனே அவனைப் பார்ப்பீர்கள். அவனிடம் பேசுவீர்கள் என்று எதிர்பார்த்துத்தான். அதற்கு மேலும், உங்கள் அன்பை, உங்கள் தொடுதலை அவன் விரும்புகிறான். அவனுடன் அதிக நேரம் செலவிடப் பாருங்கள். அவன் கண்களை நேராகப் பாருங்கள். அவனை எந்த அளவுக்கு நீங்கள் நேசிக்கிறீர்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்லுங்கள். அப்பா குழந்தையைக் கட்டிக் கொண்டு, முத்தம் கொடுத்து அன்பு செலுத்துவது அவசியம். குழந்தையைத் தூளி மாதிரி கழுத்தில் கட்டித் தொங்கவிட்டுக் கொண்டால் இன்னும் நல்லது! அப்பாவுடைய வாசனையைக் குழந்தை அனுபவிக்கட்டுமே? இந்தக் குழந்தைகள் இருக்கின்றனவே, அவை படு புத்திசாலிகள்.

என் குழந்தை சாப்பிட்டால் கொஞ்ச நேரத்தில் வாந்தி எடுத்து விடுகிறான். ஆனால் சுறுசுறுப்பாக இருக்கிறான். எடையும் கூடுகிறது.

பிறகு என்ன! சுறுசுறுப்பாக இருந்து, எடையும் போட்டால் கவலையை விடுங்கள்.

என் குழந்தையின் பின் தலை, தட்டையாக இருக்கிறது. அப்படியே இருந்து விடுமா?

இது தட்டைத் தலைக் குழந்தைகளின் காலம் போல் இருக்கிறது! முன்பு எல்லாம் குப்புறக் கவிழ்த்துப் படுக்க விடுவார்கள். இப்போதெல்லாம் மல்லாக்கப் படுக்க விடுகிறார்கள் இல்லையா? அதனால்தான். ஒரு வருடம் அல்லது 15 மாதங்களில் உட்கார ஆரம்பித்த பிறகு தலை சரியாகிவிடும். மூளையைப் பாதிக்குமோ என்று நீங்கள் கவலைப்பட வேண்டாம்.

என் 15 மாதக் குழந்தை ரொம்ப அடம் பிடிக்கிறான். அவன் சொல்வதைச் செய்தாக வேண்டும். படுவேகமாக உணவு சாப்பிடுவான். பாதியில் பட்டென்று நிறுத்தி விடுவான். நிதானமாகச் சாப்பிட்டால் இருபது நிமிடம் பிடிக்கும் அந்த உணவை உட்கொள்ள!

குழந்தையிடம் ஸ்பூனைக் கொடுத்து அதையே எடுத்துச் சாப்பிடச் சொல்லுங்கள். தனியே அவனையே சாப்பிடச் சொல்லும்போது த்ரில் ஆக உணரும். பட்டென்று பாதியில் நிறுத்தினாலும், அதற்குப் போதுமான அளவு உண்ட பிறகே அது நிறுத்துகிறது. அவசரமில்லாமல் மெதுவாக, தானாகவே சாப்பிட்டால் சரியாகிவிடும். அடம் பிடித்து உங்களை ஏதாவது செய்யச் சொல்லும்போது, அதன் கவனத்தைத் திசை திருப்புங்கள். அது போதும். நாலு, ஐந்து வயதாகும்போது சுய கட்டுப்பாடு வந்துவிடும்.

என் 9 மாதக் குழந்தை 2 மணி நேரம் சேர்ந்தாற்போல் தூங்குகிறது. இரவிலும் நன்றாகத் தூங்குகிறது..

அட நல்லதாச்சே! அதற்கு ஏன் வருத்தப்படுகிறீர்கள்?

என் 15 மாதக் குழந்தை இரவில் கத்தி

அழுகிறது. ஏதேனும் ஆகாரம் கொடுத்தால் நிறுத்திவிடுகிறது!

குழந்தை தானாகவே அமைதியடைந்து உறங்க வேண்டும். வண்ண விளக்குகள், மெலிதான இசை இதெல்லாம் அதற்கு உதவும். இரவில் அடிக்கடி உணவு கொடுக்காதீர்கள். தூக்கி வைத்துக் கொள்ளாதீர்கள். இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு குழந்தை அழுவதை நிறுத்தி விடும்.

என் உறவினரின் குழந்தைக்கு இதய வால்வு இடம் மாறி இருக்கிறது.

பீடியாட்ரிக் கார்டியாலஜிஸ்ட்டிடம் (குழந்தைகள் இதய மருத்துவ நிபுணர்) காண்பியுங்கள். அவர் சரி செய்து விடுவார். ஜாக்கிரதையாகக் கண்காணியுங்கள்.

என் 14 மாதக் குழந்தை நடக்கும் போது, வலது பாதத்தைக் கோணலாக வைத்து விடுகிறது. நாலைந்து அடி நடந்த பிறகு, இடது பாதம் சரியாக வைக்கிறது.

ரொம்ப ஆரம்ப நிலை. சில குழந்தைகள் நடப்பதில்லை இந்த வயதில். ஆனாலும், பாதத்தைப் பரிசோதித்துவிடுவது நல்லது.

என் 11 வயதுக் குழந்தையும், 4 வயதுக் குழந்தையும் படுக்கையை நனைத்து விடுகிறார்கள்...

இரவு படுக்கப் போகுமுன் திரவமாக எதையும் கொடுக்காதீர்கள். படுக்குமுன் டாய்லெட்டுக்கு அழைத்துச் செல்லுங்கள். பெரிது படுத்தாதீர்கள். 'கவலைப்படாதே!' என்று அன்பாகச் சொல்லுங்கள். மிரட்டி அதட்டினால் பயந்துபோன குழந்தை இன்னும் தொடர்ந்து படுக்கையை நனைக்கும். ஒரு விஷயம் தெரியுமோ? அப்பா செய்திருந்தால் அது குழந்தைக்கும் வரும். உங்கள் மாமியாரிடம் கேட்டுப் பாருங்கள், உங்கள் கணவரின் குழந்தைப் பருவத்தைப் பற்றி (கூடவே வந்திருந்த 'அப்பா', "நான் ஒன்றும் அப்படி நனைக்கவில்லை!" என்று ஆட்சேபிக்க, குபீர் சிரிப்பு!) குழந்தையை நன்றாகப் புரிந்து கொண்டு, அதனுடன் ஒத்துழையுங்கள். எல்லாம் சரியாகிவிடும்.

எனக்கு 10 மாதக் குழந்தை ஒன்று இருக்கிறது. இப்போது மறுபடி நான் தாயாகப் போகிறேன். என் முதல் குழந்தை எப்படி நடந்து கொள்ளுவானோ என்று கவலையாக இருக்கிறது.

உங்கள் வயிறு மேடிட்ட பிறகு, காண்பித்து, உள்ளே தம்பிப் பாப்பா, தங்கச்சிப் பாப்பா இருப்பதைச் சொல்லுங்கள். உன்னை அம்மா எவ்வளவு நேசிக்கிறாள் தெரியுமா என்று கொஞ்சலாகச் சொல்லுங்கள். குழந்தையிடம் எல்லா கவனத்தையும் கொடுங்கள். ஆஸ்பத்திரிக்குக் குழந்தை வரும்போது, உங்கள் புதிய வரவை வேறு யாராவது பார்த்துக் கொள்ளுகிற மாதிரி செய்யுங்கள். மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பும்போது, புதிய குழந்தையை நீங்கள் தூக்கிக் கொண்டு வராதீர்கள். வேறு யாராவது - உங்கள் உறவினரோ, தோழியோ - தூக்கிக் கொண்டு வரட்டும். புதுக் குழந்தையிடம் நீங்கள் அதிகக் கவனம் செலுத்தாத மாதிரி காண்பித்துக் கொள்ளுங்கள். 'அம்மாவுக்கு அந்த டப்பாவை எடுத்துக்கொடு குழந்தே!' 'அம்மாவுக்கு அந்த டம்ளரை எடுத்துத் தா குழந்தே' என்று அதனிடம் ரொம்ப ஒட்டுதலாக இருப்பது போல நடந்து கொள்ளுங்கள். மூத்த குழந்தையுடன் தினமும் ஒரு மணி நேரமாவது கூடவே இருங்கள். சின்னக் குழந்தை அழுது, பெரியவன் 'அவன் அழுறான் பாரு' என்று சுட்டிக் காட்டினால், அவன் பாட்டுக்கு அழட்டும். அவனுக்கு என்னவேலை!' என்று அக்கறையே இல்லாத மாதிரி பதில் சொல்லுங்கள். பிறகு வளர வளர மூத்த குழந்தை புரிந்து கொள்ளும், அம்மா நம்மை அலட்சியம் செய்யவில்லை என்று.

- சாருகேசி

மாற்றான் தோட்டம்...

"ஆண்டிப்பட்டியில் தேர்தல் என்று அதிகாரபூர்வ அறிவிப்பு வந்தவுடன் வண்டலூர் உயிரியல் பூங்காவில் ஏதோ ஒரு மிருகம் காணாமல் போனதாகக் கதைக்கப்பட்டு மறுநாள் முதல் பூங்கா பூட்டப்பட்டது. 32 முழு நாட்களுக்குப் பிறகு அந்தப் பூங்கா மீண்டும் மக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்படுகிறதாம்.



என் ஐயம் இது - ஆண்டிப்பட்டியில் தேர்தல் அறிவிப்பு துவங்கி ஓட்டுப்பதிவு முடியும்வரை வண்டலூர் அண்ணா உயிரியல் பூங்காவை மூடி வைத்திருந்தால்தான் அம்மா தேர்தலில் ஜெயிக்க முடியும் என்று ஜோதிடர்கள் சொல்லியிருப்பார்களோ?

(தினமலர் - ச.சுருளிமுத்து, தேனி)



வெட்கக்கேடு!

✉ அட்டைப்படம் 'சித்தி' மேடம்! வேலூர் சிறப்பிதழில் வேலூர் கோட்டை அட்டையில் இடம் பிடித்திருந்தால் கல்கிக்கு வெற்றிக் கொடி பிடித்திருப்போம்!

வேலூர், கவிஞர் ச.இலக்குமிபதி

✉ 'ஜலகண்டேசுவரர் தரிசனம்' கட்டுரை பரவசம் அளித்தது. வேலூர் சிறப்பிதழுக்குத் தங்க மகுடமாய் மின்னிய கட்டுரை.

அயன்புரம், த.சத்தியநாராயணன்

✉ திராவிட இயக்கங்கள் தடுமாறி விட்டன என்று கூறும் வரதராஜன், கம்யூனிஸ்ட் இயக்கங்களும் பாரதிய ஜனதாவை எதிர்க்க வேண்டு மென்ற ஒரே காரணத்தை முன்னிட்டு, காங்கிரஸ் மற்றும் மாநில கட்சிகளை ஆதரித்து தன்னுடைய சொந்த முகத்தை இழந்து வருவதை உணர்ந்து செயல்பட்டால் நல்லது.

சென்னை, ஆர்.நாகராஜன்

✉ பைபிளும் குரானும் ஒரே செய்தியைத்தான் சொல்கின்றன. இரண்டுமே கடவுளின் தூதர்களைப் பற்றியும் மீட்சி பற்றியும் நரகத்தைப் பற்றியும்தான் பேசுகின்றன. சற்று சிந்தித்துப் படித்துப் பார்த்தால் பைபிளும் குரானும் பேசுவதைத்தான் பகவத் கீதையும் பேசுகிறது என்ற உண்மை புரியும். பொதுவில் மத நூல்கள் எல்லாம் ஒரே கருத்தைத்தான் கூறுகின்றன. மக்கள்தான் அதைத் திரித்தும், பிரித்தும் மதங்களிடையே சண்டையை வளர்க்கிறார்கள். ஆழமான உட் கருத்தைப் பார்க்கும்போது அனைத்து மத நூல்களும் ஒரே கருத்தைக் கூறுவது தெரியவரும்.

சிட்லபாக்கம், லலிதா செல்லப்பா

✉ தலையங்கம் மிகுந்த ஆதங்கத்துடன் எழுதப்பட்டிருந்ததை உணர முடிந்தது. முன்பு கலைஞர் ஆட்சிக்கு வந்ததும் காவல் துறையின் ஈரல் கெட்டுப் போயிருந்தது என்றார். அவரது ஆட்சியில் சில ரவுடிகள் நடுரோட்டில் (சினிமாவில் வருவதுபோல) சுட்டுக் கொல்லப்பட்ட போது ரவுடிகளை இப்படியா கொல்வது? என கண்டன அறிக்கை விட்டவர் ஜெயலலிதா! ரவுடிகள் ஆதிக்கம் அதிகமானதில் வியப்பென்ன?

சென்னை, கே.கணேசன்

✉ 'கவடுகள்' பகுதியில் திருப்பூர் கிருஷ்ணன், முகவரி வெளியீட்டின் விபரீத விளைவுகள் பற்றிச் சொல்லியுள்ளார். அன்றைய நிலையிலிருந்து இன்னமும் சில வாசகர்கள் மாறவே இல்லையென்பதுதான் வெட்கக் கேடு. பெண் எழுத்தாளரான எனக்கும் அந்த அனுபவம் ஏற்பட்டிருக்கிறது.

மன்னார்குடி, சரஸ்வதி இராசேந்திரன்

✉ அமரர் கல்கியின் 'சிவகாமியின் சபத'த்தை என்னைப் போன்ற இளம் வயதினர் படிப்பதற்கு மீண்டும் அதைப் பிரசுரிப்பதற்காக நன்றி சொல்ல வேண்டும். தூசியும் தும்பும் ஒட்டடையும் மண்டிக் கிடக்கும் ஒரு வீட்டுக்குள்ளிருந்து வெளியேறி தூய்மையும் எளிமையும் நிறைந்த காற்றோட்டமான மாளிகைக்குள் புகுவதைப் போன்ற ஒரு சுகமான உணர்வு, அமரர் கல்கியின் 'சிவகாமியின் சபத'த்தைப் படிக்கும்போது உள்ளத்திலும் உடலிலும் உண்டாகிறது.

நடுக்காவிரி, மலர்விழி முத்து விநாயகம்

வட்டமேஜை

27 அமைச்சர்கள் தேவைதானா?

● லலிதா செல்லப்பா, சென்னை - 64.

? பள்ளிக்கு வராத மாணவனுக்குத் தண்டனை உண்டு. அலுவலகத்துக்கு வராத பணியாளருக்குத் தண்டனை உண்டு. ஆனால், சட்டசபை, பார்லிமெண்டுக்கு வராத உறுப்பினர்களுக்கு எந்த தண்டனையும் கிடையாது. என்ன சார் இது நியாயம்?

!1) தண்டனை கிடையாது என்று நீங்கள் நினைப்பது தவறு. தண்டனை உண்டு. எம்.எல்.ஏ, எம்.பி பதவியே பறி போகலாம்.

2) அது சரி, வந்து என்ன சாதித்தார்கள்? வரவில்லையே என்று வருத்தப்பட...?

● இ. பாஸ்கர், சாலைமாநகர்.

? இந்திய நாட்டில் அடிக்கடி கலவரங்கள் நடப்பதால், நமது நாட்டின் வளர்ச்சியில் பெரிய தடை ஏற்படும்போல் தெரிகிறதே - இதைப் பற்றி...?



• நல்லுறவு—

•, ... நாயகர்கள்!

! கலவரங்களால் விளையும் நேரடி பாதிப்புகள் ஒரு புறம்; அயல்நாடுகளின் பார்வையில் இந்தியா கலவர பூமியாகும்போது இங்கே முதலீடு செய்ய அவர்கள் தயக்கம் காட்டுவது இன்னொருபுறம் - இரட்டைப் பாதிப்பு.

● கே.வி. ஜானகிராமன், சென்னை - 4.

? ரபி பெர்னார்ட், சுதாங்கன் வர்ணனை - சேதுராமன் - பொன்னுச்சாமி போல்தானே இருந்தது?

! சேதுராமன் - பொன்னுச்சாமியின் மனோகரமான, மங்களமான இசையை இப்படிக் கேவலப்படுத்த எப்படி மனம் துணிந்தது ஜானகிராமன்!

● இல. வெங்கட்ராமன், சென்னை - 78. •

? தமிழ்நாட்டில் நிதி நெருக்கடி இருக்கும்போது 27 அமைச்சர்கள் தேவைதானா...?

! எண்ணிக்கையைக் காட்டிலும் அதிகமாக அச்சுறுத்துவது பெரும்பான்மை அமைச்சர்களின் அனுபவமின்மை!

● ஜோ. பன்னீர்செல்வம், சென்னை -84.

? ஜெ. பதவியேற்பு நிகழ்ச்சியில் அன்பழகனும் ஸ்டாலினும் கலந்துகொண்டு சிறப்பித்தார்களே? இதே கலாசாரம் தொடருமா?

! சம்பிரதாய நல்லுறவு தொடர்ந்தால் போதாது; நிர்வாக ரீதியான நல்லுறவும் இருந்தால்தான் - தொடர்ந்தால்தான் - சென்னையும் தமிழகமும் பயன்பெறும். ஹு\"ம்...! (பெருமூச்சு கேட்கிறதா?)

● ஆர். இரவிகுலவர்மன், கபிஸ்தலம்.

? முறைகேடான வழிகளில் தேர்தலில் வெற்றி பெறும் அரசியல்வாதிகள் பதவியேற்பின்போது அவர்களுடைய மனசாட்சி வெட்கப்படாதா?

! வெட்கப்படும்தான்! ஆனால், அதைக் கட்சித் துண்டு போட்டு மறைத்து விடுவார்கள்!

● ஜி. ஜெயராமன், கூத்தலூர்

? வாழ்வில் விலை மதிப்பற்ற விஷயம் என்று எதைச் சொல்லலாம்?

! ஏதோ ஒரு கேமரா மாத்திரையாம். விலை இலட்சக்கணக்கில்! அதை நோயாளி விழுங்கியதும் நாக்கிலிருந்து குடல் வரை பயணப்

❑ ரூ. 100 பரிசு பெறுபவர்
கே. தெய்வசிகாமணி,
24/23, புல்லா அவென்யூ,
ஷெனாய் நகர்,
சென்னை 600 030

• ரூ. 50 பரிசு பெறுபவர்:
இல. வெங்கட்ராமன்
10, ஏஷியானா பிளாட்ஸ்,
ராஜா தெரு,
சென்னை - 600 078

பட்டு, படங்களாக எடுத்துத் தள்ளுமாம். பிறகு அந்த மாத்திரை வெளியேறி விடுமாம்! இதையெல்லாம் பார்த்தால், விலை மதிப்பற்ற விஷயம் ஆரோக்கியம்தான்! சும்மாவா சொன்னார்கள்... நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று!

● **சுப்புவேதையா சித்திரவேலு, கருப்பம்புலம்.**

? அதெப்படி ரிசல்ட் வருவதற்கு முன்னரே அம்மா வென்று வந்ததாகக் கருதி தலையங்கம் தீட்டலாம்...?

! பற்பல எதிர்க்கட்சிகளின் மீது கொண்ட அபார நம்பிக்கையால் தான்.

● **எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி**

? எது காட்டுமிராண்டித் தனம்?

! குஜராத்தில் பழிவாங்கல் கோரதாண்டவமாடிக் கொண்டிருக்க, 'ஆமாம், அப்படித்தான் நடக்கும். அதுக்கென்ன இப்போ!' என்கிற ரீதியில் விஎச்பி மகானுபாவர் கிரிராஜ் கிஷோர் விட்ட அறிக்கை.

● **எஸ். தாண்டவன், மயிலாடுதுறை**

? ஒரு பத்திரிகை பேட்டியில் இராம நாராயணன், 'நான் ஓர் இயக்குனர் என்று கூட சொல்லிக்க மாட்டேன். நாணயமான வியாபாரி' என்று கூறியிருப்பது குறித்து...?

! வியாபாரத்தில் நாணயமாயிருந்து சரக்கை மட்டச் சரக்காகக் கொடுத்து என்ன புண்ணியம்?

● **கே. தெய்வசிகாமணி, சென்னை - 30** ❒

? நீங்கள் சொன்னபடி 'ஜெ'வுக்கு எதிராகப் பொது வேட்பாளரை நிறுத்தியிருந்தாலும் 28,000 வோட்டு வித்தியாசத்தில் ஜெ. ஜெயித்திருப்பார் போலிருக்கிறதே? (பதிவான வோட்டு எண்ணிக்கை அடிப்படையில் சொல்கிறேன்)



* வர்ணனை...



*– விதானை!

! வாக்கு வித்தியாசத்தை வைத்துத் தப்புக் கணக்குப் போடக் கூடாது. நிறுத்தப்பட்ட பொதுவேட்பாளருக்காக எல்லோரும் சேர்ந்து ஒருமுகமாகப் பிரசாரம் செய்திருந்தால் அதன் விளைவு முற்றிலும் வேறாக இருந்திருக்கும். காங்கிரஸும் கம்யூனிஸ்டுகளும் தேர்தலைப் புறக்கணித்ததையும் மறக்கக் கூடாது.

● **பி. சுமதி, சென்னை - 15.**

? டானியல் பேர்ல் மனைவி, ''குற்றவாளிகளை மன்னித்து விடுங்கள்; பழிக்குப் பழி வேண்டாம்'' என்று கூறியிருப்பது பற்றி...?

! உருக்கமான அறிக்கை; அதைவிட உருக்கம், ''பிறக்கப் போகும் என் குழந்தையிடம், 'உன் தகப்பனார் பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடி உயிர்த் துறந்தார்!' என்று கூறுவேன்'' எனச் சொன்னதுதான்.

● **இரா. ஆறுமுகம், திருச்சி - 9.**

? 'எனக்கு பஸ் டிக்கெட் கூட வாங்கித் தரவில்லை கருணாநிதி' என்று எஸ்.எஸ். சந்திரன், 'அ.தி.மு.க.வில் சேர்ந்த பிறகு என் கடன்களில் பாதியை அடைத்திருக்கிறேன்' என்று ராதாரவி...! - இந்தப் பேச்சு பற்றி உங்கள் கருத்து...?

! இவர்கள் எதற்கு அரசியலுக்கு வருகிறார்கள் என்பதற்கான வாக்குமூலம் எனக்குக் கிடைத்தது. பாவம், மக்களுக்குப் புரிய வேண்டுமே! அவர்கள் ராதாரவி ஏதோ சாதித்துவிட்டதாக நினைப்பார்கள்!



* கை கொடுத்த...



*– கட்சி!

● **உமரி பொ. கணேசன், மும்பை - 37.**

? நக்கீரன் நிருபர் சிவசுப்ரமண்யம் மனைவியிடம் காவல் துறை அநாகரிகமாக நடந்து கொண்டது பற்றி ஜெ. தீர விசாரிப்பாரா...?

! ரொம்ப ரொம்ப சந்தேகம்தான். ஏற்கெனவே போலீஸ் தரப்பில் எல்லாம் நியாயப்படுத்தப்பட்டு விட்டது.

- தராசு

மினி தொடர் - 3

மலை என்கிற ஆச்சர்யம், அமிர்த சரஸ்வதியின் மனசில் எப்போது வந்து உட்கார்ந்தது? சில விஷயங்கள் எத்தனை வருஷங்களுக்கு முன்னால் நடந்திருந்தாலும், மறப்பதில்லை. அவற்றில் ஒன்று அவள் முதன் முதலாகத் தாவணி போட்டுக் கொண்டு பள்ளிக்குப் போன நாள். கற்பகவல்லிக்கு இந்தப் பிரச்னை வேறு மாதிரிச் சரிப்பட்டுப் போயிற்று. கோடை விடுமுறை விட்டுப் புது வகுப்புக்கு அவள் போகும்போது தாவணி போட்டுக் கொண்டு வந்தாள். அதனால், வினோதத்துக்கான புருவம் உயரவில்லை. அமிர்தாவுக்கு அத்தை ரூபத்தில் சிக்கல் வந்தது. ஊரிலிருந்து அத்தை மறக்காமல் பொரி விளங்காய் உருண்டையோடு வந்திருந்தாள். அத்தையின் ஸ்பெஷல்' அது. எப்போது வந்தாலும் அத்தை அந்த உருண்டையோடு தான் வரும். வேர்க்கடலையும் சீனியும், ஏல



வாசனையுடன் தித்தித்துக் கொண்டு நாக்கில் கரையும் சுகம் அலாதி. ஆனால், உடைக்க முடியாது. சுத்தியல் வைத்துத்தான் அந்த மாவுருண்டையை உடைக்க முடியும். அத்தை, அப்பாவிடம் சொல்லியது.

"குழந்தை, நாளைலேந்து தாவணி போட்டுக் கொண்டு போகட்டும்."



அப்பா ஆச்சர்யமாக அத்தையைப் பார்த்தார்.

"என்னக்கா, குழந்தைக்குப் போயி..?"

அன்றைக்குச் சாயங்காலமே அத்தை அப்பாவை அழைத்துச் சென்று தாவணிகள் பாவாடைத் துணிகள் வாங்கி வந்தாள். ஆற்றுக்குப் போகும் வழியில் இருந்த வகாப் டைலரிடம் கொடுத்துத் தாவணிக்கு ஓரம் அடித்து வாங்கியாகிவிட்டது.

மறுநாள் காலை, தாவணி போட்டுக் கொண்டு பள்ளிக் கூடம் போனாள் அமிர்தா. ரிடையர்ட் ஆகப் போகிற கணக்கு வாத்தியார், ஜெயப்பிரகாஷ் சார்தான், முகம் முழுக்க் குறும்பும் விஷமும் பரவி இருக்க, 'உம்' என்றார். கோபமாக வந்தது. அதுவரைக்கும் பெரிதாகத் தோன்றாத ஒரு சின்ன விஷயம், சாரின் பார்வை காரணமாகவே பெரிதாகி, உறுத்தலுமாகியது. கற்பகவல்லியை இழுத்து வைத்துக் கொண்டு பேசிக் கூச்சத்தைக் கடக்க முயன்றாள் அமிர்தா. அன்று தமிழ் ஐயா, மலையைப் பற்றித்தான் வகுப்பெடுத்தார். பாடம் நடத்துவதற்கு முன், மாணவர்களை வகுப்புக்கு வெளியே அழைத்துப் போய்த் தூரத்தில் இருந்த அந்த நரசிங்க மலையைச் சுட்டிக் காட்டினார் அவர். மலைகளின் அரசியாம் அது.

எது, எவற்றையும் விடப் பெரியதோ, அது அரசன் அல்லது அரசி. நரசிங்க மலைதான் மற்றவைகளை விடப் பெரிதாகப், 'பார், என்னுடைய பெருமையை' என்று கர்வித்துத் தலையைச் சிலிர்த்துக் கொண்டு நின்றது. மற்றவை குன்றுகள். அம்மாவின் மடிக் குழந்தைகள் மாதிரி, சிங்கத்தின் குட்டிகள் மாதிரி, அதன் தாளில் நின்றிருந்தன. மேகம், அதன் தலையில் இளைப்பாறிச் செல்கிறது, வெந்நீரில் குளித்த உடம்பிலிருந்து மிதக்கும் ஆவியைப் போல.

தமிழ் ஐயா சொன்னார்.

'மலையும் ஆசிரியரும் ஒன்று போல. மலை அளக்க முடியாதது. அளவெடுத்துக் கால் சட்டை, பாவாடை தைக்க முடியாத வடிவப் பெரிசு. மலை, கண்டுபிடிக்கச் சுலபம் அல்லாத பலவகைப் பொருள்களைத் தனக்குள் வைத்திருக்கிறது. பீமன், தாராசிங், கிங்காங், முகமது அலி முதலான எந்தக் கிங்கர்களாலும் அசைக்க முடியாத பலம் கொண்ட கல்யானை. ரொம்பத் தூரத்திலிருந்தும் பார்க்க முடிகிற

உயர்வைக் கொண்டது. மழை பெய்யாமல் உலகமே வறட்சி அடைந்த காலத்திலும், தன்னிடத்தில் இருக்கும் சுனை நீரால், தன்னை அண்டியவர்களுக்குத் தாகம் தீர்க்கும் வள்ளல் மனம் உடையது. மலையை வாத்தியார்கள், எழுதுபவர்கள், கவிஞர்கள் முதலானவர்களுக்குப் பொருத்திப் பார்த்துக் கொள்ளுங்கள்.'

வாத்தியார், அவர்களை மலையேற்றத்துக்கு அழைத்துச் சென்றார். ஆளுக்கு அஞ்சு ரூபாய்க் கட்டணம். அதில்லாமல், மதியச் சாப்பாடு கையோடு கொண்டு வந்துவிட வேண்டும். அமிர்தா, பூரி கிழங்கு வாங்கிப் பொட்டலம் கட்டிக் கொண்டாள். எஸ்.ஆர். பஸ்ஸில் அவர்கள், காலை ஏழு மணிக்குப் புறப்பட்டார்கள். அவர்கள் சேர்ந்த இடம்,

போராளிகளை ஓடவிட்டு முதுகில் சுட்டு வீழ்த்தித் தம் பிரதாபத்தைக் காட்டிக் கொள்கிறாராமே, ஓர் அதிகாரி- அந்த வஞ்சகம் போல வீராவுக்கும் தோன்றியிருக்கும். நான் அந்த ஆள் இல்லை. அவன் கோழை.

நரசிங்க மலை அல்ல. வேறு ஒன்று. சின்ன மலை. அதை மலை என்று சொல்வதே பிசகு. சின்னக் குன்று. இருந்தாலும் என்ன? தமிழில் குன்றென்றும் மூப்பென்றும் உண்டா? இல்லை. மலைப் பிரதேசம் சந்தோஷம். ஆனால், அதைப் பார்த்துவிட்டு வந்ததும், அதைப் பற்றி இரண்டு பக்கங்களுக்கு வியாசம் எழுதச் சொல்லுவதுதான் கொடுமை. உலகத்தில் மலையே இல்லாமல் போனாலும் நன்றாக இருக்கும்போல, எழுதும்போது தோன்றும்.

நன்றாக ஞாபகம் இருக்கிறது. அது ஒரு நல்ல கோடை காலம். வறுத்தெடுக்கிற வெயில். கசகசவென்று வியர்வை ஊற்றும். இதைப் போய் 'நல்ல' கோடை என்கிறார்களே! அன்று ஒரு மத்தியானம். மதியச் சாப்பாடுக்குக் கடை முடிந்து அடுக்களையை ஒழித்துக் கொண்டிருக்கிறாள் அமிர்தா. அம்மியை அடுத்து, சுவருக்கும் அம்மிக்கும் இடையே விழுந்த இருள் கொத்தில் எதுவோ ஊர்ந்தது. கண்களைக் கூர்மையாக்கிக் கொண்டு பார்த்தாள். ஒரு குட்டிப் பாம்பு. கறுப்பாக, கோடுகளுடன். அவளது அலறலில் அப்பா, படுத்துக் கொண்டிருந்தவர், எழுந்து ஓடிவந்து, நிலைமையை அறிந்து பாம்பை அடித்துக் கொன்றார். அது தோட்டத்திலிருந்து வந்திருக்கும். தோட்டத்துக் கதவைச் சாத்தி வைக்க வேண்டும்; தண்ணீர் போகும் துளைச் சந்தைத் துணி வைத்து மூட வேண்டும்... யோசனைகள். எல்லாம் செய்து முடித்தாள். மனம், திக்திக் என்றது. பயமா? இல்லை. அருவெறுப்பு. நெளிகிற எல்லாமும் அருவெறுப்பு. உடம்பில், உரோமங்கள் நெளிவன போல் தெரிந்தன. உடம்பு மண் வாசனை வந்தது.

''என்ன இப்படி? சாயங்காலம் மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வர நேரத்தில்?''

''அது, இதுக்குத் தெரியாதேப்பா!''

தமாஷை ஏற்க முடியாத நிலையில் இருந்தார் அப்பா.

''சரி. போகட்டும். வர்றவங்களுக்கு என்ன டிபன் பண்ணலாம்பா?''

''என்னத்துக்குச் சிரமம். பொண்ணா, அழகா டிரஸ் பண்ணிட்டு, இரு.''

தெருவில் இலேசாக இருட்டு பரவும் போதுதான், மாப்பிள்ளை வீட்டார் வந்தார்கள்.

வாசனைப்பத்தி, மிகவும் ரம்மியமான மணத்தைத் தவழ்த்திக் கொண்டிருந்தது. அமிர்தாவுக்கு அவனிடம் நிறைய சொல்ல வேண்டியிருந்தது. தட்டில், பழங்கள், இனிப்புகள், ஃபிளாஸ்க்கில் பால் எல்லாம் கண்ணுக்கு அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பட்டுப் புடைவையை மாற்றிச் சௌகர்யமான 'நைட்டிக்கு' அவள் மாறி இருந்தாள்.

அமிர்தா, முதலில் அவனிடம் சொல்ல வேண்டியவை என்று மனசுக்குள் ஒரு பட்டியலே வைத்திருந்தாள். மிகப் பெரிய பட்டியல் அது. மாதாந்திரப் பல சரக்குப் பட்டியலை விடவும் பெரியது அது. முதலில் எதைச் சொல்வது? தூங்கி எழுந்ததும், 'குடுகுடு' என்று தோட்டத்துக்கு ஓடி, செம்பருத்திச் செடியின் கரும்பச்சை இலைகளில் தேங்கி இருக்கும் பனிநீரைப் பார்ப்பதில் அவளுக்கு விருப்பம். கை பட்டதும், இலை, ஒரு சொட்டு வடிக்கும். நுணா மரத்திலிருந்து சிட்டுகள், தங்கள் ஆகிருதிகளுக்குப் பொருந்துகிற குரலெடுத்துக் 'கூச்' இடுவதைக் கேட்க வேண்டும். காலை நேரத்துக்கு என்று ஒரு வாசனை இருக்கிறது. அது சூரியனிலிருந்து வரும் வாசனை. ஏன் சூரிய வீட்டில் சாம்பிராணி போடக் கூடாது என்று விதியா? எனக்குக் காபி பிடிக்கும். தண்ணீர்



"என்னது, உங்களுக்கு நாலு மக்கர் செல்வமா?!"

"ஆமாங்க, எந்நேரமும் மக்கர் பண்ணிட்டே இருக்கானுங்களே!"

- ஜி.வி. பிரியா

கலக்காத, கறந்த பாலைக் கொதிவரப் பண்ணி, இடித்து இறக்கின டிகாக்ஷனைச் துக்கினிச் சர்க்கரை (சர்க்கரைச் சனி இல்லாமலும் கூடும் தான்) போட்டுக் கொண்டு, நுரைக்க, நாக்கு சுசுக்க விடி காலையில் இறங்கும் காபியைக் காபி எனலாகாது. அது அமுதம். எனக்கு இட்டிலி பிடிக்கும். தமிழர்களின் தேசிய உணவு. உண்மை என்ன தெரியுமா? விஜய நகரத்து ஆட்சி தமிழ்நாட்டுக்கு வரும்போது தான் நமக்கு இட்லியும் உடன் வந்துச்சாம். நல்லதுதானே? 'பொசபொச' என்று உப்பிக் கொண்டு, பஞ்சு பஞ்சாக, விண்டால் கையோடு வருகிற, நெய்யோ, எண்ணெய்யோ முழுக்காட்டின இட்லியும், அப்போதான் அரைத்த தேங்காய்ச் சட்னி, ரூபாய் நாணயம் அளவுக்கு மிளகாய்ப் பொடியும் சேர்த்துக் கொண்டால், அது அழகான விடியல். எனக்கு இப்படியான காலைப் பலகாரம் பிடிக்கும். அப்புறம், அதோ வெளியே பாருங்கள். எத்தனை எத்தனைப் பட்டாம் பூச்சிகள். என்ன அற்புத வர்ணக் கலப்பு? எந்த ஓவியன் குழைத்துப் பூசிய வண்ணக் கவிதை அது? எனக்குப் பட்டாம் பூச்சியாக ஆசை. ஆனால், நான் பூச்சியாக மாறுவேன் என்றால், இங்கே இருக்கிற தோட்டத்துச் செடிகளில் மொய்ப்பேன் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை. மாட்டேன். பட்டாம் பூச்சியாவேன் என்றால், மலைப் பட்டாம்பூச்சியாவேன்.

மலை என்று சொன்னேன் அல்லவா? எனக்கு மலை வெறும் கல்மேடு அல்ல. அது எனக்கு க்ஷேத்ரம். நான்போக, பார்க்க, உலவ, வாழ ஆசைப்படும் ஒரே இடம் அதுதான். நாம் இருவருமே, நாளைக் காலையில் மலைக்குப் போவோம். சிங்க மலைக்கு. நம் முதல் பயணம் அதுவாக இருக்கட்டுமே. எவ்வளவு சந்தோஷமாக இருக்கும் எனக்கு. என்ன சரியா?

அப்புறம், எனக்கு ஒரு. என்ன சொல்ல, கனவு என்று சொல்லலாமா? சொல்லலாம். பசுக்கள். பால் கொடுப்பவை. கொடாதவை. எங்கள் ஊர், பஸ் நிறுத்தங்களில், நிழல் கூரையின் கீழே படுத்திருக்கும் பார்த்திருக்கிறீர்களா? இல்லையா? அட கஷ்டகாலமே. இத்தனை வயசு வரைக்கும் எதைத்தான் நீங்கள் பார்த்தீர்கள்? பார்க்க வேண்டியவற்றைத் தவிர மற்றது எல்லாவற்றையுமே நாம் பார்க்கிறோம். போதும். அந்த மாடுகள், அரைக்கண் மூடி, அசல் சாமியார்களைப் போல, ஏதோ உள் பயணம் போகும் யோகிகள் மாதிரி யோசித்துக் கொண்டிருக்குமே. அந்த யோசனைகள் என்னவாக இருக்கும்? உங்களுக்குத் தெரிந்தால் எனக்குச் சொல்லுங்கள். பால் இருக்கும் வரைக் கறந்து கொண்டு மடிச் சுரப்பு மறைந்ததும் விரட்டப்பட்ட நன்றிகெட்டத் தனத்தைப் பற்றி அவை யோசிக்குமா? அவற்றின் கனவுகளில் புல் மட்டும் வருமா? சுத்த நீர் வருமா? போஸ்டர்களையும், பிளாஸ்டிக் பைகளையும் இன்னுப் பசியாற வேண்டிய சோகங்களைச் சந்திக்குமா? வளர்த்த வீட்டின் பாட்டி, தாத்தா, மருமகள், குழந்தைகள் பற்றியெல்லாம் நினைக்குமா? அந்த வீட்டுப் பெரியவர்கள், முதியவர்கள், முதியோர் இல்லங்களில் இருந்து கொண்டு தம்மைப் போலவே தங்கள் குடும்பத்தாரை நினைத்துக் கொண்டிருப்பார்களா? எதை யோசிக்கும் இந்த மாடுகள். ஒரு நாளாவது மாடுகளாக வேண்டும் நான். அதுகளைப் பற்றிப் புரிந்து கொள்ளலாமே! எனக்கொரு சினேகிதன் இருந்தான். ஐயோ. இறந்த காலத்திலா சொன்னேன். இல்லை. இருக்கிறான். எங்கோ, குடும்பம், குழந்தை குட்டிகளுடன் இருப்பான். குடும்பம், குழந்தை இல்லாவிட்டால்தான் என்ன? தனி மனிதன் குடும்பம் இல்லையா, என்ன? கீழே, இஸ்திரி போட்டுக் கொண்டு ஜீவனம் செய்கிறவன், நம் சட்டை ஜாக்கெட் புடைவைக்கு இஸ்திரி போடுகிறவன் நம் குடும்பம் இல்லையா, என்ன? அவன் பேர், ஜீவா. அவன் என் பல கதவுகளைத் திறந்து வைத்தவன். அவன் கண்கள், என் ஸ்திரி அவயங்களில் படர்ந்து, என்னைப் பெண்ணாக, மனுக் குலத்தின் மற்றும் ஓர் இணைப்புச் சங்கிலியாக உணரச் செய்தது. எங்கள் ஊர்க் கோயில் - அம்மன் கோவில் - அவள் பேர் அழகிய வடிவுடை அம்மன். என்ன ஈரமான பெயர்களை வைக்கிறார்கள் நம் மூதாதையர்கள் – அவன் வீட்டுக்குப் பின்னால், ஒரு மாந்தோப்பு இருக்கிறது.

அந்த மாந்தோப்பில் அந்த அம்மன் பிறந்தாளாம். அதனால், அவளுக்கு மாம்பழ அம்மன் என்றும் பேராம். அம்மன், பக்தர்களால் புசிக்கத் தக்கவளாகத்தானே இருக்க வேண்டும். அந்த மாமரத் தோப்புக்குள் இருந்து கொண்டு, ஜீவா, என் விரல்களை நோகாமல் பற்றி, வருடிக் கொடுத்துக் கொண்டு, என்னை நேசிக்கிறதாகச் சொன்னான். என்ன ஆச்சரியம்? அப்போது, நீல வண்ணத்தில், ஒரு மீன்கொத்தி – அப்படித்தான் ஞாபகம். சிவுக்கென்று என் காதுப்பக்கத்தில் பறந்து கொண்டு போனது. நான் அவனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், அவன் அப்படிச் சொன்னது, எனக்குப் பிடித்திருந்தது. காதல் என்பது தான் என்ன? நாம் நேசிக்கப்படுகிறோம் என்கிற சந்தோஷம்தானே? எனக்குச் சந்தோஷம்.

'வேணாம். இது வேணாம், ஜீவா. எனக்கு அப்படிப் பழகத் தோணலை. எனக்கு அது வேண்டி இருக்கலை!'

அவனுக்கு நிச்சயம் ஏமாற்றமாகத்தான் இருக்கும். வருத்தமாகத்தான் இருக்கும். பத்திரிகையில் இப்போதெல்லாம் வந்து கொண்டிருக்கிறதே. தருமபுரியில் – எனக்கு அது அதர்மபுரி என்றே தோன்றும் – போராளிகளை ஓடவிட்டு முதுகில் சுட்டு வீழ்த்தித் தம் பிரபாவத்தைக் காட்டிக் கொள்கிறாராமே, ஓர் அதிகாரி – அந்த வஞ்சகம் போல ஜீவாவுக்கும் தோன்றி இருக்கும். நான் அந்த ஆள் இல்லை. அவன் கோழை. நான், என் விருப்பத்தை நேருக்கு நேராகச் சொன்னேன். என் அதிர்ஷ்டம். ஜீவா என்னைச் சரியாகப் புரிந்து கொண்டான். அவன் என்னை உண்மையாகவே நேசிக்கிறான். ஆகவே, அவன் என்னை மன்னித்தான். எங்கள் நட்பைத் தொடர்ந்தான். அந்த ஜீவாவை, உங்களுக்கு நான் அறிமுகப்படுத்த வேண்டும். மனிதர்களை அறிமுகப்படுத்திக் கொள்வதை விடவும், மனித வாழ்க்கையின் பெரிய பேறு வேறு என்னவாக இருக்க முடியும்? அதிலும் சகஹிருதயர்கள் வாழ்வில் எதிர்ப்படும்போது, எவ்வளவு பெரிய வரம் அது? எனக்குச் சுத்தமான நீர். இலேசான ஜில்லுடன் குடிக்கப் பிடிக்கும். எனக்கு, என் அப்பா கொடுத்த பார்க்கர் பேனா பிடிக்கும். என் பாவாடையின் ஓரம், அழுக்குப் படாமல் வைத்துக் கொள்ளப் பிடிக்கும். உள்ளாடைகள் நிறம் மாறாமல், மஞ்சள் கறை படியாமல் பாதுகாக்கப் பிடிக்கும்? பருத்திச் சேலை, பருத்தி சுரிதார், ஜரிகை இல்லாமல் அணிய பிடிக்கும். ஆகாய வண்ணம் பிடிக்கும். வெங்காயம் கலந்த சாம்பார், பஜ்ஜி, பகோடா பிடிக்கும். வத்தல் – அதிலும் கண்டை வத்தல் குழம்பு பிடிக்கும். மிதி பாகற்காய் பிடிக்கும். இரவு உறங்கப் போகும் முன்பு, பல் துலக்கவும், இளஞ் சூட்டில் குளிக்கவும் பிடிக்கும். என் கூந்தலுக்கு நெடி வராத மண எண்ணெய்ப் பூசப் பிடிக்கும். ஸ்பிரே – கடுமையாக இல்லாமல் – மிக மென்மையான ரகம் பிடிக்கும். என் வாசனை, உங்களைக் கடிக்கக் கூடாது. தழுவ வேண்டும். உடம்பின் கலப்பு, எனக்குப் பிடிக்கும். அதில் ஒரு விதிர்விதிர்ப்பு இருக்கிறது. குறுகுறுப்பு இருக்கிறது. உடம்பை உடம்பால் தானே வெல்ல முடியும்? வெல்ல வேண்டாம். கடப்போம். கடந்து செல்வோம்...

உறவும், மலை ஏற்றமும் ஒன்று போல இருக்கிறது. முதலில் பிரமிப்பு, ஐயம், அச்சம், அடி அடியாக வைத்து உயர்வதில் கிளர்ச்சி, உச்சியில் கால் வைத்து உலகத்தைப் பார்க்கையில் தோன்றும் 'ஹோ' என்னும் அகண்டாகாரம். பிரபஞ்சத்தில் நான் ஒரு அலகு. கடலில் நான் ஒரு கைப்பிடி...

அவன், ஒரு மாதம் மாமனார் வீட்டில் தங்குவதாக இருந்தவன், ஏழாம் நாளில் புறப்பட்டான்.

ஏன்? என்ன? என்று பதறினார் அப்பா.

என்ன நடக்கிறது என்று புரியாமல் விழித்தாள் அமிர்தா.

புறப்படும் போது அவன் சொன்னான்.


"தப்பு நடந்து போச்சு, அமிர்தா. நான் உனக்குத் தகுதியானவன் இல்லை!"

ஏன் என்று அவன் சொல்லவில்லை.

(தொடரும்)

மாற்றான் தோட்டம்

''ராணுவத்தினரே இடம்பெறும் குடியரசு தின ஊர்வலங்களில் சில மாறுதல்கள் தேவை. தற்கால சமூக, கலாசார, பொருளாதார மாறுதல்களை விளக்கும் வகையில் இளைஞர்கள், குழந்தைகள், மகளிர் ஆகியோருக்கு முக்கியத்துவம் கொடுக்கும் விதத்தில் இந்த ஊர்வலம் அமைய வேண்டும். சுழற்சி முறையில் ஒவ்வொரு குடியரசு தினத்தன்றும் இந்த ஊர்வலம் ஒவ்வொரு மாநிலத்தில் நடைபெற வேண்டும். இதை குடியரசு தலைவரும் பிரதமரும் பார்வையிட வேண்டும். கடற்படை, தரைப்படை மற்றும் விமானப்படை தினங்களின்போது அந்தந்த ராணுவம் தொடர்பான ஊர்வலங்களை ஜனாதிபதி பார்வையிடலாம்.''



(அலைவ் - எம். வி. ஸ்ரீனிவாசன், டெல்லி).

தொகுப்பு : **ஜி.எஸ்.எஸ்.**



உயிர்ப் போராட்டம்!

நிஜ நிகழ்வுகளை அடிப்படையாக வைத்து, படங்கள் தயாரிப்பதில் ஹாலிவுட் சினிமாக்காரர்களுக்கு எப்போதுமே அலாதிப் பிரியம் உண்டு. ஆனால், சிலரால் மட்டும்தான் அதைப் பார்ப்பவர்களின் மனத்தில் பதியம் போடுகிற மாதிரிச் சொல்ல முடிகிறது. இந்த வரிசையில் போஸ்னியா - குரோஷியா நாடுகளின் இடையே நடக்கும் முடிவில்லாச் சண்டைகளின் ஒரு துண்டுக் கதையை வைத்து, மூன்று மணி நேரத்துக்குச் சுவாரஸ்யம் சிதறாமல் திரைப்படமாகத் தந்திருக்கிறார் இயக்குனர் ஜான் மூரே! 'பிஹைண்ட் எனிமி லைன்ஸ்' (Behind enemy lines) - திரைப்படம் அமெரிக்காவில் வெளியான முதல் 10 நாட்களுக்குள்ளேயே மொத்தத் தயாரிப்புச் செலவையும் திரும்ப எடுத்துவிட்டது. (நம் ஊர் போலவே விடியோ பைரஸி, கேபிள் டீவிக்களின் ஆதிக்கம் எல்லாம் நிறையவே உண்டு என்பதறிக!)

கிறிஸ் பர்னெட் (ஓவன் வில்சன் ஏற்றிருக்கும் பாத்திரம்) ஒரு துடிப்பான இளம் கப்பல் படை விமான பைலட். போஸ்னிய கலவரங்களைக் காரணமாக வைத்து நாசவேலைகளில் ஈடுபடும் சதிகாரர்களை ஒடுக்க, பால்கன் கடற்பகுதியில் நிறுத்தப்பட்டிருக்கும் அமெரிக்க கார்ல் வின்ஸன் கப்பலில் அவன் ஜாகை. நேரடி யுத்தம் எதுவும் இல்லாமல், சவால்களற்ற சவசவ வேலையில் அவனுக்கு விருப்பமில்லை. எனவே, வேலையை உதற முடிவெடுத்து ராஜினாமா கடிதம் கொடுக்கிறான். அதைப் பதினைந்து நாட்கள் வரை ஒத்திப்போடும்படி அறிவுறுத்துகிறார் மேலதிகாரி அட்மிரல் ரெய்க்ரட். மேலும், போஸ்னிய எல்லைப் பகுதியில் வழக்கமாக மேற்கொள்ளப்படும் கண்காணிப்புப் பணிக்கு அவனை அனுப்புகிறார். மற்றொரு பைலட்டுடன் சேர்ந்து ரோந்து போகும்போது, அவர்களது விமானம் தவறுதலாக போஸ்னியாவுக்குள் நுழைந்துவிட, போஸ்னிய ஏவுகணைத் தாக்குதலுக்குள்ளாகி நொறுங்கிவிடுகிறது. தப்பிப் பிழைத்த இரு விமானிகளில் ஒருவனைச் சுட்டுக்கொன்று விடுகின்றனர் போஸ்னிய வீரர்கள். இன்னொரு பைலட்டான கிறிஸ் பர்னெட்டைத் துரத்துகிறார்கள். வேவு பார்க்கும்போது கிடைத்த சில முக்கியமான ஆதாரங்களுடன் தப்பி ஓடுகிறான் கிறிஸ்.

பல போராட்டங்களுக்குப் பின் மயிர்க்கால்கள் சிலிர்க்கும் ஒரு ஆக்ஷன் க்ளைமாக்ஸ். கிறிஸ் எப்படியாவது தப்பிவிடக் கூடாதா? என்று படம் பார்க்கும் ஒவ்வொருவரையும் பதைபதைக்க வைக்கும்படியான திரைக்கதை. நிஜ போஸ்னியாவுக்கு அருகிலேயே படம் பிடித்திருப்பதாலோ என்னவோ, காட்சிகளில் உயிர்த்துடிப்பு ஓடிக் கொண்டிருப்பதை மறுக்க முடியாது. ஆர்ட் டைரக்டருக்கு அவ்வளவாக வேலை வைக்காமல், நிஜ லொகேஷன்களில் பெரும்பகுதி படம் எடுக்கப்பட்டிருப்பதால் யதார்த்தம் நெஞ்சை நெருடுகிறது.

கதாநாயகன் ஓவன் வில்சன், ஜாக்கி சானுடன் நடித்த 'ஷாங்காய் நூன்' படத்தில் காமெடியனாக நடித்ததைப் பார்த்துவிட்ட நமக்கு, இவ்வளவு சீரியஸான பாத்திரத்தில் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதேபோல, எதிரியின் ஒரு குண்டுகூட இவர் அருகில் வராமல் வீர பக்த ஹனுமான் ரேஞ்சுக்கு ஹீரோவை எந்தக் கவசம் காப்பாற்றுகிறது என்றும் தெரியவில்லை.

'விடியோ கேம்' படங்களை இயக்கிப் புகழ் பெற்ற இயக்குநர் ஜான் மூரே-யின் முதல் திரைப்படம் இது. பார்த்தால் அப்படித் தோன்றவில்லை!

- ஜீவன்

சக்திக்கும் புத்திக்கும் அமிர்தம்!

சின்ன புல்! இரண்டு தூறல் தூறினாலே, 'பசபச' என தழைத்தோடும் சிறு கொடி. நீர் கண்ட இடமே நிம்மதி என வருடம் முழுவதும் நீடித்து வளரும் அருகம்புல்.... இந்த சிறு புல் லுக்கும் பிணி தீர்க்கும் மருத்துவ குணமுண்டு என அறிந்து, நோய்களை அறுப்பதால் 'அருகு' என காரணத்தோடு பெயர் சூட்டிய முன்னோர் களின் ரசனைக்கு ஜே!

வாத, பித்த, கப நோய்கள் நீங்க அருகம்புல் அம்சமாய் உதவி செய்திடும்.


தினசரி காலை எழுந்ததும், அருகம்புல்லை வேரோடு பறித்து, மண் போக நன்றாக அல சவும். சுத்தம் செய்யப்பட்ட அருகம்புல்லை, வேரோடு அரைத்து, சாறு பிழியவும். அரை தேக்கரண்டி மிளகு, அரைத் தேக்கரண்டி சீரகம், கால் டீஸ்பூன் அதிமதுரம், கால் டீஸ்பூன் சித்தரத்தை எல்லாவற்றையும் பொடித்து, சலித்துக் கொள்ளவும். ஒரு டம்ளர் வெந்நீரில் மேலே சொன்ன பொடியை ஒரு டீஸ்பூன் இட்டு, அரை டம்ளர் அருகம்புல் சாறு கலந்து, தினமும் அருந்தி வர, இருமல் இல்லாமல் ஓடும்! சளி பிரச்னை சொல்லாமல் ஓடும்!

அருகம்புல் வேரை மட்டும் சிறு சிறு துண்டுகளாக நறுக்கிக்கொண்டு நிழலில் உலர்த்தி, பொடி செய்து சலித்து வைத் துக்கொண்டால், பல நோய் களுக்குப் பிரயோகப் படுத்தி ஜெயிக்கலாம்.

ஒரு தேக்கரண்டி அருகம்புல் வேர் பொடி யைப் பசும்பாலில் இட்டு, காய்ச் சிக் குடித்தால் மூலநோய் குணமாகும்.

இதே அருகம்புல் வேர் பொடியை, வெந்நீரிலிட்டுப் பருகினால், சிக்கலின்றி சிறுநீர் பிரியும்.

அருகம்புல் வேர் பொடி ஒரு டேபிள் ஸ்பூன் அளவு என்றால், தேன் ஒரு டேபிள்



மூலிகை கேலரி - 9

ராஜம் முரளி

ஸ்பூன், பனங்கற்கண்டு ஒரு டேபிள் ஸ்பூன் பசும்பாலில் கலந்து பருகி வந்தால், இருதயம் திண்டுக்கல் பூட்டு போல ஸ்ட்ராங்காக இருக்கும்.

பரீட்சைக்குப் படிக்கும் மாணவர்களுக்கு அருகம்புல் கீரை பொரியல் செய்து கொடுங்கள். இதனால் ஞாபகசக்திப் பெருகும். அருகம்புல்லை, அப்போது பறித்து, கழுவி, பொடிப் பொடியாக நறுக்கவும். அரை ஆழாக்குப் பாசிப்பருப்பை வேக வைத்து, இரண்டு பல் பூண்டு, சிறு துண்டு இஞ்சி தட்டிப் போட்டு, அருகம்புல்லைச் சேர்த்துக் கிளறவும். தேவையான உப்பு, காய்ந்த மிளகாய் சேர்த்து இறக்கவும். சுவையான அருகம்புல் பொரியல் தயார்! இதை உண்பதால் குழந்தைகளின் நினைவாற்றல் சிறந்து விளங்கும். உடலுக்கும் ஊட்டம் கிடைக்கும்.

கியாஸ் சிலிண்டர் என்ன விலை விற்றாலும் நீரைக் காய்ச்சித்தான் குடிக்க வேண்டியிருக்கிறது. அப்படிக் காய்ச்சும்போது, ஒரு கொத்து அருகம்புல் இட்டுக் காய்ச்சுங்கள். இந்த நீரைப் பருகி வந்தாலே, தேவையில்லை ஃபார்மஸி!



ஒற்றையா, இரட்டையா விளையாட்டு எதற்கு? தலைவலியில் எது வந்தாலும் படு உபத்திரவம்தான். சுத்தியல் எடுத்து 'மடேர்' என தலையிலிறக்கும் வலிகள் வந்துவிட்டால் வேறு வினையே வேண்டாம்.

ஒற்றைத் தலைவலி, மைக்ரேன், ஸ்ட்ரெஸ் தலைவலி என விதவிதமான தலைவலிகளுக்கு, அருகம்புல் வேர் அதி அற்புத மருந்து. அருகம்புல்லின் வேரை, பசும்பாலில் இட்டு அரைத்து, பற்று போட, தலைவலி நீங்கும். தலையில் நீர் கோத்துக்கொண்டு, தலைபாரம் ஏற்பட்டு அவஸ்தையாக இருந்தாலும், இதே கை மருந்துதான்!

தினமும் காலையில் வாக்கிங் போகிறவர்கள், வரும்போது அருகம்புல் சாறு குடிப்பதை மெரீனா பீச்சில் காணலாம். ஆஸ்துமா, ரத்தக் கொதிப்பு, கண் சம்பந்தமான பிணிகள் அகல, தினமும் ஒரு கோப்பை அருகம்புல் சாறு சிறந்ததுதான்! ஆனால் கலக்கப்படும் நீரும், தயாரிக்கப்படும் விதமும் மிகவும் சுகாதாரமாக இருக்க வேண்டும். சந்தேகத்துக்கிடமேன்! சுத்தமான முறையில் வீட்டிலேயே தயாரித்து, குடிப்பதுதான் நல்லது!

'பசிக்குச் சோறில்லை' என்று புலம்பும் இந்த நாட்டில், 'பசியே இல்லை' என்று கவலைப்படுபவர்களும் இருக்கிறார்கள். தினமும் அருகம்புல் சாறு குடித்துவர, மலச்சிக்கல் பிரச்னை இருக்காது. கழிவு வேலைகள் ஒழுங்காக நடப்பதால், பசி தூண்டப்படும். ஜீரண சுரப்பிகள் நன்றாக இயங்கும்.

அருகம்புல் சாறை, இளமோருடன் கலந்து குடித்தால், நீரிழிவு மட்டுப்படும். அருகம்புல் சாறை, தேனுடன் கலந்து குடிக்க, அற்புதமான தாதுவிருத்தியாக அமையும். இரத்தம் பெருகும். உடல் உறுதியாகும்.

யானைக்கு மிகவும் பிடித்தமான உணவு புல்லுக்கட்டுதான்! நம்ம அரசமரத்தடி பிள்ளையாருக்கு உகந்ததும் அருகம்புல்லுதான்! இனிமேல் நமக்குப் பிடிச்சதும், சர்வரோக நிவாரணியான அருகம்புல்லாகத்தான் இருக்கும். ஏன்னா, அது சக்திக்கும், புத்திக்கும் அமிர்தம்!

படங்கள்: ஸ்ரீஹரி

கோடை மழை

அன்புள்ள அப்பாவுக்கு,

அனேக நமஸ்காரங்கள். நாங்கள் மூவரும் வருகிற சனிக்கிழமை காலை அங்கு வருகிறோம். மற்றவை நேரில்.

இப்படிக்கு
ஷ்யாம்.

– இரண்டு வரிக் கடிதம்தான். நாராயணமூர்த்தியிடம் உற்சாகம் தொற்றிக் கொண்டது. சிறுபிள்ளை போல கத்திக் கூத்தாடினார். சந்திரா இருந்தவரை கூட, அவர்களின் வரவு அவரிடம் இத்தனை எதிர்பார்ப்பையும் சந்தோஷத்தையும் ஏற்படுத்தியதில்லை.

சந்திரா போன பின்புதான்.. வாசலில் பெய்யும் மழையும், லில்லியும் ரோஜாக்களும் பூத்துக் குலுங்கும் தோட்டமும், புல்வெளியில் ஆடும் ஊஞ்சலும், சமையலறையும், தொலைக் காட்சியும், புத்தகங்களும் மட்டுமே வருடம் முழுக்க துணையாகிப் போனதிலிருந்துதான்... இத்தனை எதிர்பார்ப்பும், சந்தோஷமும்.

கோடை விடுமுறையில் அவர்கள் வந்து தங்கிப் போகும் இந்த ஒரு மாதம்தான் அவரைப் பொறுத்தவரை உயிருள்ள தினங்கள். இந்த முப்பது நாட்களுக்காகத்தான் மீதமுள்ள முந்நூற்று சொச்ச நாட்களும் வாழ்ந்து கொண்டிருப்பதாகத் தோன்றும்.

இன்றைக்குப் புதன்கிழமை. இன்னும் மூன்று நாட்கள்... எழுபத்தியிரண்டு மணி நேரம்...

நாராயணமூர்த்திக்கு நிறைய வேலையிருந்து.

பரணில் சுருட்டி வைத்திருந்த படுக்கைகளை வெயிலில் காய வைத்தார். ஸ்டோர் ரூமில் கிடந்த சைக்கிளை எண்ணெய் விட்டுத் துடைத்தார். புல் மண்டிக் கிடந்த டென்னிஸ் மைதானத்தைச் சீராக்கி 'நெட்' கட்டினார். மொட்டை மாடியில் தாற்காலிக 'டெண்ட்' அமைத்தார். அபிராமுக்காக புதிதாக விளையாட்டுச் சாமான்களை வாங்கி வைத்தார்.

சனிக்கிழமை.

விடியற்காலை குளிரிலேயே எழுந்து விட்டார் நாராயணமூர்த்தி. எட்டு மணிக்கெல்லாம் இட்லி தயாரானது. ஹாட்பேக்கில் போட்டு மூடி வைத்தார். பில்டரில் புதிய டிகாஷன். மனமும் பார்வையும் 'காம்பௌண்ட் கேட்'டிலேயே இருந்தன. கேட்கப்போகிற டாக்ஸி ஒலிக்காக காதுகள் காத்திருந்தன.

எட்டரைமணிக்கு வந்தார்கள். நாராயணமூர்த்தி ஆவலும் படபடப்புமாக ஓடினார்.

உதாபார்த்திபன்

"டேய் அபிக்குட்டி.... எப்படிடா இருக்கே!" பேரனைத் தூக்கிக் கொண்டார்.

"ஏன் மாமா ரொம்ப இளைச்சுப் போயிட்டீங்க... உடம்புகிடம்பு சரியில்லையா?" என்றாள் காயத்ரி.

"நல்லாதாம்மா இருக்கேன்."

"போன வருஷத்துக்கு இந்த வருஷம் ரொம்ப வீக்'கா தெரியறீங்க."

"வயசாகிக்கிட்டே போகுதில்லையா?"

ஷ்யாம் சூட்கேஸுடன் நடந்தான். அபிராம் தாத்தாவின் தோளிலிருந்து குதித்து வீடு முழுக்க ஓடினான். கைகளை அகல வீசி நடந்தாலே சுவரில் இடித்துக் கொள்ளும் சென்னை வீட்டை ஒப்பிடுகையில் இது சொர்க்க லோகம். சென்னை திரும்பியதும் தனது நண்பர்களிடம் தாத்தா வீடு பற்றிப் பேச ஒவ்வொரு முறையும் அவனுக்குப் புதிது புதிதாக ஏதேனும் விஷயம் கிடைத்து விடும்.

ஷ்யாம் 'சாஃப்ட்வேர்' நிறுவனமொன்றில் சீப் எக்ஸிக்யூட்டிவ் ஆக இருக்கிறான். காயத்ரி கல்லூரி விரிவுரையாளர்.

நாராயணமூர்த்திக்கு மகனிடம் ஏதேனும் பேச வேண்டும் போலிருந்தது.

"ஆபீஸ்ல வேலை எப்படியிருக்கு? புதுசா புராஜெக்ட் ஆரம்பிச்சிருக்கிறதால ரொம்ப கஷ்டமாயிருக்குன்னு முதல்ல எழுதியிருந்தியே!"

"இப்ப பரவாயில்ல."

"ப்ரமோஷன் ஏதும் வருமா?"

"இன்னும் ஆறு மாசமாகும்."

இதுதான் ஷ்யாமின் சுபாவம். அதிகமாகப் பேசமாட்டான். கேட்ட கேள்விக்கு மட்டும் பதில். அவனிடம் கேட்க வேண்டியவற்றைப் பெரும்பாலும் காயத்ரியிடமே கேட்டுத் தெரிந்து கொண்டு விடுவார்.

சந்திரா இருந்தவரை இது குறித்து நெஞ்சு கொள்ளாது வருத்தப்படுவாள். 'என்னங்க... யாரோ மாதிரி நடந்துக்கறான். நாலு வார்த்தை கலகலப்பா பேசறதில்ல... நம்மேல அவனுக்குப் பாசமே இல்லையா?"

காலை டிபனுக்குப் பிறகு ஆங்கில நாவலுடன் ஷ்யாம் தனியறைக்குள் புகுந்து கொண்டான். இங்கு வந்தால் புத்தகமும் தொலைக்காட்சியும்தான் அவனது உலகம். சாப்பிடும் நேரம் மட்டும்தான் அறையை விட்டு வெளியே வருவான்.

அபிராம் விளையாட்டுச் சாமான்களை ஹாலில் பரப்பி விளையாட ஆரம்பித்தான். நாராயணமூர்த்தி அவனுடன் சேர்ந்து கொண்டார். ஒவ்வொரு நிமிடத்தையும் அவர் பேரனுடனேயே



செலவிட விரும்பினார். இருவரும் தினம் ஓர் இடமாகச் சுற்றினார்கள்.

வின்ச் பயணம், குதிரை ஏற்றம், நாய் கண்காட்சி, படகு சவாரி, தொட்டபெட்டா, ரோஸ் கார்டன், ஃபன் சிட்டி...

நாராயணமூர்த்தி பத்துவயது குறைந்தது போல உணர்ந்தார்.

அவர்கள் சென்னைக்குக் கிளம்புவதற்கு முந்தைய தினம். சாப்பாட்டு நேரம். நா. மூர்த்தி யதேச்சையாக கேட்டார்.

"இந்த வருஷம் அபிராமை 'சிக்ஸ்த்' சேர்க்கணும் இல்லையா?

"ஆமாம் மாமா."

"எந்த ஸ்கூல்ல சேர்க்கறதுன்னு முடிவு பண்ணிட்டீங்களா?"

"இல்ல மாமா. அதுதான் குழப்பமாயிருக்கு."

"ஏன்?"

"நாங்க இருக்கிற ஏரியாவில நல்ல ஸ்கூல் ஏதுமில்ல. அதை விட்டா மயிலாப்பூர் போகணும். அவ்வளவுதூரம் இவனை எப்படி யார் கூட அனுப்பறதுன்னு புரியல."

"ஸ்கூல் பஸ் வருமே."

"எங்க ஏரியாவுக்கு வர்றதில்ல."

"ஆட்டோ?"

"சென்னை ட்ராபிக்ல ஆட்டோவில போற துங்கிறது உயிரைப் பணயம் வைக்கிற மாதிரி. இவனைத் தனியா அனுப்பிட்டு நாங்க நிம்மதியா இருக்க முடியாது."

"அப்ப ஸ்கூலுக்குப் பக்கமா வீடு பார்த்துப் போயிடுங்க."

"எங்களுக்குச் சிரமமாயிடும் மாமா. இவருக்கு ஆபீஸுக்குப் போக... எனக்குக் காலேஜுக்குப் போக... இப்ப இருக்கற இடம் தான் சௌகரியம்."

"சிக்கல்தான்."

"நீங்க மனசு வைச்சா இந்தச் சிக்கலை தீர்த்துடலாம்."

"நான் என்னம்மா பண்ணனும்?"

"நீங்களும் எங்களோட சென்னை வந்து தங்கிடுங்க மாமா. இவனை உங்க கூட ஸ்கூலுக்கு அனுப்பிடுவோம். நீங்க மட்டும் இங்க தனியா இருக்கறதைவிட எல்லோரும் ஒண்ணா இருக்கறது நல்லதில்லையா?"

இதற்கு நாராயணமூர்த்தி மௌனம் காத்தார்.

பரபரப்பில்லாத மலைவாசல் வாழ்க்கை அவருக்கு மிகவும் பிடித்துப் போயிருந்தது. ரிடையர்மெண்ட்டிற்குப் பிறகு இங்கே செட்டிலாகிவிட்டார். இதைவிடுத்து சென்னையின் நெரிசலான வாழ்க்கை முறையில் சிக்கிக் கொள்ள அவர் விரும்பவில்லை. மேலும் விலகியிருக்கையில் ஏற்படும் நேசமும் நெருக்கமும், ஒட்டியிருக்கையில் சிதைந்து விடக் கூடிய அபாயத்தைப் பற்றியும் சிந்தித் தார்.

நல்லவேளையாக ஷ்யாம் வாய் திறந்து அவரின் சிந்தனைச் சிக்கலைத் தீர்த்தான்.

"அப்பாவுக்கு இங்கேயே பழகிடுச்சி காயத்ரி. சென்னை 'லைப்' ஒத்துவராது."

நிஜம்தான் என்றாலும் நாராயணமூர்த்திக்கு வலித்தது. ஷ்யாம் கூறியதில் அக்கறை என்பதைவிட தன்னைத் தவிர்க்கும் நோக்கம்தான் உள்ளடங்கியிருப்பதாக அவருக்குப் பட்டது.

"நான் ஒரு யோசனை சொல்லட்டுமா... அபிராம் என்னோடயே இருக்கட்டும். நானே படிக்க வைக்கறேன்."

"நீங்களா மாமா?"

"ஆமா. இங்க நிறைய நல்ல ஸ்கூல் இருக்கு."

"உங்களுக்கு வீண் சிரமம்."

"சிரமமா. தன்னந்தனியா பைத்தியக்காரனாட்டம் இருக்கேன். அபிராம் இருந்தான்னா எவ்வளவு சந்தோஷம் தெரியுமா.. காலையில டிபன் செய்து கொடுத்துடுவேன். மதியம் ஸ்கூல்லயே 'லஞ்ச்' தருவாங்க. ராத்திரிக்கு சூடா சமையல்.. ட்யூஷன் கூட வேண்டியதில்லை. நானே சொல்லித் தந்துடுவேன். என்னடா அபிக்குட்டி... நீ தாத்தா கூடவே இருந்து படிக்கிறியா?"

அவன் உற்சாகமாகச் சம்மதித்தான்.

"நீங்க என்ன சொல்றீங்க?"

காயத்ரியின் கேள்விக்கு ஷ்யாம் பதில் பேசவில்லை. மௌனத்தில் சம்மதம் தெரிந்தது. நாராயணமூர்த்தி சொன்ன யோசனையை அவர்கள் இருவரும் உள்ளூர எதிர்பார்த் திருந்தது போல்தான் தோன்றியது.

"சரி மாமா. அப்ளிகேஷன் வாங்கி தேவையான ஏற்பாட்டைப் பண்ணிடுங்க... அபியை நாங்க இங்கேயே விட்டுட்டுப் போறோம்" என்றாள் காயத்ரி.

நாராயணமூர்த்தி சந்தோஷக் கலவையாக உணர்ந்தார். இனி அவருக்குத் தனிமையின் கொடுமையில்லை. எப்பொழுது, மே மாதம் வரும். பேரனை காண்போம் எனக் காத்திருக்கத் தேவையில்லை. வருடம் முழுக்க அவருடனேயே இருக்கப் போகிறான்.

திடீரென்று அவருக்குத் தனது தந்தையின் ஞாபகம் வந்தது.

"இவ்வளவு தப்பு பண்றீங்களே... மனசாட்சிக்கு எப்படி பதில் சொல்லுவீங்க?"

"காசு குடுத்தாத்தானே என் மனசாட்சியே கேள்வி கேட்கும்!"

— அம்பை தேவா



நாராயணமூர்த்தி அரசு வங்கியில் கிளை மேலாளராக இருந்தார். மூன்று வருடத்திற்கு ஒருமுறை தவறாது மாற்றல் வந்து விடும். ஒவ்வொரு முறையும் புது இடத்தில் புதிய பள்ளியில் சேர்ப்பது சிரமம் என்பதால் ஷ்யாமை தஞ்சாவூரில் இருந்த தன்னுடைய பெற்றோரிடம் விட்டு விட்டார். சில ஆண்டுகளிலேயே அவரின் அம்மா கண் மூடிவிட்டாள். அதன் பின் ஷ்யாமை முழுக்க முழுக்க கவனித்துக் கொண்டது அவனுடைய தாத்தாதான். அவன் பொறியியற் கல்லூரி இரண்டாம் ஆண்டு படிக்கையில் தாத்தா இறந்து போனார். அதன்பின் ஹாஸ்டல் வாசம். அப்பொழுது கூட அதிகமாக வீட்டிற்கு வரமாட்டான். வந்தாலும் சேர்ந்தாற்போல நான்கு நாட்கள் தங்குவது அரிது. விசேஷ தினங்களில் தட்டில் பாயசத்தை ஊற்றிக் கொண்டு சந்திரா அழுத சமயங்கள் ஏராளம்.

கடைசி செமஸ்டரிலேயே காம்பஸ் இண்டர்வியூவில் வேலையும் கிடைத்துவிட, தாய் தந்தையருடன் தங்கும் வாய்ப்பு அற்றுப் போய்விட்டது. காயத்ரியையும் யாருக்கும் சொல்லாமல்தான் திருமணம் செய்து கொண்டான். திருமணம் முடிந்து பத்து தினங்கள் கழித்து நான்கு வரிக் கடிதம். உடன் அவனின் புகைப்படம். சந்திரா அன்று முழுக்கச் சாப்பிடவில்லை. மகனைத் தலைமுழுகிவிட்டதாகக் கத்தினாள். அந்தக் கோபமெல்லாம் மனைவியுடன் அவன் வந்து நின்ற பொழுதில் கரைந்து போய் ஆனந்த கண்ணீர் விட்டாள்.

காயத்ரி வேற்று ஜாதிப்பெண் என்பதால் வீட்டில் சம்மதம் கிடைக்காது என அவர்களாகவே திருமணம் செய்து விட்டார்களாம். இதையும் ஷ்யாம் சார்பாக காயத்ரிதான் சொன்னாள்.

சந்திராவுக்கு மருமகளைப் பிடித்துப் போனது. அவளும் மிகச் சுலபமாகத் தன்னை அந்யோன்யப்படுத்திக் கொண்டாள். சந்திரா இறந்து போனபோது காயத்ரிதான் நிலை குலைந்து அழுது புரண்டாள். ஷ்யாம் ஒரு ஓரமாக நின்று இறுகிய முகத்துடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்.

நாராயணமூர்த்தி அனைத்தையும் இப்பொழுது ஒருமுறை நினைத்துப் பார்த்தார். அன்று இரவு அவர் நீண்ட நேரம் தூங்கவில்லை.

ரயில் கிளம்பத் தயாராயிருந்தது. சுற்றுலா பயணிகளின் கலந்து கட்டிய இரைச்சல். பல மொழிகளின் கதம்பம்.

காயத்ரி நாராயணமூர்த்தியிடம் மெல்லிய குரலில் கேட்டாள்.

''அப்ப அபிராமை சென்னையிலேயே சேர்த்துடலாமா மாமா?''

''ம்?''

''ஏன் மாமா திடீர்னு முடிவை மாத்திக் கிட்டீங்க?''

''பேரன் எங்கூடவே இருக்கப் போறாங்கிற சந்தோஷத்தில் தீர யோசிக்காம அவசரப்பட்டு முடிவெடுத்துட்டேன். இப்பல்லாம் அடிக்கடி எனக்கு உடம்பு சுகமில்லாம போயிடுது. அப்ப இவனை யார் கவனிச்சுக்குவா? அதான்... கோவிச்சுக்காதம்மா..''

''ச்சே-ச்சே என்ன மாமா...! நீங்களும் எங்களோடவே வந்துடுங்கன்னு சொன்னாலும் கேட்க மாட்டேங்கறீங்க..''

''முடியறவரை சமாளிக்கறேம்மா..''

இரண்டாவது பெல் அடித்தது.

''ஏறிக்குங்க. அபிக்குட்டி... அடுத்த வருஷம் லீவுக்கும் வந்துடு... சரியா!''

அபிராம் தலையசைத்தான். தாத்தாவுடனேயே தங்கியிருக்கப் போகிற சந்தோஷம் ஓரிரவில் கலைக்கப்பட்டுவிட்ட ஏமாற்றம் பிஞ்சு முகத்தில் தெரிந்தது.

''தாத்தாவுக்கு ஒரு முத்தம் கொடு.''

''ம்ப்ச்ச்...''

அவர்கள் இருவரும் ஏறிக் கொள்ள, ஷ்யாம் மட்டும் தயங்கி நின்று தந்தையை ஏறிட்டான்.

''உங்களோட முடிவுக்கு நீங்க சொன்னது தான் நிஜமான காரணமாப்பா!'' என்றான். அவனுக்கு ஏதோ புரிந்திருக்க வேண்டும்.

நாராயணமூர்த்தி அதற்குப் பதில் பேசாது நின்றார். தான் இன்று அனுபவிக்கும் வலியை நாளை தன் மகன் அனுபவிக்க வேண்டாம் என்கிற எண்ணத்தை அவர் வாய்விட்டுச் சொல்ல விரும்பவில்லை. ஆறுதலான புன்னகையுடன் ஷ்யாமின் தோளைத் தட்டிக் கொடுத்தார்.

அவனும் ஏறிக் கொண்டான். நீராவிப்புகையுடன் ரயில் கிளம்பியது. பார்வையிலிருந்து மறையும்வரை அபிராம் கையசைத்துக் கொண்டேயிருந்தான்.

நாராயணமூர்த்திக்கு உடனடியாக அழ வேண்டும் போலிருந்தது-அவசரமாக வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார். ○





சினி சிப்ஸ்

● 'கன்னத்தில் முத்தமிட்டால்' படத்தை டைரக்டர் மனோபாலாவை வைத்து டி.வி.சீரியலாகத்தான் எடுக்கத் திட்டமிட்டிருந்தார்களாம். இதற்காக வெளிநாடுகளில் போய் படம் பிடிக்கக்கூட ஏற்பாடாகிவிட்டதாம். கதையின் ஆழத்தைக் கவனித்த மணிரத்னம்தான் இதை சினிமாவாக்கலாம் எனத் தீர்மானித்து களத்தில் இறங்கினாராம்.



● பாடகர்கள் இசையமைப்பாளராகும் வரிசையில் பாடகி அனுராதா ஸ்ரீராமும் இணையப் போகிறார். புதிதாகத் தொடங்க இருக்கும் ஒரு படத்துக்கு இசையமைக்கப் போகிறாராம். மியூசிக்லயும் கலக்கினால் சரி!



குஷியில் மீனா!

● படைப்பாளிகளைக் கௌரவிப்பதில் வெளிநாட்டில் வாழும் தமிழர்களுக்கு எக்கச்சக்க ஆனந்தம். மலேஷியாவில் ஒரு புத்தக வெளியீட்டுக்காக கவிஞர் பழநி பாரதியை அழைத்தார்கள். போன கையோடு சிறுகதைப் பற்றி விரிவான பேச்சு ஒன்றையும் நிகழ்த்திவிட்டுத் திரும்பியிருக்கிறார்.

● 'பாபா' பற்றி கோடம்பாக்கத்தில் ஏகப்பட்ட கதைகள். திரும்பிய பக்கமெல்லாம் ஏதாவதொரு 'கதை' சொல்கிறார்கள். லேட்டஸ்டாக கிடைத்த 'கதை'. படம் பக்தி கலந்த ஆக்ஷன் படமாம். முதல் ஷாட்டே பூமி அதிர்கிற மாதிரி வருமாம். ரசிகர்கள் அதிராமல் இருந்தால் சரி.

● தமது எந்தப் படத்துக்கும் வெளிநாட்டில் போய் ஷூட் பண்ணாத டைரக்டர் விக்ரமன், முதன்முறையாக 'உன்னை நினைத்து' படத்துக்காக ஹாங்காங், பாங்காங் என்று பறக்க இருகிறாராம். இந்தப் படத்துக்காக நடிகை ஸ்நேகா சொந்தக் குரலில் பாடப் போகிறார்.

● படமேதுமில்லாமல் இருந்த நடிகை மீனா, ஷாஜகானில், 'சரக்கு வச்சிருக்கேன்..' பாடலுக்கு டான்ஸ்போட்ட பிறகு மளமளவென்று பத்து படங்கள் புக் ஆகியிருக்கிறதாம். ஏக குஷியில் இருக்கிறார் மீனா. இதேபோன்று படமேதுமில்லாமல் இருக்கும் மந்த்ராவும் அஜித் - ஜோதிகா நடிக்கும் ஒரு படத்தில் ஒரே ஒரு பாடலுக்கு டான்ஸ் ஆடப் போகிறாராம்.

● 'என்னுயிர்த் தோழன்' படத்திற்குப் பிறகு நடிக்காமல் இருந்த தென்னவனை டைரக்டர் சரண் பார்த்துவிட, 'ஜெமினி' படத்தில் நடிக்க வைத்துவிட்டார். இவருக்காகவே 'கை' என்கிற ஒரு கேரக்டரை உருவாக்கியிருக்கிறாராம்.

● வில்லேஜ் கதையமைப்புள்ள ஒரு படம். இது முடிந்ததும் நகரம் சார்ந்த கதையமைப்புள்ள படமென்று தேர்ந்தெடுத்து நடிக்க விஜயகாந்த் முடிவு செய்திருக்கிறார். ராஜ்ஜியம் படத்திற்குப் பிறகு கிராமத்துக் கதை கேட்க ரெடியாகிவிட்டாராம்.


● 'அழகி' தந்த வெற்றியில் அகமகிழ்ந்து கொண்டிருக்கும் தங்கர்பச்சானுக்கு ஆஸ்கார் பிலிம்ஸ் நிறுவனத்திலிருந்து ஒரு படத்தை இயக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறதாம்.

● இயக்குனராகும் ஆசையில் கோடம்பாக்கம் வரும் இளைஞர்களின் காலம் மலையேறிவிட்டது. இப்போதெல்லாம் கட்டுக்கட்டாகக் கவிதை நோட்டுகளுடன் பாட்டெழுதும் இலட்சியதுடன் இறக்குமதியாகிறார்கள் இளைஞர்கள். "தற்போதுவரை பதினேழு கவிஞர்கள் பாட்டெழுதிக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சில சீனியர் கவிஞர்கள், எல்லா பாட்டையும் எனக்கே கொடுங்களேன் என்று வேறு சொல்கிறார்கள். இந்த லட்சணத்தில் புதுமுகக் கவிஞர்கள் பாடு திண்டாட்டம்தான்'' என்கிறார் ஓர் இயக்குனர்.

- ரவுண்ட்ஸ் பாய்











முன்பு ஒருமுறை பீகாரிலிருந்து வேறொரு ஊருக்கு ரயிலில் ஆடு அனுப்பப்பட்டது. அந்த ஊருக்குப் போகும் முன்பாக ஆடு இரண்டு குட்டிப் போட்டது. இரசிதில் ஒரு ஆடு என்று எழுதி இருந்ததால் இரயில் நிலைய அதிகாரி குட்டி ஆடுகளைத் தர மறுத்தார்! பிறகு மூன்று உருப்படிகளுக்கும் கட்டணம் கேட்டார். கடைசியாக உள்ளூர் மக்கள் தலையிட்டு வழக்கை முடித்தனர்.

- க. பூங்கொடி, சித்தோடு.

முல்லா ஒரு சமயம் வியாபாரி ஒருவரிடம் கடன் கேட்பதற்காகச் சென்றிருந்தார். முல்லா வருவதைப் பார்த்த அந்த வியாபாரி வீட்டு வேலைக்காரனிடம் "நான் இல்லையெனச் சொல்லிவிடு" என்று கூறிவிட்டு வீட்டிற்குள் போய்க் கதவுக்குப் பின் ஒளிந்து கொண்டார்.

அவர் சொன்னபடியே வீட்டு வேலைக்காரன் "முதலாளி வெளியே போய்விட்டார்" என்று தெரிவித்தான். அதேசமயம், முல்லா போய்விட்டாரா? எனத் தெரிந்துகொள்ள வீட்டுக்குள்ளிருந்து தலையை மட்டும் நீட்டி வெளியே பார்த்தார் வியாபாரி. வேலைக்காரனிடம், "அடுத்த தடவை உன் எஜமான் வெளியே போகும்போது மறக்காமல் தலையையும் எடுத்துக்கொண்டு போகச் சொல்" என்று சொல்லிவிட்டுச் சென்றார் முல்லா!

- ஜி. சுந்தரராஜன்

தேங்காய் உடைக்க மிஷின்!

மும்பையில் மிகப் பிரபலமான 'சித்தி விநாயகர்' கோவிலுக்கு ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் 20,000 தேங்காய்கள் வரும்; மற்ற நாட்களில் தினம் 2000 காய்கள் வரும். அவற்றை உடைத்து நறுக்கி பிரசாதமாக விநியோகிப்பார்கள். நாள் பூராவும் 25, 30 பேர் இதே வேலையாக இருப்பார்கள்.

சமீபத்தில் மகாராஷ்டிரா பாங்க் ரூ.7,000 விலையுள்ள ஒரு மெஷினை வரவழைத்து, கோயிலுக்குக் கொடுத்திருக்கிறது. இது ஒரு மணி நேரத்தில் 250 தேங்காய்களை அழகான சிறு துண்டுகளாக்கிவிடுகிறது.

- சாரதா நாராயணன்

அப்பா தந்த பாடம்!

அஹிம்சையின் சிறப்பு பற்றி வலி

யுறுத்த அருண்காந்தி கூறிய சம்பவம்:

அப்போது எனக்கு வயது 16. என் தாத்தா (மகாத்மா காந்தி) டர்பன் நகருக்கு வெளியே 18 மைல் தூரத்தில் ஆசிரமம் அமைத்திருந்தார். "எப்போடா டவுன் பக்கம் போவோம், சினிமா பார்ப்போம்" என்று ஏங்கிக் கொண்டிருப்பேன்.

ஒருசமயம் என் அப்பா டவுனில் நடந்த ஒரு மாநாட்டுக்குப் போக வேண்டியிருந்தது. என்னைக் கார் ஓட்டி வரும்படி கூறினார். அம்மா வாங்க வேண்டிய சாமான்கள் லிஸ்ட் தந்தார். அப்பாவை மகாநாட்டில் இறக்கி விட்டுவிட்டு, நான் காரை 'ஸர்வீஸ்' செய்துகொண்டு, சாமான்களையும் வாங்கி வருவதாக ஏற்பாடு. அவ்வாறே சாமான்களை வாங்கிய பிறகு காரை சர்வீஸுக்கு விட்டுவிட்டு சினிமா தியேட்டரில் புகுந்துவிட்டேன். என்னை மறந்தேன்.

சினிமா முடிந்தபோது ரொம்ப நேரமாகி விட்டிருந்தது. காரைப் பெற்றுக்கொண்டு விரைந்தேன். வெகு நேரமாய்க் காத்திருந்த அப்பா, "ஏனப்பா லேட்?" என்றார். "கார் ரெடியாகவில்லை; மெக்கானிக் தாமதித்துவிட்டார்" என்று புளுகினேன். நான் கண்டேனா, அப்பா ஏற்கெனவே மெக்கானிக்குக்கு ஃபோன் செய்து பேசியிருப்பார் என்று?

அப்பா சொன்னார்: "மகனே! நான் உன்னை வளர்த்த முறையில் ஏதோ தவறு இருந்திருக்கிறது. அதனால்தான் இப்படிப் பொய் பேசுகிறாய். தவறு என்னுடையதுதான். எனவே அதற்குத் தண்டனையாக இன்று ஆசிரமத்துக்கு நடந்தே செல்கிறேன்."

அப்பா 18 மைல் நடந்தார். அவரைத் தனியே விட மனமின்றி, நானும் காரை மெதுவாக செலுத்திக்கொண்டு அவர் பின்னோடு போனேன். ஐந்தரை மணி நேரம் நடந்தார் அப்பா! அன்று மனம் திருந்தி, 'இனி எப்போதும் பொய் சொல்வதில்லை' என்று முடிவெடுத்தேன். இன்று வரை காப்பாற்றி வருகிறேன்.

அன்று என் அப்பா எனக்குத் தண்டனையாக என்னை அடித்து நொறுக்கியிருந்தால், பிடிவாதம்தான் மேலோங்கியிருக்கும்; பாடம் கற்றுக் கொண்டிருக்க மாட்டேன்!

- சுமித்ரா கல்யாணராமன்

தேன்கூடு

தேனையும் கொண்டு போங்க!

1940களில் நிமோனியா காய்ச்சலைப் போக்க, நான்கு நாட்களில் 40,000 யூனிட்டுகள் பெனிசிலின் கொடுத்தால் போதும். ஆனால் இன்று ஒரு நாளைக்கு 240 லட்சம் யூனிட்டுகள் பெனிசிலின் கொடுத்தாலும் நோயாளியைக் காப்பாற்றி விட முடியும் என்ற உத்தரவாதம் இல்லை. நோய்க் கிருமிகள் நாளுக்கு நாள் தங்களைப் பலப்படுத்திக் கொண்டு, மருந்தின் சக்தியை 'ஸ்வாஹா' செய்து விடுவதால் ஏற்பட்ட விளைவு இது.

மானாவாரியாக 'ஆண்டிபயாடிக்கு'களைப் பயன்படுத்துவது தவறு என்பதை அறிந்திருப்பீர்கள்.

- மார்க்கண்டன்

அசல் பழமொழி

'கைப் புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு?' இது வழக்கத்தில் உள்ள ஒரு பழமொழி.

உண்மையில் 'கைப் பூணுக்குக் கண்ணாடி எதற்கு?' என்பதே அசல் பழமொழி. 'பூண்' என்றால் ஆபரணம். மற்ற அலங்கார ஆபரணங்களை அணிந்துகொண்டு கண்ணாடியில் பார்த்து ரசிப்பது வழக்கம். ஆனால் கையில் அணிந்துள்ள ஆபரணத்தின் அழகைப் பார்க்கக் கண்ணாடி தேவையில்லை என்பதால், 'கை பூணுக்குக் கண்ணாடி எதற்கு?' என்று கூறி வந்தது. காலப் போக்கில் மருவி 'கைப்புண்ணுக்குக் கண்ணாடி எதற்கு?' என்று ஆகிவிட்டது.

(தமிழாசிரியர் ஒருவர் சொல்லிக் கேட்டது.)

– கபிஸ்தலம் ஆர். இரவிகுலரகுவர்மன்

24



அரைத்த மருதாணி இலைச் சாந்து விதுவின் தலையைக் குளிர்வித்துக்கொண்டிருந்தது. அடுத்து ராஜியையும் உட்கார வைத்து அவள் தலையிலும் மருதாணிச் சாந்தைப் பூசிக் கொண்டே, "முழுசாக் காய்ஞ்சப்புறம் குளிக்கலாம். தலை முடிக்கு நல்ல 'கண்டிஷனர்' தெரியுமா? கண்ட 'கெமிக் கல்ஸை'யும் போடறதைவிட," என்று அழகுக்குறிப்பு கொடுத் தாள் அம்மா. அம்மாவின் விரல்கள் தலையைக் கோதி விடு வதே ஒரு சுகம்தான். அதற்கு இந்த மருதாணி ஒரு நல்ல சாக்கு என்று தோன்றியது விதுவுக்கு.

"பாவம், ரஞ்சி. இது அவளுக்குக் கொடுத்து வைக்கலியே!" என்றாள் ராஜி. ரஞ்சியும் அவள் தங்கையும் வந்து சேர் வதற்குள் சாயங்காலம் ஆகிவிடும்.

"ரஞ்சி கொஞ்சம் வித்தியாசமான பொண்ணு, இல்லியா?" என்றாள் அம்மா மருதாணி விழுதைப் பிசைந்தபடி. ராஜி



வேண்டாம்னு தோணுது.''

ராஜி சொல்வது போல் எல்லாரும் அவரவராகவே இருந்தால் போதுமே. தன்னை அறிந்து கொள்ளக் கொஞ்சம் அவகாசம் தேவைப்படுகிறது. பிறகு, தன்னைத் தானே மதித்து வாழ்வதற்கு இன்னும் கொஞ்சம் காலம். ரஞ்சியைப் பார்த்து ஒரு காலத்தில் தான் பொறாமைப் பட்டதும், இவ்வளவு உயரத்துக்குப் போனவள் கர்வம் பிடித்தவளாகத் தான் இருப்பாள் என்று அவசர முடிவு கட்டியதும் விதுவுக்கு நினைவு வந்தது. அருகில் வந்தால்தான் மனிதர்களைப் புரிந்து கொள்ளமுடிகிறது.

அடுத்து ராஜி சொன்னதைக் கேட்டு ஆச்சரியமாயிருந்தது. ''விது, விது - அம்மா, நான் அடுத்த செமஸ்டர்லே யுனிவர்சிட்டிக்குப் போலாம்னு இருக்கேன். பாதி நேரப் படிப்புக்கு.''

''என்ன திடீர்னு ராஜி?''

''இதுவரைக்கும் பரதம், பாட்டு, பியானோ, வயலின், தமிழ் க்ளாஸ், பள்ளிக்கூடம், தமிழ்ச்சங்க விழா அது இதுனு மின்னியையே சுத்திச் சுத்தி எல்லாம் பண்ணினேன். இப்போ மின்னி கார் ஓட்டப் படிச்சாச்சு. அரங்

இக்கரையில்

காஞ்சனா தாமோதரன்

கேற்றமும் முடிஞ்சிடும். அப்புறம் எனக்கு உண்மையிலே என்ன வேலை?''

ராஜியின் குரலில் சிறு வெறுமை. இன்னும் இரண்டு வருடங்களில் கூட்டை முழுதாய்க் காலி செய்துவிட்டு, வேறு ஊர் பல்கலைக்கழகத்துக்கு மின்னி போன பிறகு தன் உலகம் எப்படி இருக்கும் என்பதை உணரத் துவங்கும் வெறுமை.

''உனக்குன்னும் ஏதாவது செய்யறது நல்லதுதானே, ராஜி!''

''விது-அம்மா, நீங்க இப்படிச் சொல்றீங்க. என் அண்ணா 'முதியோர் கல்வியா'ன்னு கிண்டல் பண்றான்.''

மருதாணிக் கையைக் கழுவித் துடைத்தவாறே அம்மா வந்து உட்கார்ந்தாள். ''உங்க ஊர்லேதான் அதுக்கு ஒரு வயசு, இதுக்கு இன்னொரு வயசுன்னு அமுக்கிப் போடறதில்லியே, ராஜி... ம்ம்ம்... அப்படி முதியோர் கல்வியாவே இருந்தாலும், அதுக்கென்ன குறைச்சலாம்னு உன் அண்ணாகிட்டே அடிச்சுக் கேளு.''

சிரிக்கும் அம்மாவைப் பார்த்தாள் விது. வாழ்க்கையின் சில முக்கிய இழப்புகளையும் தாண்டி இவளால் இயல்பாய்ச் சிரிக்க முடிகிறது. வாழ்வை வாழ முடிகிறது. இடத்துடன் உயிர்ப்புடன், தன் மனத்தில் பல தடுப்புச் சுவர்களில் இன்

யின் நீளத் தலைமயிருக்கு இந்த மருதாணி போதுமா?

''கொஞ்சம் வித்தியாசம் இல்லை, விது - அம்மா, ரொம்பவே வித்தியாசம். ரஞ்சியை மாதிரி இருக்க முடியுமான்னு நான் யோசிச்சுப் பார்த்திருக்கேன்...'' அம்மாவுக்கு வசதியாகத் தன் தலையைச் சரித்துக் கொடுத்தாள் ராஜி. ''உலகத்தையே கட்டிக் காக்கறது தன்னோட பொறுப்புன்னு நினைக்கிற 'டைப்'... என்னாலே அப்படி இருக்கமுடியாது. இருக்கவும்

னும் ஒன்று மெல்லத் தகர்ந்து விழுவது வித்துவுக்குப் புரிந்தது.

"என்ன பெரிய 'ஜோக்?'" என்றபடி வீட்டினுள் நுழைந்தார் ராஜியின் அப்பா. அவர் பின்னாலேயே கை நிறையச் சிப்பிகளுடன் அருணாவும் அம்பிகாவும்.

"சிப்பியை அப்படிப் போட்டுட்டு, கை கழுவிட்டு வாங்க ரெண்டு பேரும். மருதாணி வைப்போம்." அம்மா விரட்டினாள். "ராஜி - அப்பா, இந்த நண்டுகளோட அலையறது உங்களுக்கு அலுத்துப் போகலியா? மின்னியை எப்போ பார்க்கலாம்னு ஆசையா இருக்கும்?"

ராஜியின் அப்பா தண்ணீருடன் வந்து உட்கார்ந்தார். வெளியே வெயில் ஏறியிருக்கிறது என்றார். "ஆசையிருக்காதா பின்னே, வித்து - அம்மா?"

குழந்தைகளுக்காகத் தனியே வைத்திருந்த மருதாணிக் கிண்ணத்தை எடுத்தாள் அம்மா. ராஜியின் அப்பா தொடர்ந்து பேசினார்: "ஆனா என்ன தெரியுமா, வித்து - அம்மா? மின்னி என்னதான் வாயிலே கொண்டு வந்து எனக்கு ஊட்டினாலும், அவ என்னை விட்டுக் கொஞ்சம் விலகி நிக்கறது எனக்குத் தெரியும். ராஜி அம்மா இருந்தப்போ அவளும் இதையே சொல்லியிருக்கா..."

"அங்கேயே வளர்ற குழந்தை, ராஜி - அப்பா. சின்ன வயசிலேயே அழுத்தமான 'பர்சனாலிட்டி' 'தான்'ற அடையாளம், சுதந்திரம். அதோட மறுபக்கம் இந்த மாதிரிச் சின்ன விலகல்களா இருக்கலாம்..."

"நீங்க எழுத்தாளர்னு நல்லாத் தெரியுது, வித்து - அம்மா" ராஜியின் அப்பா சிரித்தார். "இன்னொண்ணு, நான் எங்கேயும் போணும்னா அங்கே ராஜி அல்லது குமார் தான் கார் ஓட்டிக் கூட்டிட்டுப் போணும். நாமா நடந்து போனோம், பஸ்ஸைப் பிடிச்சுப் போனோம்னு சுதந்திரமா இருக்க முடியாது..."

"சில ஊர்கள் விதிவிலக்கு, இல்லியா?"

"அது மட்டும் இல்லை, வித்து - அம்மா. ராஜிக்கு நிறைய ஃப்ரெண்ட்ஸ். வெள்ளி, சனி யார் வீட்டுக்காவது சாப்பிடக் கூப்பிடறது. அல்லது தமிழ்ச் சங்க விழா. இந்தியா அசோசியேஷன் விழா. கச்சேரி, சினிமா. இப்படி எவ்வளவு இருந்தாலும், அது நம்ம ஊர் இல்லைன்னு ஏதாவது ஒண்ணு ஞாபகப்படுத்திட்டே இருக்கும். தனியா இருக்கற மாதிரி ஒரு 'ஃபீலிங்.'

ராஜியின் அப்பா சொல்லும் மனத்தளவு தனிமை எங்கேயுமே வரக் கூடியது தானோ என்று வித்துவுக்குத் தோன்றியது. ஆனால், தொடர்பற்ற தீவுகளாகி விடுவது அங்கே இன்னும் கொஞ்சம் சுலபம். சின்னக் குடும்பமும், குடும்பத்தினரின் வேலைகளுமே மையமாகிப் போன வாழ்க்கை முறை.

"கார்ப்பெட், மரம், பளிங்குன்னு தரை கூட வேற மாதிரி இருக்கேன்னு ராஜியோட அம்மா புலம்புவா. என்னன்னாலும் நம்ம ஊர் சிவப்புச் சிமெண்ட்டுக்குத் தரை மாதிரி வருமான்னு கேப்பா." ராஜியின் அப்பா சிரிப்பில் மனைவி ஞாபகம்.

"கையைக் கழுவிட்டு வாங்கன்னா இந்த வாண்டுகள் தண்ணியிலே அளைஞ்சு ஒரே விளையாட்டு. கடற்கரை மணல் முழுக்க உடம்பிலே." செல்லமாய்க் கோபித்துக் கொண்டே அருணாவையும் அம்பிகாவையும் இழுத்து வந்தாள் ராஜி.

"அம்மா, நீயும் ஆண்ட்டியும் 'மார்ஷியன்ஸ்' மாதிரி..." கை நீட்டிக்கொண்டு, இன்னொரு கையால் வாயைப் பொத்திக் கொண்டு, குலுங்கிக் குலுங்கிச் சிரித்தாள்

"திடீர்னு படபடப்பா இருக்கு டாக்டர்...?"

"ஃபீஸ் கொடுத்ததும் ஒரு அஞ்சு நிமிஷத்துக்கு அப்படித்தான் இருக்கும், கவலைப்படாதீங்க!"

- சீர்காழி ரேவதி

அம்பிகா. அந்த வயதுக்கு மட்டுமே உரிய தனிச் சிரிப்பு.

வித்து ராஜியைப் பார்த்தாள். மருதாணிச் சாந்து அழுக்குப் பச்சையாய்த் தலையில் காய்ந்து... முடியெல்லாம் தலையோடு ஒட்டி, வழுக்கை மாதிரி... வித்துவுக்கும் சிரிப்பு வந்தது.


"மார்ஷியன் மாதிரி இருக்கேனா? இங்கே வா சொல்றேன், அம்பிகாக்குட்டி." ராஜி அம்பிகாவை இழுத்து, மடியில் குறுக்காய்ப் போட்டுக் 'கிச்சு கிச்சு' மூட்டினாள். அம்பிகாவின் சிரிப்பு இன்னும் கொஞ்சம் அதிகரித்தது. எல்லோருக்கும் தொற்றிக் கொண்டது. அருணா உட்பட சிரிப்பு கொஞ்சம் அடங்கியதும், ராஜி அம்பிகாவை மடியில் இருத்திக்கொண்டாள். அவள் கைகளுக்கு மருதாணியிட ஆரம்பித்தாள். பச்சை மருதாணி இலை கையில் சிவப்பாக மாறுவதைப் பற்றிச் சொன்னாள். "மருதாணி மேஜிக்" என்றாள் அம்பிகா.

அருணா வித்துவின் முன் வந்து உட்கார்ந்தாள். பெரிய கண்களால் வித்துவைப் பார்த்தவாறு, மௌனமாய் வலது கையை நீட்டினாள். நெஞ்சினுள் பொங்கிய உணர்வு

வேகத்தை உள்ளேயே தேக்கிக்கொண்டான் விது. நீட்டின உள்ளங்கை மேல் மாங்காய் வடிவில் மருதாணியை இடத் தொடங்கி னான். நடு நடுவே நிமிர்ந்து, அருணாவின் கண்களைச் சந்தித்தான். இன்னும் சில சுவர் கள் தகர்ந்து மெல்லக் கரைந்துகொண்டிருந் தன.

மதியத் தூக்கம், காஃபி எல்லாம் முடித்து எல்லாரும் கூடி உட்கார்ந்து பேசு வதும் ஒரு சுகம். ரஞ்சி வந்து சேர்வதற்கு இன்னும் சில மணி நேரம்தான். கடற்காற்று ஹாலுக்குள் சுதந்திரமாய் நுழைந்து எல்லா வற்றையும் கலைத்துப்போட்டது.

ராஜியின் அப்பா வழக்கம் போல் ராஜி யைச் சீண்டிக்கொண்டிருந்தார். "சினிமா அவ்வளவா பிடிக்கலைன்னு சொல்றே. பழசும் புதுசுமா ஏன் உன் வீட்டிலே முந் நூறு நானூறு தமிழ்ப்படம் சேர்த்து வச் சிருக்கே?"



ராஜி கொஞ்சமாய் அசடு வழிந்தாள். "சரி, சரி, படம் பிடிக்கும்ப்பா. அவ்வளவு தூரத்திலே இருக்கோம். வெளியே தமிழ் இல் லாத ஒரு சூழல். தப்பா?"

"தப்பில்லை, ராஜி. ஆச்சரியம்தான்." அவள் அப்பா தொடர்ந்தார். "விது- அம்மா, நீங்க நம்ப மாட்டீங்க. நம்ம காலத்துக்கு முந் தின காலத்துப் படம் எல்லாம் இவ வீட்டில் பார்த்தேன். 'தூக்கு தூக்கி' ஞாபகம் இருக்கா?"

அம்மா அதிலிருந்து ஒரு பாட்டைப் பாடினாள். "சுந்தரி சௌந்தரி நிரந்தரியே..."

"உங்களுக்கு நல்ல குரல், விது - அம்மா. அது குறிஞ்சி ராகம்தானே? அந்த ஜி. ராம நாதன் மெட்டுகளே தனி..."

அம்மா, "குறிஞ்சிதான்," என்றாள்.

ராஜி, "ஐயோ, அப்பா பழைய பாட்டு பத்திப் பேச ஆரம்பிச்சுட்டாரே," என்றாள்.

"எனக்குப் பழைய பாட்டு மட்டும்தான் தெரியும், ராஜி. வடக்குக்குப் போனப்புறம் அவ்வளவா தமிழ்ச் சினிமாப் பாட்டுத் தொடர்பு கிடையாது" என்றாள் அம்மா.

"பழைய பாட்டுக்கு என்ன குறைச்சல், ராஜி?" ராஜியின் அப்பா, "மாதவிப் பொன் மயிலாள் தோகை விரித்தாள்..." பாடினார். "எம்.எஸ்.வி போட்ட சுத்தமான கரஹர ப்ரியாவை அப்புறம் கேட்கவே இல்லையே."

"அப்பா, 'மெலடி'க்கு எம்.எஸ்.வின்னா, 'ஆர்க்கெஸ்ட்ரேஷ'னுக்கு ராஜான்னு உங்க கிட்டே சண்டை போட்டது என் ஹைஸ்கூல், காலேஜ் நாட்கள்னே. ஆனா, என் தலை முறைப் பாட்டை மட்டும்தான் கேட்பேன்னு சொல்ற வயசை இப்போ நான் கடந்தாச் சுப்பா... பாகவதரைக்கூட இப்போ ரசிக்க முடியுது." ராஜி குறும்பாய்ச் சிரித்தாள். "நீங் களும் விது - அம்மாவும் சொல்ற ஒவ்வொரு பழைய பாட்டு ராகத்திலேயும் ராஜா, ரஹ் மான் காலத்துப் பாட்டுக்களை என்னாலே சொல்ல முடியும்."

இப்படித்தான் விளையாட்டு ஆரம் பித்தது. தமிழ்ப்பாட்டு அதிகம் தெரியாத விதுவும் குழந்தைகளும் ரசிகர்கள்.

"சிந்தனை செய் மனமே.. அம்பிகாபதி. ஜி. ராமனாதன் இசை."

"அது கல்யாணி ராகம். அதே ராகத்தில் இன்னொண்ணு. ஆடும் அருள் ஜோதி... மீண்ட சொர்க்கம். டி. சலபதி ராவ்."

"சுந்தரி கண்ணால் ஒரு சேதி... தளபதி. இளையராஜா. ம்ம்ம்... ஜென்டில்மேன் படத் திலே, என் வீட்டுத் தோட்டத்தில் பாட்டு - கல்யாணி, செஞ்சுருட்டி, ஹம்சத்வனி எல்லாத்தையும் கலந்த ராகமாலிகையா ரஹ்மான் போட்டிருக்கார்."

"சரி, இன்னொரு ராகம். முல்லை மலர் மேலே மொய்க்கும் வண்டு போலே... உத்தம புத்திரன். ஜி. ராமனாதன்."

"காணடாதானே? பூமாலை வாங்கி வந் தான்... சிந்துபைரவி. இளையராஜா. புது வெள்ளை மழை இங்கு பொழிகின்றது... ரோஜா, ரஹ்மான்."

"அடுத்த ராகம், கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா... ஆலயமணி, விஸ்வநாதன் - ராம மூர்த்தி."

"அது மாயா மாளவ கௌளை. பூங் கதவே தாழ் திறவாய்.. நிழல்கள். இளைய ராஜா."

"மோஹனத்திலே எக்கச்சக்கமா பாட் டிருக்கே. நிலவும் மலரும் பாடுது என் மனதில் தென்றல் வீசுது...தேனிலவு. ஏ.எம். ராஜா. ஆஹா, என்ன குளுமை!"

"மலர்கள் நனைந்தன பனியாலே... இதயக்கமலம். கே.வி. மகாதேவன்."

"பன்சாயீ காதல் பறவைகள் பாடும் கவி தைகள்... உலகம் சுற்றும் வாலிபன். எம்.எஸ். விஸ்வநாதன். கண்மணியே காதல் என்பது கற்பனையோ... ஆறிலிருந்து அறுபதுவரை.

இளையராஜா."

"சிந்துபைரவி ராகத்திலே கூட நிறையப் பாட்டுக்கள். சிவகவியில் பாகவதரோட வதனமே சந்த்ர பிம்பமோ நினைவிருக்கா?"

"சித்தமெல்லாம் எனக்குச் சிவமயமே... திருவருட்செல்வர். கே.வி. மகாதேவன்."

"என்னை யாரென்று எண்ணி எண்ணி நீ பார்க்கிறாய்... பாலும் பழமும். விஸ்நாதன் - ராமமூர்த்தி."

"நானொரு சிந்து... சிந்து பைரவி. மணி ஓசை கேட்டு எழுந்து... பயணங்கள் முடிவதில்லை என்ன சத்தம் இந்த நேரம்... புன்னகை மன்னன். எல்லாம் இளையராஜா."

"ஆபேரியிலேயும் நிறையப் பாட்டு. கண்ணோடு காண்பதெல்லாம் தலைவா... ஜீன்ஸ். ரஹ்மான்."

"சிங்கார வேலனே தேவா... கொஞ்சும் சலங்கை! அருள்மயான 'க்ளாசிக்!'".

"இசைத்தமிழ் நீ செய்த அரும் சாதனை... திருவிளையாடல். கே.வி. மகாதேவன்."

"பூமாலையில் ஓர் மல்லிகை... ஊட்டி வரை உறவு. எம்.எஸ். விஸ்வநாதன்."

"குயிலே கவிக்குயிலே... கவிக்குயில். இளையராஜா."

"இது பாரதிதாசன் சினிமாவுக்குன்னு எழுதின பாட்டு. என்ன ராகம்னு சொல்லுங்க பார்க்கலாம்... துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா..."

"அதே ராகத்திலே இன்னொரு பாட்டு. மங்கியதோர் நிலவினிலே கனவிலது கண்டேன்..."

ராஜிக்கு ராகம் பிடிபடவில்லையோ பாட்டுக்கள் மறந்து போயிற்றோ. நிறுத்தினாள். அம்மாவும் ராஜியின் அப்பாவும் குழந்தைகளும் கை தட்டிச் சிரித்தார்கள்.

இதுவரை ஒதுங்கியிருந்து போட்டியை ரசித்துக் கொண்டிருந்த விது பதில் சொன்னாள். "அது தேஷ் ராகம். நான் புரந்தர தாசரைப் பாடலாமா?" விது தொடர்ந்து பாடினாள். "நீரே நீ கரதாரே மாரசுந்தரனா... மாரசுந்தரனா... சுகுமாரசுந்தரனா..."

இத்தனை நாளாய்ப் பாட மறந்திருந்த இசை. மனத்துள் ஏதோ திறந்து, உணர்ச்சிகள் குரலுடன் குழைந்து வழிந்தன. அவள் கையை இறுகப் பிடித்துக்கொண்ட அருணாவைப் பார்த்துப் பாடியபடியே புன்னகைத்தாள். அருணாவின் முகத்தில் பதில் புன்னகை. அம்மாவின் மென்மைப் பார்வை தொலைவிலிருந்தே அவர்களை அணைத்துக்கொண்டது.

"ரஞ்சி ஆண்ட்டி வந்தப்புறம் நீ திரும்பவும் பாடும்மா" அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு அம்பிகா சொன்னாள். ரஞ்சி வரவில்லை.

(தொடரும்)

வராமல் போன கூட்டம்!

வைர விழா ஆண்டைக் கொண்டாடும் மும்பைத் தமிழ்ச் சங்கம், மூன்று நாள் இலக்கிய விழாவை நடத்தியது.



தமிழ்நாட்டிலிருந்து சத்தியசீலன் தலைமையில், மதிவண்ணன், சொ.சொ.மீ. சுந்தரம், பாரதிநேசன் ஆகியோரை அழைத்திருந்தது. முதல்நாள் இவர்கள் படைத்த இலக்கிய விருந்தை, ருசிப்பதற்குப் போதுமான விருந்தினர்கள் இல்லையே என்பதில் செயலர் பாலுவுக்கு வருத்தம்! மறுநாள் சமுதாயத் தலைப்பிலான பட்டிமன்றத்திற்கு ஓரளவு கூட்டம். கடைசி நாள் பாரதி, பாரதிதாசன், கண்ணதாசன் பற்றிய ஆய்வரங்கத்தில் 'தைல தாரை'யாய் மணிவண்ணன் பொழிந்தார். அந்தக் காலத்து கவிதையைத் தொடர்ந்தாற்போல் அவிழ்த்துவிட்டார் பாருங்கள்... அசந்து விட்டது ஆடியன்ஸ்.

சத்திய சீலன் சொன்ன குட்டிச் சம்பவம் ஒன்றும் சிந்தையில் நின்றது: ஒரு மாணவன், இவரிடம் மூன்று பெட்டிகளை நீட்டி, முதலாவதில், 'இதற்குக் கொடுக்கில் விஷம்' என்றானாம். இவர் 'தேள்' என்றதும், தேள் படத்தைக் காட்டினானாம். இரண்டாவதற்குப் 'பல்லில் விஷம்' என்றானாம். பாம்பு என்றதும் பாம்பின் படத்தைக் காட்டினானாம். மூன்றாவதற்கு உடம்பெல்லாம் விஷம் என்றதும், இவர் 'மனிதனா?' என்றாராம். அவன் பெட்டியைத் திறந்தால், உள்ளே இருந்ததாம் இவர் முகத்தைக் காட்டிய கண்ணாடி!

இதை எல்லாம் ரசித்துச் சுவைக்க, கூட்டம் வராததுதான் விழா ஏற்பாடு செய்தவர்களுக்குப் பெரும் சோதனை!

- ஜெயஸ்ரீ ராஜ்


நடக்குமென்பார்; நடக்கும்!



மேஷம் : ராசிநாதன் செவ்வாயில் அமர்க்களமான அந்தஸ்தில் 'தாட்பூட்' என்று உட்கார்ந்திருக்கிறார். கிரக சஞ்சாரமும் பேஷ்! இனி உங்களுக்குக் கோயம்போடு மார்க்கெட் கிடைச்ச மாதிரி புது மவுசு கிடைக்கும். முக்கியமான எண்ணங்கள், திட்டங்கள் நிறைவேறும். கணிதம், எழுத்து, பத்திரிகை துறைக்காரர்களுக்கு அமோகமான வளர்ச்சி. 2ல் சனியும் ராகுவும் இருப்பதால் சிறு சலசலப்பு ஏற்படும். பேச்சில் குண்டூர் மிளகாயின் காரத்தைக் குறைக்கவும். வரசித்தி விநாயகர் அருள்வார்.



ரிஷபம் : குரு, சூரியன் இரண்டு பேரும் அனுகூலமான இடங்களில் சஞ்சரிக்கிறார்கள் என்பதே நல்ல செய்திதானே! இதனால் உங்கள் புத்திசாலித் தனம் வெளிப்படும். திறமை அதிகரிக்கும். நசுங்கிப் போன நாட்டுத் தக்காளி மாதிரி இருந்த உங்கள் வாழ்க்கை நிலை, ஸ்டிக்கர் ஒட்டின சிம்லா ஆப்பிள் மாதிரி ஆயிடும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். பொருளாதார நிலை உயரும். புதிய பொருட்களின் சேர்க்கை ஏற்படும். சனி, ராகு, கேது சஞ்சாரம் அனுகூலமாக இல்லை. எனவே, புதியவர்களிடம் பழகும்போது கவனமாகப் பழகவும்.



மிதுனம் : தலையைச் சீவினாலும், 'ஜில்' என்ற சுவை நீர் தருகிற இளநீர் மாதிரிதான் நீங்களும். பாதகம் செய்பவருக்கும் நன்மையே செய்வீர்கள். இந்தப் போக்கினாலேயே, துணிவோடு காரியங்களில் ஈடுபட்டு ஜெயிப்பீர்கள். 6ம் இடத்திலும் 11ம் இடத்திலும் உலவும் கிரக நிலையால் ஆற்றல் வளரும். புதிய சொத்து சேரும். தொழில் ரீதியான அதிர்ஷ்டம் வரும். மாணவர்கள் திறமைக்குரிய பலனை அடைவார்கள். 12ல் சனி, ராகு உலவுவதால், பொருளாதாரம் சம்பந்தப்பட்ட இனங்களில் எச்சரிக்கை தேவை. தெய்வப் பிரார்த்தனை நலம் தரும்.



கடகம் : கடன் தொல்லை, தொழிலில் மந்த நிலை, வேலை இல்லை, எதிரிகள் தொல்லை என ஏகப்பட்ட பிரச்னைகள், உங்களை முடக்கிப் போட்டிருக்கும். இனி கவலையில்லை. செவ்வாய் 10ல் பலம் பெற்றுத் திகழ்வதால், நுனிக்கல் கட்டிய புடலை மாதிரி உங்கள் வளர்ச்சியும் ஆஹா.. ஓஹோதான்! மக்களாலும், உடன் பிறந்தவர்களாலும் ஓரிரு காரியங்கள் நிறைவேறும். பெண்கள் நிலை உயரும். வாழ்க்கை வசதிகள் பெருகும். 5ல் கேது, 10ல் குரு என்பதால் மக்கள் நலம் கவனிக்கப்பட வேண்டும்.



சிம்மம் : கத்திரிக்காய் முற்றினா, கடைத் தெருவுக்கு வந்துதானே ஆகணும்? உங்க கிரக சஞ்சாரம் சூப்பரா இருந்தால், மனதுக்கினிய சம்பவங்கள் எல்லாம் நடக்கத்தானே செய்யும்? குரு, ராகு, சனி ஆகியோர் சஞ்சாரம் அனுகூலமாக இருப்பதால், வாழ்க்கையில் மகிழ்ச்சி கூடும். தான தருமப் பணிகளில் பங்கு கொள்ள வாய்ப்பு கூடிவரும். ஸ்பெகுலேஷன் துறை லாபம் கொண்டு வரும். கணவன் -மனைவி உறவு நிலை சீராக இருக்கும். சூரியன் சஞ்சாரம் மெச்சும்படி இல்லை என்பதால், வீண் அலைச்சல் இருக்கும். உஷார்!




கன்னி : இன்னதுதான் பிரச்னைன்னு இல்லாமல், ஏதோ ஒண்ணு 'நச்நச்'னு நெருடிக்கிட்டே இருந்தது இல்லையா? அது கிடக்குது கன்னடைக்காய்! விட்டுத் தள்ளுங்க. இனி உங்களுக்குச் சூரியனும், கேதுவும் கூட்டணி அமைத்துக் கொண்டு நலம் புரிவார்கள். அரசு விவகாரங்கள் அனுகூலமாக இருக்கும். வாழ்க்கைத் துணையின் நலனில் அக்கறை அவசியம். அலுவலகப் பணியாளர்கள், ஆசிரியர், சட்ட வல்லுனர்கள் தத்தம் கடமைகளைச் செய்வார்கள். விளையாட்டு விநோதங்களில் ஈடுபாடு உள்ளவர்கள் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது.




சிம்ம ராசிக் காரரான இயக்குனர் சசிக்கு மகிழ்ச்சி கூடுமாம்.




துலாம் : கால் கிலோ காராமணி கிடைக்குமான்னு வந்தவனுக்கு ஓசியிலே ஒரு கிலோ ஊட்டி பீன்ஸ் கிடைச்ச மாதிரி, எதிர்பாராத வரவுகள் இருக்கும். புதன், குரு, சுக்கிரன் அனுகூலமாக உலவுவதால், மனத்தில் தெளிவும், உற்சாகமும் பிறக்கும். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும் உடன் பிறந்தவர்களால் அளவோடு நலன் உண்டாகும். வேலை இல்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு வரும். வார பின்பகுதியில் சர்க்கரை வள்ளிக் கிழங்குபோல ஸ்வீட் நியூஸ் வரும். ராகு, கேது, சனி அனுகூலமாக இல்லாததால், சிறு பிரச்னைகள் வரும். குரு பலத்தால் சமாளிப்பீர்கள்.



விருச்சிகம் : உரிக்க உரிக்க ஒண்ணுமில்லாமல் போகும் பெல்லாரி வெங்காயம் போல, தொல்லைகளும் ஒண்ணுமில்லை என ஆகும். காலம் விரைவில் அதற்கான ஏற்பாடுகளை 6ல் ஆட்சி பெற்று உங்கள் ராசியைப் பார்க்கும் செவ்வாய் ராசிநாதன் செய்து வைப்பார். போட்டி, பந்தயங்களில் வெற்றி காணலாம். பெண்களுக்கு உற்சாகமான வாரம். புதிய பொருள் சேர்க்கை உண்டாகும். கலைத் துறைக்காரர்களுக்குச் சுபிட்சமான காலம். கணவன் - மனைவி உறவு சுமார். கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கை தேவை. புதியவர்களிடம் பேசும்போது உஷாராக இருக்கணும்.




தனுசு : சனி, ராகு 6ல், குரு 7ல் என்பதால், சர்வ நிச்சயமாக நல்ல நேரம்தான். பிளாஸ்டிக் கவரில், ஏ.சி. கடையில் இருக்கும் பெங்களூர் காரட் போல பளிச்சென்று தெரிவீர்கள். உங்கள் எண்ணங்களும், திட்டங்களும் பாராட்டு பெறும். பொறியியல், சட்டம், காவல், இராணுவம் போன்ற துறைக்காரர்களின் திறமை, உழைப்பு வீண் போகாது. தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் ஏறுமுகமான நேரம். பண நடமாட்டம் அதிகரிக்கும். தான, தருமங்களில் ஈடுபடவும் நலமே பெறுவீர்கள்.



மகரம் : சுக்ரன், கேது மற்றும் சூரியன் (15ம் தேதி முதல்) ஆகியோர் சஞ்சாரம் அனுகூலமாக இருப்பதால், குடும்ப நலம் சீராகவும் செழிப்பாகவும் இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் அளவோடு உதவ முன் வருவார்கள். புதிய பொருட்களின் சேர்க்கை ஏற்படும். உங்களைக் கருவேப்பிலை மாதிரி பயன்படுத்தியவர்கள் எல்லாருமே, உங்களுடைய அருமை பெருமைகளை உணர்ந்து ஓடோடி வருவார்கள். சூடான வார்த்தைகள் உதிர்க்காமல், அன்புடன் பணிவுடன் பழகினால் நலம் கூடும். 5ல் ராகு, சனி, 6ல் குரு உலவுவதால் மக்கள் நலம் சீராக இருக்காது. மக்களால் மன அமைதிக்குப் பங்கம் ஏற்படலாம். தான தருமம் செய்யவும்.



கும்பம் : பரங்கிக்காய் மாதிரி வந்த பிரச்னைகள்கூட, கொத்தவரங்காய் போல இளைத்துப் போய்விடுமளவுக்கு, கிரக சஞ்சாரம் அனுகூலமாக இருக்கிறது. துணிச்சலான செயல்களில் ஈடுபாடு அதிகரிக்கும். பொருளாதார நிலை அபிவிருத்தி அடையும். குடும்ப நலம் சீராக இருக்கும். திருமணம், சுப காரியம் நடக்க வாய்ப்பு கூடி வரும். மனத்தில் மகிழ்ச்சி உண்டாகும். கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும் பரஸ்பரம் அனுகூலம் உண்டாகும். பயணத்தில் கவனம் தேவை.



மீனம் : செடி வாடினாலும், எப்போதும் நேர்குத்தாக நிமிர்ந்தே நிற்கும் வெண்டைக்காய் அம்சம் உங்களுக்குமிருக்கு. எத்தனை பிரச்னை வந்தாலும், துணிச்சலோட எதிர்த்து நிற்பீங்க. அதற்கான சாதுரியத்தை நம் இடத்திலுள்ள சனி, ராகு சஞ்சாரம் தந்துவிடும். தகவல் துறை, கலைத் துறைக்காரங்களுக்குச் செழிப்பான முன்னேற்றம். பயணத்தால் அனுகூலமுண்டு. எதிரிகள் விலகிப் போவார்கள். கண் சம்பந்தமான உபத்திரவம் ஏற்படலாம். உஷார்!

அக்னி சர்மா பக்கம்

மார்ச் 13 முதல் 19 வரை

சந்தத்துள் அடங்கிய கந்தன்!

குருஜி ஏ.எஸ். ராகவன்

திருவாரூர் மாவட்டத்தில் ஒரு காட்டுப் பிரதேசம். அங்கே மரங்கள் அடர்ந்திருக்க, அவற்றை மலர்க்கொடிகள் தழுவ, அக்கொடிகளில் பூத்து சிரித்த மலர்கள் தேன் சிந்தி மகிழ... அந்த ரம்மியமான வனத்தை ஒட்டி ஒரு குக்கிராமம். அக்கிராமத்து மக்களின் நிறை செல்வம் ஆநிரைகள். காட்டுப் பகுதியில் அவை மேய்ச்சலுக்குச் செல்வதும், அந்தியில் வீடு திரும்புவதும் வழக்கமாயிருந்தது.

ஒரு செல்வந்தர் வீட்டுப் பசு மட்டும் பின் தங்கித் தாமதமாய் வீடு திரும்பிற்று. பால் கறந்த நேரத்தில் இப் பசுவின் மடி மட்டும் வற்றிக் காணப்பட்டது.

இந்த வினோதம் ஏன் என்று விசாரிக்கப் புறப்பட்ட ஆட்கள், பசுமாடு வனத்திடையே இருந்த பல புற்றுகளுள் குறிப்பாக ஒன்றினை நெருங்கி, அதன் மீது மடியிலிருந்த பாலைச் சொரிந்துவிட்டு வருவதைக் கண்டனர். இந்த 'அபிஷேகம்' தினந்தோறும் நடைபெற்று வந்தது!

விஷயம் தெரிந்ததும் ஊர் மக்கள் புற்று இருந்த இடத்தைத் தோண்டினர். அவ்வாறு தோண்டிய பொழுது கிடைத்தது ஓர் அழகான முருகன் சிலை – வள்ளி – தெய்வானையுடன் கூடிய உருவம்.


கிராமத்தாரின் மகிழ்ச்சிக்குக் கேட்கவும் வேண்டுமா! அப்போது, அங்கேயே கோயில் அமைப்பதென்று முடிவு செய்து செயல்படுத்தினர். முருகன் பிரதிஷ்டை செய்யப்பட்டான். மூன்று கால பூஜையும் வழிபாடுகளும் அமோகமாக நடைபெறலாயின.

கந்தன் விரும்பி குடிகொண்ட இடம் என்பதால் இத்தலம் கந்தன்குடி என்று வழங்கலாயிற்று.

'கந்தன் குடி' என்று சொல்வதிலேயே ஒரு சந்தம் அடங்கியிருக்கிறது. வல்லினமும் மெல்லினமும் கலந்த ஓசை நயம் 'தந்தன் தன' என்ற சந்தத்துள் அழகாகப் பொருந்தி உட்கார்ந்திருக்கிறது.

ஊர்ப் பெயரிலுள்ள இந்த சந்தத்தையே பயன்படுத்தி இவ்வூர் முருகனை அதனுள் பொதித்துத் துதித்துப் பாடியிருக்கிறார் அருணகிரிநாதர்:

எந்தன்சட லங்கம்பல பங்கம்படு
தொந்தங்களை
யென்றுந்துயர் பொன்றும்படி
யொருநாளே
இன்பந்தரு செம்பொன்கழ லுந்துங்கழல்
தந்தும்பிளை
யென்றும்படி பந்தங்கெட
மயிலேறி
வந்தும்பிர சண்டம்பகி ரண்டம்புவி
யெங்குந்திசை
மண்டும்படி நின்றுஞ்சுட
ரொளிபோலும்
வஞ்சங்குடி கொண்டுந்திரி நெஞ்சன்றுக
ளென்றுங்கொளும்
வண்டன்தமி யன்றன்பவம்
ஒழியாதோ
தந்தந்தன திந்திந்திமி யென்றும்பல
சஞ்சங்கொடு
தஞ்சம்புரி கொஞ்சுஞ்சிறு
மணியாரம்
சந்தன்தொனி கண்டும்புய லங்கன்சிவ
னம்பன்பதி




சம்புந்தொழ நின்றுந்தினம்
விளையாடும்
கந்தன்குக னென்றன்குரு
வென்றுந்தொழு மன்பன்கவி
கண்டுய்த்திட அன்றன்பொடு
வருவோனே

கண்டன்கனி சிந்துஞ்சுவை
பொங்கும்புனல் தங்குஞ்சுனை
கந்தன்குடி யின்தங்கிய பெருமாளே.

இன் கனி சுவைசிந்துகின்ற, பொங்கு
புனல்களும் தங்கு சுனைகளும்

தலம்தோறும் தமிழ்க் கடவுள் - 18



வளப்படுத்துகிற ஊராக கந்தன்குடியை வர்ணிக்கிறார் அருணகிரிநாதர்.

அங்கே குடிகொண்டிருப்பவனோ 'கந்தன் குகன் எந்தன் குரு', சம்புவும் தொழக் கூடியவன், 'தந்தந்தன', 'திந்திந்திமி' என்று சந்தமெழ அவன் மணியாரங்கள் ஒலித்து அசைந்து கொண்டிருக்கின்றன. உலகியல் பந்தங்கள் அறுபட, நம் நெஞ்சில் குடி கொண்ட வஞ்சம் பொடிபட அவனே, சந்தத்திலுறையும் கந்தனே, வந்து நம்மை ஆட்கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறார் அருணகிரிநாதர்.

இத் தலம் பேரளம் - காரைக்கால் ரயில் பாதையில் உள்ள அம்பகரத்தூரிலிருந்து ஒரு மைல் தொலைவில் இருக்கிறது.

குமரக்குடி என்றும் ஒரு பெயர் உண்டு. தெய்வானை அம்மை இங்கே

கடுந்தவமிருந்து முருகனை அடைந்ததாக புராணம் சொல்கிறது. அச்சமயம் மகளுக்குக் காவலாகவும் துணையாகவும் தனது வாகனமான ஐராவதம் என்ற வெள்ளை யானையையும் பைரவரையும் அனுப்பி வைத்தானாம் இந்திரன்.

இன்றைக்கும், கந்தன்குடி முருகன் கோயிலில் ஓங்கி உயர்ந்த ராஜகோபுரத்தைக் கடந்து கொடி மரத்தை நாம் அடைந்தோமானால் மயிலுக்குப் பதிலாக அங்கே யானை வாகனம் இருப்பதைக் காண்கிறோம்.

வெளிப் பிராகாரம் புல் மண்டிக் கிடக்கிறது. உட்பிராகாரத்தை வலம் வருகையில், முதலில் தவக்கோலத்தில் நிற்கும் தெய்வ யானையின் சன்னிதியில் நிற்கிறோம். அவளைப் போல் ஒருமுகச் சிந்தனையுடன் நாமும் முருகனை எண்ண வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

தவத்துக்கிறங்கி தெய்வானையைத் திருமணம் கொண்ட முருகன், 'கல்யாண சுந்தரர்' என்ற திருப்பெயருடன் ஒரு முகமும் நான்கு கைகளுமாகக் காட்சி தருகிறான். வள்ளி - தெய்வானை இருவரும் இருபுறமும் இருக்கிறார்கள். கிழக்கு நோக்கிய சன்னிதி. மயில் உருவம் பொறித்த அழகான பீடத்தின் மேல் நின்ற திருக்கோலம்.

இந்திரன் அனுப்பிய ஐராவதேசுவரர், பைரவர் ஆகியோருக்கு இங்கே சன்னிதிகள் உண்டு. ஈசனும் அன்னையும் விச்வநாதர் - விசாலாக்ஷி என்ற பெயர்களுடன் இங்கு விளங்குகின்றனர்.

ஸ்கந்த புஷ்கரிணி என்ற தீர்த்தமும் ஸ்தல விருட்சமான வன்னி மரமும் உள்ளன.

மிக சிரத்தையுடன் ஐந்துகால வழிபாடு நடக்கிறது இங்கே.


பசுக்கள் பால் பொழிந்து, புதையுண்டு கிடந்த கடவுள் திருவுருவங்களை அடையாளம் காட்டியதாகப் பல கதைகள் உண்டு. பெரும்பாலான கதைகளில் அவ்விடங்களில் சிவலிங்கம் கண்டுபிடிக்கப்பட்டு பிரதிஷ்டையானதாகவே வரலாறு அமையும். கந்தன்குடி கதை சற்று மாறுபட்டிருந்தாலும் அப்பாவுக்குப் பிள்ளையாகவே முருகன் தப்பாமல் பிறந்திருப்பதைக் காட்டுகிறது!

''வர வர ஜனங்க விவரமானவங்களா ஆயிட்டாங்க தலைவரே!''

''என்ன சொல்றே?''

''கள்ள வோட்டுப் போடக் கொடுத்த பணம் அதுக்கு மட்டும்தானாம்; வெற்றி விழாவுக்கு வர தனியா பணம் தரணுமாம்!''

- என்.வி. ரமணி



''மாத்திரை பேரை கொஞ்சம் தெளிவா எழுதிக் கொடுத்தால் என்ன டாக்டர்?''

''மெடிக்கல் ஷாப்ல மருந்தை மாத்திக் கொடுத்துடுவாங்க, பரவாயில்லையா...?''

- சீர்காழி வி. ரேவதி




''இளைஞர் பிரிவு, மகளிர் பிரிவு மாதிரி கட்சில புதுசா ரெண்டு பிரிவுகள் தொடங்கியிருக்கிறாராமே, தலைவர்?''

''ஆமா, காணாமல் போன நபர்கள் தேடல் பிரிவு; பொய் குற்றச்சாட்டுக்களைச் சமாளிக்கும் பிரிவுன்னு. இப்போதைக்கு ரெண்டு ஆரம்பிச்சிருக்கார்!''

- அம்பை தேவா





இத்தனை நீண்ட மக்கள் வரிசையை கிராபிக்ஸில் மட்டுமே பார்த்திருக்க முடியும். இந்த நம்பர் ஒன் நிஜக் 'க்யூ' சேரும் இடம் "பாபா தாபா".

'தாபா', பஞ்சாப் ஹரியானா போன்ற வட மாநிலங்களின் ரோட்டோர தந்தூரி ரொட்டி, பரோட்டா, பிரியாணி கடை. சூடான தயாரிப்புகள் சுத்தமான சூழலில் நட்சத்திர ஹோட்டல்களை மிஞ்சும் சுவை.

'பாபா தாபா' சாதா தாபா இல்லை. திறந்த நாள் முதல் மற்ற ஹோட்டல்களில் கூட்டம் காலி. வீடுகளில் சமையல் பந்த்.

தாபாவில் பெரிய க்யூ ஒருபுறம் காத்து நிற்க, சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்களை உபசரித்து பரிமாறிக் கொண்டிருந்தார் செந்தில். நாலைந்து முறை அந்த டேபிளை கடந்தபோது ஒரு முரட்டு ஆசாமி பரோட்டாக்களைச் சுருட்டி தன் பத்தான் சூட் ஜிப்பாவுக்குள் போடுவதைப் பார்த்தார்.

"சார், பாபா தாபால வயிறு முட்ட சாப்பிட மட்டுந்தான் அனுமதி. பார்சல் கிடையாது. தெரியாதா?" மெதுவாகக் கேட்டார்.

"அப்படியா? நான் ஊருக்குப் புதுசு" இரண்டு கறுப்பு முன் பற்கள் தெரிய சிரிப்போடு பதில் வந்தது. அப்படியும் சுருட்டி அடைப்பது நிற்கவில்லை.

"தயவு செஞ்சு சொல்றதைக் கேளுங்க. இது சாதாரண தாபா இல்ல" கையைத் தடுத்தார்.

உடனே கோபம் பீறிட, "நானும் சாதாரண ஆளில்ல! மனித வெடிகுண்டு. தள்ளிப் போ" என்று செந்திலை காலால் எட்டி உதைத்தார்.

"அண்ணே மனித வெடிகுண்டு!" அலறிக் கொண்டே டேபிளில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் மேல் போய் விழுந்தார். தொடர்ந்து களேபரம். (முரட்டு ஆசாமி ஜிப்பாவைக் கழற்றி எட்டடி விசுவரூபம் எடுத்தான்.)

அடுத்த வினாடி தாபாவின் மூலஸ்தானத்திலிருந்து விஷ்.. உஷ்.. விஷ்.. சுழல் கிளம்பியது. கையில் நீண்ட பரோட்டா துடுப்பு ஏந்தியபடி ரஜினி பறந்து வந்து சாஃப்ட் லேண்டானார். உஷ் விஷ் உஷ் விஷ் உஷ் விஷ் என சக்கரமாய்ச் சுழலும் துடுப்பு நிற்கவில்லை. எட்டடிக்கு அதைப் பார்த்து தலை சுற்றியது.

"நமஸ்தே பிரதர்! நீங்க, மனித வெடி குண்டா? ஜூஜூபி! எப்படி குண்டோட பட்டனை அமுக்குவீங்க?"

எட்டடி பதில் பேச வாய் திறக்குமுன்... மின்னல் வேகத்தில் உஷ் விஷ் உஷ் என துடுப்பால் இரண்டு கணுக் கையிலும் சரமாரியாகப் போட்டார். எலும்பு முறிந்து கைகள் தொங்கிப்போயின. அதற்குள் எழுந்த செந்தில்,


"குண்டா, வெடிக்கிற வேலை இங்க நடக்காது. ஒன்லி கட்டிங்ஸ், ரொட்டி, பரோட்டோ. அதுகூட அண்ணன் மட்டுந்தான்!"

"பிரதர், இது பாபா தாபா! இங்க ஒரு வேளை சாப்பிட்டா ஒன்பது வேளை சாப்பிட்ட மாதிரி! உஷ் விஷ் உஷ் விஷ்! மரியாதையாச் சாப்பிட்டுப் போகணும்." அதற்குள் எட்டடி ஆசாமியைச் சோதனை போட்ட செந்தில், "அண்ணே நிஜமாவே பாம்!" என்று அலற, "தூக்கி தண்ணில போடு. நமுத்து போயிடும் அப்புறம் வெடிக்கவே வெடிக்காது."

"பிரதர் இப்ப சொல்லு நீ யார்?"

ஒரு வேளை சாப்பிட்டால் பல நாள் சாப்பிடாமல் தெம்போடு இருக்க வைக்கும் இந்த





அபூர்வ உணவை, தன் தீவிரவாத நண்பர்களுக்கு வாங்கிச் செல்லவும், உணவு ஃபார்முலாவைத் திருடவும் வந்த ஐ.எஸ்.ஐ. ஏஜெண்ட் என ஒப்புக் கொள்கிறான்.

"இதென்ன பெப்சி, கோக்கோ கோலா ஃபார்முலாவா திருட. இது, பூர்வ ஜென்ம புண்ணியம்! திருட முடியாது பிரதர்."

பாபா தாபா ஒரு ஆச்சரிய தாபா. அங்கு ஒரு வேளை சாப்பிட்டால் ஒன்பது வேளை சாப்பிட வேண்டாம். பசி எடுக்காது ஆனால் தெம்பிருக்கும். புத்துணர்ச்சி இருக்கும். ரஜினி செய்து மக்கள் அங்கு வந்து சாப்பிடும் உணவுக்கு மட்டும் இது பொருந்தும். பார்சல் கிடையாது. ஏட்டிக்குப் போட்டியாக செந்தில் ஒரு முறை சமைக்க, சாப்பிட்டவர்கள் வயிறு கலங்கியதுதான் மிச்சம்.

கொஞ்சம் கொஞ்சமாக தாபா புகழ் பரவியது. மூன்று நாளைக்கு ஒரு நாள் சாப்பிட்டால் போதும். பின் விளைவு கிடையாது என்றதும் பசி பட்டினி குறைந்தது. உற்பத்தி தானாக பெருகியது. உணவுத் தேவையைப் பொறுத்துவரை ஜனத் தொகை மூன்றில் ஒன்றாக குறையக் கூடிய நிலை.

ரஜினி ஸ்டைலில் ரூமாலி ரொட்டி லாகவமாக மேலே பறந்து துடுப்பு நுனியில் வந்து விழுந்தது. பக்கத்தில் மனிஷா, "நான் அன்னபூரணியா? காய்கறி சாமான் உனக்குக் குடுக்கறேன் நீ பேர் வாங்கிட்டு ஸ்டைல் காட்றே"

"தாயே நீங்க அன்னபூரணியா? அன்னபூர்ணி சொத்தலும் முத்தலுமா தருவா? பேசாம போங்கம்மா மனிஷா..."

"அந்தக் கிழம் உனக்கு ஓசில தாபாவைக் கொடுத்திடுச்சு. நீ பேசுவே..."

"ஏய்... ஏய்... என் பாபாவ கிழம்னு

ரஜினியிடம் சொல்லாத கதை

சொன்னே; நான் கெட்டவனாயிடுவேன். அவர் தெய்வம், அநாதையான என்னை...

சட்டென வெந்த பரோட்டா மாவாகிறது. (ப்ளாஷ் பேக்)

சின்ன பையனாக ரஜினி, பாபா சிங்கின் தாபாவில் டேபிள் துடைத்து, பிளேட் கழுவி கடுமையாக உழைக்கிறார். பெரியவனான பின், நன்றாகச் சமைக்கத் தெரிந்தும் ஏனோ ரஜினியைப் பரோட்டா பிரியாணி செய்ய அவர் விடவில்லை. திடீரென ஒரு நாள் பாபா சிங்கிற்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டு உயிர் போகும் நிலையில் ரஜினியை அழைத்து,

"என் பசங்க சரியில்ல. நீ நல்லவன். மதராஸி.."

"பாபா நான் மதராஸியில்ல.."

"சரி... இந்தியன்.."

"அய்யோ அது கமல்!"

"ஏதோ. நீ நல்லவன். எல்லாருக்கும் நல்லது செய்வே. அதனால இந்த தாபாவை உனக்கு எழுதி வைச்சிட்டேன்."

"பாபா.."

பாபா சிங் அழுதபடி, "ஒரு முக்கியமான விஷயத்தை உன்கிட்ட சொல்லாம மறைச்சிட்டேன் பாவி. உன் சமையல்லே ஏதோ ஒரு சக்தி இருக்கு. உன் சாப்பாட்ட ஒரு வேளை சாப்பிட்டா மூணு நாள் பசி, சோர்வு இல்லாம... ச்சு.. நீ செய்து சாப்பிட்டவங்க அப்பவே சொன்னாங்க, நான்தான் பிசினஸ் குறைஞ்சிடும்னு உன்னைச் சமைக்க விடல. பாவி! இதோ பார் இந்த சக்தியை நாட்டுக்கு நல்லது செய்யப் பயன்படுத்து. அதுக்குத்தான் இந்த தாபாவ உனக்குத் தரேன்.." போய்ச் சேர்ந்தார்.

முதலில் ரஜினியால் இதை நம்ப முடியவில்லை. செந்திலை அழைத்து, பரோட்டா பிரியாணி போட்டுச் சோதித்தார். சாப்பிட்ட செந்தில் அடுத்த மூன்று நாள் எப்போது சாப்பிட அழைத்தாலும், "பசியே இல்லண்ணே, ஆனா உடம்பு விறுவிறுனு இருக்கு. ஏதாவது வேலை கொடுங்க அண்ணே. வேலை குடுங்கண்ணே.."

"உனக்கே பசிக்கலையா? அப்ப பாபா சொன்னது சரிதான்!"

சிங் தாபா 'பாபா தாபா' வானது. தான் சமைக்கும் கை பக்குவத்தில், பஞ்ச பூதங்களாகிய நீர், நிலம், வான், காற்று, நெருப்பு இவைகளிருந்து சக்தி உணவிற்குள் செல்கிறது என்று பல யோகிகளிடம், சித்தர்களிடம் விவாதித்து அறிந்து கொண்டார். அதனால் அதை உட்கொள்ளும் மக்களால் பசியின்றி யோகிகள் போல சிறிதுண்டு பெரிது சாதிக்க முடியும் என்றும் புரிந்தது. பாபா தாபா ஃபுட் செயினாக விரிந்தது.

பாபா தாபா ரஜினி புகழ் பரவ, துண்டுகளும், தொப்பிகளும் அங்கவஸ்திரங்களும் அருகில் வந்தன. 'நீங்க மட்டும் எங்க கட்சில சேர்ந்திட்டா நாட்டையே சுபிட்சமாக்கிடலாம். ஏற்கெனவே நீங்க காமதேனு.."

இன்னொரு கட்சி, "நீங்க எங்க கட்சியில சேரவே வேண்டாம். நாங்க எங்க கட்சியை உங்களோட இணைச்சிக்கறோம். சரியா?"

எரிச்சலடைந்த ரஜினி, "செந்தில்.." உடனே செந்தில், "இதபாருங்க நாங்க, சோத்துக் கட்சி.."

"செந்தில்!"

"சாரி. அண்ணன் ஒன் மேன் கட்சி. அரசியல் அவருக்குப் பிடிக்காது. வரமாட்டார்.."

அதற்குள் ரஜினியே, "நாட்டுக்கு உணவுப்

கல்கி – VBC Jewellery

இணைந்து வழங்கும்

புன்னகைப் போட்டி - 2 முடிவு



முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வத்தை வழியனுப்பச் சொல்லிக் கேட்டிருந்தோம். ஆத்தாடி... வாசகர்கள் கமெண்ட்டுகளை அள்ளிக் குவித்துவிட்டார்கள். குவிந்ததில் நான்கு கிராம் தங்கம் பரிசு பெற தேர்ந்தெடுக்கப்பட்ட கமெண்ட்டுகள் :

ஐந்தாண்டுகால மெகா சீரியலின் அடக்கமான (விளம்பர) இடைவேளையே! எங்களுடன், சீரியலைத் தொடர்ந்து காணத் தயாரா?

எம். சந்திரசேகர்,
3, வைக்கோற்காரன் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை - 600 007.

பெயரில் வாசமாய்,
அ.தி.மு.க.வே சுவாசமாய்,
அம்மாவுக்கு விசுவாசமாய்
இருப்பவரே! இனி கொஞ்சம்
ஆசுவாசமாய் இருங்க!

ஆ. நல்லமுத்து,
156/6, சீனிவாசா நகர் முதல்
தெரு, கோவில்பட்டி-628 502

பிரச்னை இல்லேன்னு ஆயிடுச்சு. மக்கள் தெம்போட நல்லா உழைக்க தயாராயிருக் காங்க. அவங்களுக்கு நல்ல வேலை கொடுத்து, தொழில் அபிவிருத்தி செய்து இந்தியாவை உலகத்தில நம்பர் ஒன் நாடாக்கப் பாடு படுங்க. அதுதான் இனி அரசியல் வாதிங்க வேலை."

இந்தியாவின் சுபிட்சக் கதையைப் பார்த்துக் கொண்டிருந்த பங்காளி பாகிஸ் தானுக்குப் பயங்கர வயிற்றெரிச்சல்.

"தாபா சிங் ரஜினியை க்ளோஸ் பண் ணிட்டா இந்தியா காலி!"

"ரொம்பதான் வாலாட்டறாங்க. காஷ்மீர் கூட நமக்குப் பிரச்னையில்ல. அவனை ஒழிக்கணும்."

கேட்டுக் கொண்டிருந்த பாக். அதிபர், "முட்டாள்! அவனைக் கொல்லக் கூடாது. அந்த சுபிட்சம் இங்க வரணும்! அமெரிக்கா வோடு பழகி இதுகூட கத்துக்கலே?"

"கரெக்ட் பாஸ்! அவனை எப்படியாவது கடத்திட்டு வந்திடறோம்" என்று ஐ.எஸ்.ஐ. சிலிர்த்தது.

"முட்டாள்! இதை ராஜதந்திரமா செய்ய ணும் நீங்க பேசாம இருங்க..."

பாக். அதிபர் அமெரிக்க அதிபரோடு கிசுகிசுத்தார். "காஷ்மீரைக்கூட விட்டுக் கொடுத்திடறோம் இந்த தாபா சிங்கை எங்களுக்குத் தரச் சொல்லுங்க. புஷ்ஷும் இதை நல்ல திருப்பமாகக் கருதினார்.

ஆனால் அதற்குள், எப்போதுமே சொல் பேச்சைக் கேட்காத ஐ.எஸ்.ஐ., ரஜினி சென்று கொண்டிருந்த விமானத்தை அவரோடு கடத்தி விட்டது. தொடர்ந்து உலக அரசியலில் குழப்பம்.

பாக். அதிபர் புலுக, புஷ் எகிற, வாஜ்பாய் அலற, ரஜினி பரோட்டா துடுப்பால் உஷ் விஷ் உஷ் விஷ் என்று ஐ.எஸ்.ஐ. ஆட் களை ஒரு கலக்கு கலக்கி விமானத்தில் எல்லோரையும் காப்பாற்றுகிறார். டீ.வி. பிரஸ் புடை சூழ ரஜினி, "நான் பாகிஸ்தானில் தாபா துவங்கத் தயார்! என்ன இருந்தாலும் நாங்கள் பிரதர்ஸ். எங்கள் சுபிட்சத்தைப் பகிர்ந்து கொள்ள நாங்க தயார். அதே உணர்வோடு அவர்கள் காஷ்மீர் பிரச்னையை விட்டுவிட்டு இந்தியாவோடு இணைந்து... வேண்டுமானால் ஒரு யூனியன் டெரிடரியாக சந்தோஷமாக இருக்கட்டும். பாகிஸ்தான் அதிபரோடு இதை பேசப் போகிறேன். நல்லதை நினைப்போம். நல்லதே நடக்கும்!"

கூட இருந்த செந்தில் : "நான் ஒரு தடவை சொன்னா ஒன்பது தடவை சொன்ன மாதிரி. அண்ணன் அரசியல் பேசுவாரு. ஆனா நிச்சயமா அரசியலுக்கு வரமாட்டாரு!" ●

புன்னகைப் போட்டி; பொன்நகைப் பரிசு!

ஜன்ம பூமி ஜோக் ஒன்று எழுதுங்களேன்! இன்று அயோத்தி குறித்து நாடெங்கும் நாளொரு கமெண்ட்; பொழுதொரு பல்டி என்று அரசியல் தலைவர்களும் அரசியல் பண்ணும் மதத் தலைவர்களும் நாட்டைக் கலக்க... இந்த மானுட நாடகம் கண்டு ராமனும் சீதையும் எப்படி ஜோக் அடித்துக் கொள்வார்கள்...? தலை சிறந்த இரு ஜோக்கு கள் தலா நான்கு கிராம் தங்கம் பெறும்!

புன்னகைப் போட்டி - 5

____

____

____

கூப்பன் அனுப்பும் உறையில் புன்னகைப் போட்டி - 5 என்று குறிப்பிட்டு கல்கி, 47 ஜவாஹர்லால் நேரு சாலை, சென்னை-97 என்ற முகவரிக்கு அனுப்பவும். கடைசி தேதி: 25.3.2002. ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பெயர்: ....

முகவரி: ....

....

....

....



முதியவர் லா.ச.ரா. 'வாக்கர்' உதவியுடன் வந்து, ராஜஸ்தானத்து 'பாட்' நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தார். இரண்டு பளபள தட்டுக்களுடன் அநாயாசமாக இரு கைகளையும் தாளம் தவறாமல் அந்தரத்தில் சுழற்றிச் சுழற்றிக் கலைஞர்கள் ஆட, இசையின் மெல்லிய பின்னணியில் கதை விரிகிறது. ராஜஸ்தான பாணி ஓவியப் பின்னணியில், கிராமத்தில் பிரபலமான பாபுஜி - தேவ்ஜி கதையாம். நிகழ்ச்சி முடிந்ததும், அத்தனை கலைஞர்களும் லா.ச.ரா.வைத் தொட்டு வணங்கியது நெகிழ்ச்சியான காட்சி.

நிகழ்ச்சி சென்னையில்தான். எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தின் இயற்கையான பின்னணியில், நாட்டின் நான்கு திசைகளிலிருந்தும் கிராமப்புறக் கலைகள் பலவற்றை, மக்களின் பார்வைக்கும் ரசனைக்கும் ஒட்டு மொத்தமாக இறக்குமதி செய்து வழங்கினார் முத்துக்குமாரசாமி. இவர் தேசிய கிராமப்புறக் கலைகள் ஆதரவு

காலம் கடந்த



மையத்தின் தலைவர். ஃபோர்டு ஃபவுண்டேஷனின் 50 ஆண்டுக் கால இந்தியச் சேவையையும், அருங்காட்சியகத்தின் 150ஆவது ஆண்டு விழாவையும் சேர்த்துக் கொண்டாட முடிவு எடுத்த போதுதான் இந்தக் கன்யாகுமரிக்காரரைப் பலரும் தெரிந்துகொண்டார்கள்.

முன்பு தில்லியில் ஃபோர்டு ஃபவுண்டேஷன் அலுவலகத்தில் இவர் வேலை பார்த்தார். கிராமப்புறக் கலைகள் அழிந்துவிடாமல் காப்பாற்ற ஒரு மையத்தைச் சென்னையில் திறக்க ஃபோர்டு ஃபவுண்டேஷன் முடிவெடுத்தபோது, பொறுப்பை ஏற்றுக்கொண்டார் முத்துக்குமாரசாமி.

ஒவ்வொரு நாள் மாலையும் மூன்று நிகழ்ச்சிகள் என்று மார்ச் 5 ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை நடந்த இந்தக் கலைவிழாவில், தமிழகத்தின் பிரபல எழுத்தாளர்கள் அத்தனை பேரையும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் முக்கிய விருந்தினராக அழைத்து, அவர்களையும் கிராமப்புறக் கலைஞர்களையும் கௌரவித்தது மையம்.

நம் தெருக்கூத்துக்கு வந்த கலைஞர்கள் வடஆற்காடு செய்யாறு பகுதி ஆக்கூர்



கிராமத்தினர். பகீரதன் கங்கையைக் கொண்டு வரும் கதை. ஆனால் ஆரம்பத்தில், பாண்ட் - சட்டை இளைஞர்கள் இருவர் மேடையில் வந்து தெருக்கூத்தின் முக்கிய அம்சத்தைச் சுருக்கமாகச் சொன்னது வித்தியாசமாக இருந்தது. இரவு முழுக்க நிகழ்த்தும் இந்த நாடகத்தை, ஒரு மணி நேரத்துக்கு அவர்கள் வழங்கினாலும், அதன் ஜீவன் குறையவில்லை.

''இவர்கள் காலமும் வெளியும் கடக்கின்ற விதம் அற்புதமானது!'' என்று பாராட்டினார் முக்கிய விருந்தினர் பிரபஞ்சன். ''இந்தச் செழுமையான கலையை அழியாமல் பாதுகாக்கும் விதத்தை மனசாரப் பாராட்டினார்.

மணிப்பூர் கலைஞர்கள் வழங்கிய கம்பா - தொய்பி கிராமப்புறக் கதைக்கு அடிப்படையாக இருந்தது அவர்களின் இசையும், நடனமும். பல இடர்களுக்கு நடுவே கம்பாவும் தொய்பியும் காதலித்துக் கைபிடித்தாலும், தொய்பி கடைசியில்



கலைகள்!

கம்பாவைத் தவறாகப் புரிந்து கொண்டு அவனைக் கொன்று விடுகிறாள். நாடகம் சோகத்தில் முடிகிறது. ஆனால் நிகழ்ச்சியின் மென்மையும், நளினமான அலங்காரமும் மனசை வருடுகிற ரகங்கள். மிகப் பொருத்தமாக, எழுத்தாளர் அசோகமித்திரன் இந்நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக அமைந்தார்.



டஜன் கணக்கில் வீடியோ காமிராக்கள் இயங்க, ஸ்டில் காமிராக்காரர்கள் ஓடி ஓடிப் புகைப்படங்கள் எடுத்துத் தள்ள, மியூசியத்தின் பின்புறமுள்ள இறந்தவெளி அரங்கம் ஜேஜே என்று இருந்தது.

தொடர்ந்து கர்நாடகத்தின் யக்ஷகானமும், ஒரிசாவின் மயூர் பங்கும், கேரளத்தின் சவிட்டு நாகமும், ஆந்திரத்தின் சிந்து யக்ஷகானமும், மேற்கு வங்கத்தின் 'பாடா'வும் மகாராஷ்டிரத்தின் சித்திரகதியும், 'தமாஷா'வும், சட்டீஸ்கரின் சந்தைனியுமாகப் பத்து நாட்களுக்கு இந்த விழா இந்திய கிராமங்களை தமிழக தலைநகரில் தற்காலிகமாக உயிர்ப்பித்தது.

- சித்தார்த்

படங்கள்: வெங்கடேஷ்

தந்திர தாடி

கமலஹாசனின் தனி வாழ்வு பற்றி வந்து கொண்டிருக்கும் தகவல்களின் வேகத்தைப் பார்த்தால் அதற்கும் அவர் தாடியோடு காட்சி தருவதற்கும்கூட சம்பந்தம் உண்டு என்று சொல்லிவிடு வார்கள் போலிருக்கிறது.

ஆனால் கமல் மட்டுமல்ல, 'பஞ்ச தந்திரத்'தில் உள்ள பிற நான்கு நாயகர் களும்கூட தாடியோடு வருகிறார்கள். பிரெஞ்சு தாடி! இந்த தாடி அவர்கள் முகங்களுக்கு என்னவொரு வித்தியாசமான பொலிவைத் தருகிறது! ஆனால் விஷ்ணு சர்மாவின் தாடிக்கும் இதற்கும் உள்ளவை வெறும் ஆறு வித்தியாசங்கள் அல்ல!

கன்னத்தில் காயம் என்பதிலிருந்து காதல் தோல்வி வரை, சோம்பேறித்தனத்திலிருந்து தத்துவஞானி லுக் தருகிறது என்பதுவரை தாடிக்குப் பல காரணங்கள். சிதாஞ்சலிக் காரரிலிருந்து அடுக்கு மொழி இயக்குனர் வரை 'தாடியில்லாமல் அவரை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது' என்ற நிலையை ஏற்படுத்திய பலரைப் பார்த்து வருகிறோம். அமைதியிலிருந்து அருவருப்பு வரை பலவித உணர்ச்சிகளைப் பல்வேறு நபர்களின் தாடி' ஏற்படுத்தி வருவது கண்கூடு.

ஒரிஜினல் பஞ்சதந்திரக் கதைகளை எழுதிய விஷ்ணுசர்மா நீண்ட தாடி கொண் டிருந்தார். அவர் ஒரு முனிவர், அரச குரு. அசடுகளாக இருந்த இளவரசர்களுக்குக் கதைகள் மூலமாகவே ஞானத்தை ஊட்டும் முயற்சிதான் பஞ்சதந்திரம்.

நம் நாட்டு ரிஷிகளின் நீண்ட தாடி புராணம் நாம் அறிந்ததே. மீசை வைத்த சிவபெருமானை 'திருவிளையாடலில்' காட்ட முடிந்தது! மீசை வைத்த 'ஜூலியஸ் ஸீஸரை'யும் திரை கண்டிருக்கிறது (ரஜினிக்கு மீசையை எடுக்க மனமில்லை). ஆனால் தாடியில்லாத முனிவர்களை இதுவரை இயக்குனர் ராமநாராயணன் கூடச் சித் திரித்ததில்லை.

முதன் முதலில் ஷேவிங் செய்து கொள் வதை மனிதன் வழக்கமாக்கிக் கொண்டது எப்போது என்ற கேள்விக்குக் குறிப்பான விடை கிடையாது. ஆனால் மிகப் பழைய இனத்தவர்களில் ஒருவரான யூதர்கள் மிக நீளமான தாடிகளை வளர்க்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தப்பட்டனர். இப் போதுகூட பழைமையில் பிடிப்புள்ள யூதர் கள், தங்கள் மத நம்பிக்கையைத் தொடரும் விதமாக தாடியை வளர்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

கிரேக்கர்களுக்குத் தாடி என்றால் தனிப் பிரியம். கிரேக்கக் கடவுளான ஜியஸ் ஒரு நீண்ட தாடியோடுதான் சிற்பங்களில் காட்சியளிக்கிறார். அதுவும் சாக்ரடீஸ், ப்ளேட்டோ போன்ற தத்துவ ஞானிகளுக் கெல்லாம் அறிவுவளர்ச்சியோடு இணைந்து தாடியும் வளர்ச்சி கண்டிருக்கிறது. ஆனால் மன்னன் அலெக்ஸாண்டர் தன் கீழ்ப் பணியாற்றிய ராணுவ வீரர்களுக்கு ஷேவிங்கைக் கட்டாயமாக்கினான். காரணம் போரின்போது இவர்களின் தாடி எதிரிகளால் இழுபட்டுச் சேதம் ஏற்படக் கூடாது என்கிற முன்னெச்சரிக்கை.

இங்கிலாந்தை ஆண்ட மன்னன் எட் டாம் ஹென்றி நாட்டில் உள்ள எல்லா ஆண்களும் குறைந்த தலைமுடியைத்தான் வைத்திருக்க வேண்டும் என்று உத்தர விட்டாலும், தாடி விஷயத்தில் தலையிட வில்லை. 1603ல் முதலாம் ஜேம்ஸ் மன்னன் இங்கிலாந்தின் தலைமையை ஏற்ற பிறகுதான் ஆண்களுக்கு நீண்ட முடி வளர்க்க அனுமதியளிக்கப்பட்டது.

ஒரு காலத்தில் ரோம் நாட்டைச் சேர்ந்த ஆண்கள் மழுமழுவென்ற முகத்துடன் தான் காட்சியளித்தார்கள். பதினாறு மற்றும் பதினேழாம் நூற்றாண்டுகளில் கத்தோலிக மதத்தில் பாதிரிமார்கள் மட்டுமே நீண்ட தாடியை வளர்க்கத் தொடங்கினார்கள்.

பிரெஞ்சு தாடியென்று பொதுமைப் படுத்திவிடக் கூடாது. அதிலும் பலவகைகள் உண்டு.

சிறிதாக, கூர்மையாக அமைந்த தாடியை 'வான்டைக்' என்பார்கள். ஏன் இந்தப் பெயர்? பிரபல ஓவியர் ஆண்டனி வான்

டைக் இப்படி தாடியை ட்ரிம் செய்து ஓர் உதாரண புருஷராக விளங்கியதால்தான்!

முகவாயில் மட்டும் காணப்படும் சின்ன தாடிக்கு 'கோட்' என்று பெயர். வேறொன்றுமில்லை, ஒரு ஆட்டின்



• பஞ்சதந்திரத்தில்

(ஆங்கிலத்தில் 'கோட்') 'தாடி' போல இது காட்சி தருவதுதான் காரணம்! கீழ் உதட்டுக்குச் சற்று வெளிப்புறத்திலிருந்து ஒரு ரிப்பன் போல தொங்கும் தாடி 'இம்பீரியல்' என்று அழைக்கப்படுகிறது. காரணம் சக்கரவர்த்தி நெப்போலியன் இப்படிப் பட்ட தாடியோடுதான் காட்சி தந்தாராம்.

பிரான்ஸின் ராணுவ தளபதி ஆம்ப் ரோஸ் பர்ன்ஸைட் என்பவர் காதுக்குப் பக்கத்திலிருந்தே கன்னத்தின் வழியாக அடர்த்தியாக தாடி தொடங்குமாறு காட்சி யளிக்கவே இந்த ஸ்டைல் 'பர்ன்ஸைட்ஸ்' என்றே அழைக்கப்பட்டு வருகிறது.

தாடியோடு இருப்பது நாகரிக மற்ற செயல் என்று ஒரு காலத்தில் இங்கிலாந்தில் கருதப்பட்டது. பிறகு மீண்டும் தாடிகளுக்குக் கிராக்கி. அதாவது 'மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி' என்பது தாடிக்கும் சேர்த்துப் பொருந்தியது. மன்னன் இரண்டாம் ஹென்ரி தாடி வளர்த்துக் கொள்ளவில்லை. மன்னன் இரண்டாம் ரிச்சர்ட் சின்னதாக ஒரு தாடியை வைத்திருந்தான். மன்னன் மூன்றாம் ஹென்ரிக்கோ நீண்ட தாடி. ஆக மக்களும் தாடியின்மீது கொண்ட பற்றை, ராஜாவுக்குத் தகுந்தமாதிரி மாற்றிக் கொண்டே வந்தனர்.

மகாராணி முதலாம் எலிசபத்தின் ஆட்சியில் ராணுவவீரர்கள், வழக் கறிஞர்கள், வியாபாரிகள் என்ற அனைத்துப் பிரிவினரும் நீளமாக தாடி வளர்த்தனர். ஆனால் மகாராணி ஆன் ஆட்சிக்கு வந்தவுடன், ஆண்கள் அனைவரும் தங்கள் தாடியையும் மீசையையும் துறந்துவிட்டனர். தாடி ஒரு தேவையில்லாத அசிங்கம் என்றாகிப் போனது. சொல்லப் போனால் மூன்றாம் ஜார்ஜ் சிறை செய்யப்பட்டு, சிறையில் அவருக்கு நீண்ட தாடி வளர, தங்கள் மன்னனுக்குச் செய்யப்பட்ட அவமானங்களில் இதுவே மிக மோசமானது என்று கருதினார்கள் அவரது ஆதர வாளர்கள்!

- ஜி.எஸ்.எஸ்.



ரோஜாக் கூட்டம்

காதல், காதலைத் தவிர வேறில்லை என்று சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டாரோ என்னவோ... இரண்டாவது முறையும் தம்மையொரு தரமான இயக்குனர் என்று பதிவு செய்திருக்கிறார் இயக்குனர் சசி.

தேர்ந்தெடுத்துக் கொண்ட கதைக்கு இமேஜ் இல்லாத புதிய ஹீரோதான் வேண்டும் என ரிஸ்க் எடுக்கத் துணிந்த இயக்குனருக்கு முதலில் ஷொட்டு! ஆனால் தமிழ் ரசிகர்களை இந்தமுறை சந்தேகிப்பது போல விவேக்கின் காமெடி டிராக்கையும், மும்தாஜின் ஆட்டத்தையும் திணித்து, அலங்காரம் தேவைப்படாத தமது ரோஜாக் கூட்டத்தின் மீது ஜிகினா துகள்களைத் தூவி விருப்பதற்குக் கையோடு ஒரு கொட்டு.

முக்கோணக் காதல் என்று சொல்லிவிட முடியாதபடி கத்தி மேல் நடந்து கதை சொல்லியிருக்கும் விதம், தேர்ந்த கைப்பதம் என்றால், கதையைத் தூக்கிப் பிடிக்கும் ஸ்ரீகாந்தின் நடிப்பு, அறிமுக நாயகன் என்று நம்பமுடியாத யதார்த்த ரகம்!

பூமிகா நிஜமாகவே ஒரு ரோஜாக் கூட்டம்! மனுஷி, அலட்டிக்கொள்ளாமல் உணர்ச்சிகளை வித விதமாய் வெளிப்படுத்துவது போதாதென்று, ரேஸ் பைக்கெல்லாம் ஓட்டி இளம் ரசிகர்களைக் கிறங்கவைக்கிறார்.

ஐம்பது வயது மிடில் கிளாஸ் அம்மா ராதிகாவுக்கு அரை இஞ்ச் மேக்கப் பூச்சு ரொம்பவே அதிகம் என்றாலும், ''காதலிகிட்டே கெட்டவன்னு பேரெடுத்தாலும் பரவாயில்லே, காதலைச் சொல்விறதுதான்டா நல்லது என்று க்ளைமாக்ஸைத் தூக்கி நிறுத்தும் பாத்திரத்தில் முத்திரை பதிக்கிறார்.

சின்னக் கலைவாணர் என்று சொல்லிக் கொள்ளும் விவேக், நகைச்சுவை என்ற பெயரில் ஓபீசிடி கிண்டல்கள் செய்வது எத்தனை லட்சம் ரசிகர்களைப் புண்படுத்தும் என்பதை யோசிப்பது நல்லது.

பரத்வாஜின் இரைச்சலில்லாத இனிய இசை, வைரமுத்துவின் பட்டை தீட்டிய பாடல் வரிகள், பன்னீர்செல்வத்தின் பனித் துளிப் படப்பிடிப்பு, ஆகிய மூன்று அம்சங்களும் கைகோத்துக் கொண்டதில் பாடல் காட்சிகள் ஒருபடி உயர்ந்து ஒளிக் கவிதைகள் ஆகிவிட்டன. ''ஒட்டுப் போட்ட ஐம்பது ரூபாய் நோட்டுக்குப் பின்னால் கக்கு நூறாகக் கிழிந்த ஓர் இதயமும் இருக்குன்னு எனக்குத் தெரியாமப் போச்சு'' என்பது போன்ற வசனங்கள் நச்! படத்தின் முடிவும் வசனங்களால் கட்டி எழுப்பப் படிருப்பதால் 'நீண்ட கிளைமாக்ஸ்' என்ற உணர்வைத் தருகிறது என்றாலும் உயர் ரக ரோஜா செடிகளைத் தோட்டமாக்கியிருக்கிறார்கள் ரோஜாக்கூட்டத்தில்.

— விஷுவல்தாசன்

• அபவ் ஆவெரஜ்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 330/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 165/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2002 *
Licensed to post without prepayment under PMG's Licence No WPP 37 * Registered as a Newspaper in Srilanka

ARTHRITIS / மூட்டுவலி

Dear Doctor,

What a delight it was to have undergone treatment at the "ADYAR NATURE CURE CENTRE" for my STUBBORN low back pain from which I have been suffering for the past 6 years! My age is 80. I have been doing Yoga-Asanas for the past 65 years and also playing tennis. The treatment given to me gave me un-believable and miraculous relief in such a short period of 4 days. Six-years old malady cured in 4 days! Incredible? BUT IT IS TRUE.

I heartily congratulate the Highly-Innovative Director of the Center, Dr. S. Purushothaman for so thoughtfully drawing up a plan of Treatment - for the invalids and his able assistants for implementing the treatment so efficiently and cheerfully.

I wish the Center All Success.

V. Lakshmi Narasimhan, Rtd., Station Director, All India Radio
'Sri Ram Nivas', 106, P.M. Swamy Colony, Coimbatore - 2.

11/02/2002

1. OSTEO ARTHRITIS
2. RHEUMATOID ARTHRITIS
3. ANKYLOSING SPONDYLITIS
4. GOUT

1. கை, கால்களில் மூட்டு வீக்கமும், வலியும்.
2. கை, கால் விரல் மூட்டுகளில் வீக்கமும் வலியும்.
3. கழுத்து வலி (Cervical Spondylitis)
4. நடுமுதுகின் கீழ்பகுதியில் வலி (Lumbar vertebra and Sacral Joint area)
5. இடுப்பு எலும்பும் (Pelvis Bone) தொடை எலும்பு தலையும் (Femural Head) சேருமிடம்.
6. குதிகால் இணைப்புகளில் வலி.
7. குதிகால்களில் எலும்பு வளர்ந்து நடக்க முடியாமல் வலி. (Calcaneal Spur)

முதலியவை பல ஆண்டுகளாக இருந்தாலும் ஆங்கில மருத்துவருடைய ஆலோசனையின்படி வித்தியாசமான இயற்கை வைத்திய முறையில், பக்கவிளைவுகள் இல்லாமல் நலம்பெற செய்கின்றோம்.

மேலும் நகரங்களில் நாம் சுவாசிக்கும் காற்று மிகவும் மாசுபட்டு இருப்பதால், தினமும் பிராணவாயு (Oxygen) தாப்படுகிறது. சென்னை, பம்பாய், டெல்லி மற்றும் வெளிநாட்டில் இருந்தும், தாங்கமுடியாத மூட்டுவலியுடனும், வீக்கத்துடனும் தசை பிடிப்புடன் நடக்க முடியாமல் சிரமப்பட்ட வர்களும், காலையில் படுக்கையை விட்டு எழுந்திருக்க முடியாமல் சிரமப்பட்டவர்களும், எங்களிடம் நல்ல விதமாக சிகிச்சை பெற்று மகிழ்ச்சியுடன் சென்று இருக்கின்றார்கள். மற்ற விபரங்களுக்கு நேரில் வந்து பார்த்தால்தான் நாங்கள் கொடுக்கும் சிகிச்சையின் தன்மை புரியும்.

அடையார் நேச்சர் கியூர் சென்டர்
ADYAR NATURE CURE CENTER

No. 6, SECOND CROSS STREET, KASTURBHA NAGAR, ADYAR, CHENNAI - 600 020.
Phone:4413399, 4402470. Tele Fax: 044-4916650 (காந்திநகர் பஸ்டெப்போ எதிரில்)

ஆர்த்ரிடிஸ் பற்றியும் - மற்றும் அதற்கு ஏற்ற உணவுப் பழக்கம் பற்றியும் தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் நேரில் வந்து குறிப்பு புத்தகங்களை இலவசமாக பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு: வெளியூரில் இருந்து வருபவர்களுக்கு, குறைந்த செலவில் தங்க, சாதா மற்றும் ஏர்கண்டிஷன் ரூம்கள் வாடகைக்கு எங்கள் ஆஸ்பத்திரியில் கிடைக்கும். இதற்கு முன் பதிவு செய்து கொள்ள வேண்டும். சைவ உணவு வசதி மட்டும் உண்டு. வியாதியஸ்தர்களுக்கு தேவைப்பட்ட மாற்று உணவுகளும் வழங்கப்படும் என்பதையும் அறியவும்.